
கல்கி
KALKI 26.5.91 ரூ. 2.50
நிழலுக்குப்
பின்
நிஜங்கள்
விசு தொடர்
+
முக்கியத்
தொகுதிகள்
மூன்று...

நினைவிருக்கட்டும், வைட்டமின் மற்றும் மினரல் பற்றாக்குறையால் உங்கள் குழந்தை அவதிப்படாமலிருக்க, ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு தேவை.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்களுக்குத் தெரியுமா, சமச்சீராக உள்ள வைட்டமின்களும், மினரல்களும் ஊட்டச்சத்துகளை உறிஞ்ச உதவுகின்றன என்பது? போஷாக்குப் பற்றாக்குறையினால் குழந்தை அவதிப்படாமலிருக்க இது வகை செய்கிறது.

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். இந்த வைட்டமின்களையும் மினரல்களையும், போஷாக்குச் சத்துகள் சமச்சீராக உள்ள உணவின் மூலம் பெறுவதுதான் சிறந்த வழி என்பார். அந்த உணவில், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகளும் சரியான விகிதத்தில் இருக்கவேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும், ஒவ்வொரு நாளும்!

வழக்கமான உணவுகள் மூலம் இந்த எல்லா சத்துக்களையும் தருவது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

ஸெரிலாக். குழந்தைகளுக்கு நான்கு மாதம் முதல் வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போது முதல் தரக்கூடியது, ஊட்டச்சத்துக்களைச் சமச்சீராகக் கொண்ட திட உணவான ஸெரிலாக்.

ஸெரிலாக் ஏ, டி, சி, பி காம்ப்ளெக்ஸ் மற்றும் ஈ வைட்டமின்களால் செறிவூட்டப்பட்டிருக்கிறது. மேலும், இதில் புரோட்டீன், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துக்களும் உள்ளன-அனைத்தும் சரியான விகிதத்தில், குழந்தைகள் மிகவும் விரும்பும் சுவையுடன்!

ஆகவே போஷாக்குச் சத்துகளைச் சமச்சீராகக் கொண்ட ஸெரிலாக் அனுகூலத்தை உங்கள் குழந்தைக்கு அளிக்கத் துவங்குங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் வீட்-ஆப்பிள், வீட்-ஆரஞ்சு, மற்றும் வீட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலங்களை அளியுங்கள்.


பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம்: ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக், போஸ்ட் பேக் நம்பர்-21, புது தில்லி—110019

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு



உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக்.



Mudra D:NES 0019 TAM



தோல்வியின் விளிம்பிலிருந்து 'வெற்றி மகுடம்' வரை...

இந்த முறை அ. தி. மு. க. வுக்காக பல பிரசாரப் பாடல்கள் தயார் செய்யப்பட்டன. அவை தலைவியின் தேர்வுக்காக அனுப்பப்பட்டன. செல்வி ஜெயலலிதா அத்தனை பாடல்களையும் போட்டுக் கேட்டு விட்டு 'வெற்றி மகுடம்' கேசட்டை ரசிக்கிறார். பாராட்டுகிறார் பலமுறை!

யூனிவர்சிட்டி வராந்தாவில் தூக்கம்.

பசிக்குத் தேநீர். குளிக்கக் கடலோரம் என்று இரண்டு தினங்கள் ஓடியாயிற்று. தண்ட பாணிக்கு அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவமானமாய் இருந்தது. துக்கமும் அழுகையும் பொங்கிற்று. வாழ்க்கையின் முதல் முயற்சி, முதல் நம்பிக்கையே தோல்வியா என வேதனை தளும்பி வழிந்தது.

எத்தனை நிம்மதியான தினங்கள்?

தஞ்சாவூர் திருமங்கலக் கோட்டை கீழையூர் கிராமத்தின் பசும் மரங்களின் அமைதி நிழல். பித்தளை குடத்தைக் கவிழ்த்துப் புளியங்கொட்டையால் தட்டித் தாளமிட்டுப் பாட்டு. சதாவும் பாட்டு. அக்கம் பக்கச் சிறுவர்கள். பிறகு பள்ளி, கல்லூரி என உற்சாகத் தூண்டல். கல்லூரி விழாக்களில் கச்சேரி! பாடகன் என்பது மனசுக்குப் பிடித்த கனவாயிற்று.

அப்போதுதான் அவர்கள் தண்ட பாணியை அணுகினார்கள். பதினைந்தாயிரம் ரூபாய் தரத் தயாராய் இருந்தால் சினிமாவில் பாடகனாய் அறிமுகப் படுத்துகிறோம் என்று நம்பிக்கை ஏற் படுத்த.. அப்பாவிடம் பேசி, சத்தியாக் கிரகம், ஒத்துழையாமை இயக்கம் என நடத்தி, கூடவே அம்மாவின் சிபாரிசு.

''தண்டபாணி இந்தா பத்தாயிரம் ரூபாய். நிலம் விற்றுக் கிடைத்த பணம். இது குடும்ப நகைகள். அடகு வச்சு மீதியைச் சமாளிச்சுக்க. இனி நல்லது கெட்டது கடவுள் முடிவு.''

அப்பா விலகினார்.

புதியவர்களுடன் சென்னை வந்து முதல் சில தினங்கள் நட்சத்திர ஹோட்டல். சினிமா ஸ்டுடியோக்கள். மூன்றாம் நாள் அண்ணாசாலையை நெருங்கும் குறுக்குச் சந்தின் மலிவான லாட்ஜ். நாலாம் நாள்...

தண்டபாணி ஊருக்குக் கடிதம் எழுதினான்.

''அன்புள்ள அப்பா, நீங்கள் சந்தேகித்த படியே நடந்து விட்டது. உங்கள் இத்தனை

வருட உழைப்பை, நிலத்தை, நகையை அநியாயமாய் வீணடித்து விட்டேன். அவர்கள் என்னை ஏமாற்றி விட்டார்கள். என்னால் இந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும் போது நான் உயிரோடு இருக்க மாட்டேன். அம்மாவின் பாதங்களுக்கு என் உயர்ந்த முத்தங்களையும், மற்றவர்களுக்கு என் வாழ்க்கையின் கடைசி வணக்கங்களையும் தெரிவியுங்கள். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்.''

தண்டபாணியின் கால்கள் அலையை, அடுத்த அலையை, அதற்கும் அடுத்த அலைகளை விரும்பி நடக்கத் துவங்கின.

''நம்ப கூட பள்ளிக்கூடத்துல ஒண்ணா, படிச்ச முகமா தெரியுதேன்னு பார்த்தேன். உன் நடவடிக்கைகள் வேற சந்தேகத்த ஏற்படுத்திடுச்சி.'' தண்டபாணி குறுக்கிட்டுப் பேச, நண்பன் திசை திருப்பி... ''முட்டாள்தனம்டா!'' என்றான்.

''அடையாறு பாம்பன் சாமி கோவில்ல அர்ச்சகரா இருக்கேன். நினைச்சது கிடைக்கலைன்னா கிடைச்சதை நினைச்சுத் திருப்தி பட்டுக்கணும். வா, என்னோட தங்கிக்க. நீ இருக்கறது சத்தியமா ஊருக்கு எழுதித் தெரிவிக்க மாட்டேன். வேலைக்கு முயற்சி பண்ணு. உனக்கான வாசல் நிச்சயம் திறக்கும்.

வேலை கிடைத்தது. மாதம் நானூறு ரூபாய் சம்பளம். வாடகை, போக்குவரத்து, மிகச் சிக்கனமான சாப்பாடு போக, மாதம் எழுபத்தைந்து ரூபாயைக் கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ள ஒதுக்கியாயிற்று. பிரபல பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் அவர்களின் சகோதரி லலிதாதான் சங்கீத டீச்சர்!

தினங்கள், வாரங்கள், மாதங்கள்.

எதேச்சையாக அந்தச் சாலையைக் கடக்கும் போது வாசலில் தெரிந்த பெயர்ப் பலகை கண்ணில்பட்டது. உத்தேசத் துணிச்சலில் கதவு தட்ட, வெளிவந்தவர் குலதெய்வம் ராஜகோபால்.

''யாருப்பா?''

கைகுவித்தான் தண்டபாணி.

முன்கதைச் சுருக்கம்.

''அடப் பாவமே! உனக்குப் பாடச் சந்தர்ப்பம் வாங்கித் தர்ற அளவு எனக்குச் செல்வாக்கு இருக்கா தெரியலை. ஆனா ஒரு உறுதி தர முடியும். என் பையன்கிட்ட அறிமுகப்படுத்தறேன். அவன் பிரபல இசையமைப்பாளர்கிட்ட உ த வி யா ள ரா இருக்கான். உதவ முடியுமா கேட்கலாம்.''

சம்பத் செல்வம் முதலில் லைட் மியூஸிக் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது மேடைப் பாடகனாய்த் தோன்ற சந்தர்ப்பம் தந்தார். சொற்பமாய்க் கூடுதல் வருமானம். அதைக் கொண்டு திவாகர் மாஸ்டரிடம் மேற்கத்திய சங்கீதம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான் தண்டபாணி.

இசைக்கு வேலை தடையாய் இருந்தது. எனவே ராஜினாமா. மறுபடியும் பசி நாட்கள். உரிமையாய்ச் சாப்பிட சம்பத் செல்வம் அவர்களின் வீடு.

பஸ்ஸின் ஜன்னலோர இருக்கை. 'முதல் மரியாதை' பாடலான 'பூங்காற்று திரும்புமா'வை வேறு வேறு ரூபங்களில் மெலிதாய் ஹம் செய்து பிரயாணம் செய்து கொண்டிருக்கிற தண்டபாணியை, பக்கத்து இருக்கை பயணி வியப்பாய் ஏறிட்டு விட்டு, தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார்.

''என் பேரு நாகபூஷணம். நா ஒரு நாடக நடிகன். நல்லாப் பாடறீங்க தம்பி. உங்களை எனக்குப் புடிச்சிருக்கு. ஆட்சேபணை இல்லைன்னா நாளைக்கு மத்தியானம் எங்க வீட்டுக்குச் சாப்பிட வாங்களேன்.''

நாகபூஷணம் நண்பரானார். நேரம் கிடைக்கையில் அவருடன் மைலாப்பூர்

அடுத்த இதழில்......



* அஸ்வினி நாச்சப்பா - சீரான ஓட்டம் சினிமாவிலும் தொடருமா?

* விற்பனைக் கலை - சவால்கள், சங்கடங்கள்!

ஞானச்சேரி போய்... அங்கே அறிமுக மாணவர் நடிகர் கங்கா, கவிஞர் இதய சந்திரன். தொடர்ந்து பழக்கம். இவரின் ஆர்வத்தை, நிதி நிலைமையைப் புரிந்து கொண்டு... நாகபூஷணம், கங்கா உட்பட ஏழு நண்பர்கள் ஆளுக்குக் கொஞ்சம் தொகை போட்டு, ஒரு ஹார்மோனியம் வாங்கிப் பரிசளித்தார்கள். ''அட்வான்ஸ் வாழ்த்துக்கள் - அன்புடன் ஸரிகமபதநி!''

தண்டபாணி இப்போது அடையாறிலிருந்து சாலிக்கிராமம் வந்தாயிற்று. குருநாதர் சம்பத் செல்வத்திற்கு உதவியாக இசையமைப்பு, ரீரிக்கார்டிங் குறிப்புக்கள் என உடன் சென்று நுணுக்கங்கள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

''நா உயிரோட இருக்கேங்கறதே ஊருக்குத் தெரியாது. எதிர்பாராம ஊர்க்காரர் ஒருத்தர் பார்த்திட்டு அதிர்ச்சியில் உறைஞ்சு போய் நின்னுட்டார். அவர் போய்ச் சொல்லி எல்லோரும் வந்து நேரில பார்த்து அழுது, நா உயிரோடத்தான் இருக்கேன்கறதை நம்பினாங்க.''

''.....''

''என்னோட அறை நண்பர்கள் கவிஞர் இதயசந்திரன், நாகை பொன்னி, பார்த்தசாரதின்னு உதவி இயக்குனர்கள் பட்டாளம். நேரம் கிடைக்கையில் கதை விவாதிப்போம். சூழ்நிலைக்கு ஏற்ப ட்யூன் போட்டு, ஒருத்தர் பாடல் இயற்ற, பாடிப் பார்த்து முழுப் படத்தையும் பேச்சலயே ஓட்டிப் பார்ப்போம்.''

நம்மிடம் புன்னகை.

''எங்கள் அறைக்கு எதேச்சையாக வந்து போன டைரக்டர் கிருஷ்ணகுமார் என் பாடல்களைக் கேட்டுப் பிடித்துப் போக, 'நெஞ்சங்கள் பிரிவதில்லை' - படத்திற்கு இசையமைப்பாளராகப் பதவி உயர்வு.''

''இன்ட்ரஸ்டிங். அப்புறம்?''

''வெற்றி பெற வேண்டும் என்கிற வேகத்துடன் ஆறு பாடல்கள். கேட்டு விட்டு மனம் விட்டுப் பாராட்டியவர் ஜி. கே. வெங்கடேஷ். எம். எஸ். வி. சார் ஆசீர்வாதம் செய்து வாழ்த்தினார். 'பிரமாதம் தலைவா' என்றார் மனோ. சித்ராவும், எஸ். பி. பி. சாரும், 'வித்தியாசமாக இருப்பதாக க் குறிப்பிட்டார்கள். ஜானகியம்மா உடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு பெருமைப்படுத்தினார்கள். மற்றும் பலரிடம் இருந்து எதிர்பாராத பாராட்டுக்கள்.''

நாம் வியப்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

''இந்தப் படப் பாடல்களைக் கேட்டு விட்டுத் தொடர்ந்து 'வெள்ளையம்மா வெள்ளைச்சாமி', ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் பட்டாலியன் எடுக்கும் மற்றொரு படம், முரளி- குஷ்பூ நடிக்கும் படம் என ஐந்து படங்கள் ஒப்பந்தமாகி இருக்கின்றன. தவிர...''

''தவிர..?''

''இதைக் கேட்டு ரசித்த அரசியல்வாதி ஒருவர் தங்கள் கட்சியின் பிரசாரப் பாடல்களை இசையமைத்துத் தர முடியுமா என்று கேட்டுக் கொண்டார். முடிந்ததும் பாராட்டினார்.''

இடைவெளி.

''வாழ்க்கையை எங்கோ ஆரம்பித்தேன். விவசாயியாக இருந்து, பாடகனாக ஆசைப்பட்டு இப்போது இசை அமைப்பாளன். எனக்கெனத் திறந்தது புதுக் கதவு. என் இந்தச் சின்ன வெற்றிகளுக்குக் காரணம் என் நண்பர்கள். குருநாதர் சம்பத் செல்வம். இங்கே இசைஞானி இளையராஜா போன்ற ஜாம்பவான்களுக்கு மத்தியில் பெரிசாய்ச் சாதிக்க முடியுமா என்றில்லாவிட்டாலும், அவர்கள் ஆசியுடன் புதுசாய்ச் சாதிக்க முயற்சி செய்வேன்'' கை குலுக்கினார் தண்டபாணி.

"முட்டாளுக்கே வாக்களியுங்கள்"

அமெரிக்காவில் நியூயார்க் நகர மேயர் பதவிக்குப் போட்டியிட்ட பிரபல நாவலாசிரியர் நார்மன் மெயிலர், 'முட்டாளுக்கு வாக்களியுங்கள்' என்ற கோஷத்தை முன் வைத்தார். ஆனால் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நெல்சன் ராக்பெல்லர் வெற்றி பெற்றார்.

இதைப் பற்றிக் குறிப்பிட்ட நார்மன் மெய்லர், ''தேர்தலில் நான் தோற்றா லும் என் கோஷம் வென்றது'' என்று கூறினார்!

- வி. மீனாட்சி

* * * * *

தமிழக சாலைகளில் ஜெயலலிதாவின் பிரசார வேன் முன்னும் பின்னும் கார்கள் தொடர சீறுகிறது. அதன் முகப்பில் 'வெற்றி மகுடம்' பாடல்கள் உரத்து ஒலிக்கின்றன. அதன் இசை அமைப்பாளர் தண்டபாணி. அவருக்கு நண்பர்கள் சூட்டிய புதுப் பெயர்: சிவகுமார்!

– சுந்தர்ஜி.

புகைப்படம்: ராதா கிருஷ்ணன்.

வேட்புமனு முதல் வெற்றி-தோல்வி வரை



✱ ரகுபதி

தேர்தலில் போட்டியிட வேண்டுமானால் என்னென்ன செய்ய வேண்டும்? வழிமுறைகள் என்ன? தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி எம். ரகுபதி கூறுகிறார்...

யார் வேட்பாளராகலாம்?

முதலில் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் ஒரு வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். சரியான மனநிலை இருக்க வேண்டும். (தோற்ற பிறகு பாயைப் பிறாண்டுகிற நிலை வந்தால் பரவாயில்லை!) கடன்பட்டு, போண்டியாகி, இன்ஸால்வன்ஸி கொடுத்தவர் போட்டியிட முடியாது. அரசு ஊழியரா யிருந்தால் ராஜிநாமா செய்து, அதை அரசு ஏற்றுக் கொண்ட பின்னரே போட்டியிட லாம். வோட்டுப் போடப் பதினெட்டு வயது போதுமென்றாலும், வேட்பாளராக நிற்க இருபத்தைந்து வயது ஆகியிருக்க வேண்டும்.

வேட்பு மனுவைக் கொடுக்கும் போது, வாக்காளர் பட்டியலில் தம் பெயர் இருப்பதை ஆதாரபூர்வ நகலுடன் தாக்கல் செய்ய வேண்டும். உங்கள் பெயரை முன்மொழிபவர், நீங்கள் போட்டியிடும் தொகுதியில் வாக்காளராய் இருக்க வேண்டும்.

மனுவை நீங்களோ, உங்கள் பெயரை முன்மொழிபவரோதான் தாக்கல் செய்ய முடியும். அதிகபட்சம் நான்கு வேட்பு மனுக்கள் கொடுக்கலாம். மூன்றில், ஒவ்வொன்றில் ஏதேனும் தவறு இருந்து நிராகரிக்கப்பட்டாலும் கூட, நாலாவது மனுவாவது தேறும் அல்லவா? அதற்காகத்தான். (நாலும் தப்பும் தவறுமாக இருந்தால், ஆரம்பமே அம்பேல்!)

ஆடி அசைந்துகொண்டு ஐந்து மணிக்குப் போனால், வேட்பு மனு வாங்க ஆள் இருக்க மாட்டார். காலை பதினோரு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரைதான் மனு தாக்கல் செய்யலாம். ராகு காலம், எம கண்டம், எட்செட்ரா எல்லாம் பார்க்கிறதென்றால் அந்தக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டியதுதான்.

யாரிடம் தாக்கல் செய்ய வேண்டும்?

ஒவ்வொரு சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஒரு தேர்தல் அதிகாரி இருப்பார். தேர்தல் அதிகாரி இல்லாத பட்சத்தில், தலையைச் சொறிந்து கொண்டு திரும்பி வந்துவிட வேண்டாம். உதவித் தேர்தல் அதிகாரி இருப்பார். அவரிடம் தாக்கல் செய்யலாம்.

அது என்ன 'ஸ்க்ரூடினி'?

வேட்பு மனுக்கள் சரியாகவும், முறையாகவும் இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்வதுதான் 'ஸ்க்ரூடினி'. அந்தச் சமயத்தில் போட்டி வேட்பாளரோ, அவரது ஏஜெண்டுகளோ, உங்கள் பெயரை முன்மொழிந்தவரோ, உங்களால் அதிகாரம் கொடுக்கப்பட்டவர் யாரேனுமோ அங்கே இருக்கலாம். எதற்கு என்றால், போட்டி வேட்பாளர் வயது, தகுதி பற்றி ஆட்சேபணை ஏதேனும் எழுப்பினால் அப்போதே பதில் சொல்ல. (ஒரு வேட்பாளர் வண்டவாளம் இன்னொரு வேட்பாளருக்குத் தானே தெரியும்!) இதற்கு இரண்டாவது நாள், மனம் மாறி விட்டால் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விடலாம்.

டெபாசிட் தொகை?

சட்ட சபைக்கு நின்றால் 250 ரூபாய்; நாடாளுமன்றத்துக்கு என்றால் 500 ரூபாய். இதை வேட்பு மனு தாக்கல் செய்யும் போது ரொக்கமாகவே செலுத்தலாம். அல்லது ரிசர்வ் வங்கி, டிரஷரி இவற்றில் செலுத்தி, அதற்கான சலானை இணைத்துவிடலாம். தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் என்றால் இதில் பாதித் தொகை செலுத்தினால் போதும்.

டெபாசிட் எப்போது பறிபோகும் அல்லது திரும்பக் கிடைக்கும்?

செல்லுபடியாகும் மொத்த வோட்டுக்களில் ஆறில் ஒரு பங்குக்கு மேல் வாக்குகள் பெற்றால், திரும்பக் கிடைக்கும். இதற்குக் குறைந்தால் டெபாசிட் பறி போய்விடும்!

வேட்பாளருக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கும்?

மாருதி கார் அலாட்மென்ட் எளிதில் கிடைத்து விடும், நியூஸ் பிரிண்ட் கோட்டா கிடைத்துவிடும் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, வேட்பாளராக நிற்க வேண்டாம். இலவசமாகக் கிடைப்பது, வாக்குச் சாவடிப் பட்டியல் மூன்று பிரதிகள் மட்டுமே. வாக்காளர் பட்டியல் 50 சதவிகித சலுகை விலையில் கிடைக்கும். ஒரு தொலைபேசி இணைப்பு தாற்காலிகமாக, முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். (இதற்கும் விண்ணப்பித்து, உரிய பணம் செலுத்த வேண்டும்.) தேர்தல் முடிந்தவுடன் அந்த இணைப்பைத் திரும்ப எடுத்துக் கொண்டுவிடுவார்கள்!

எத்தனை ஏஜெண்டுகளை ஒரு வாக்குச் சாவடியில் அமர்த்தலாம்?

மூன்று ஏஜெண்டுகளை நியமிக்கலாம். ஆனால் மூன்று பேரும் ஒரே சமயத்தில் சாவடிக்குள் இருக்க முடியாது. ஒருவர் மட்டுமே இருக்கலாம். அவர் வெளியே போக நேர்ந்தால், அமர இன்னொருவர். ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் தரப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டுகளின் ஆரம்ப எண்ணையும், கடைசி எண்ணையும் முதலில் இவர்களுக்கு அறிவித்துவிடுவார் வாக்குச் சாவடியின் தலைமை அதிகாரி. வாக்குப் பெட்டிகளை மூடி, சீல் வைத்து, போலீஸ் பந்தோபஸ்துடன் லாரியில் ஏற்றுவது வரை இந்த வாக்குச் சாவடி தலைமை அதிகாரியின் பொறுப்பு. ஒவ்வொரு வாக்குப் பெட்டிக்கும் தாள் முத்திரைக் காகிதம் உண்டு. வாக்குப் பெட்டியைத் திறக்கும் போது, இது கிழிபட்டுவிடும்.

வாக்குச்சீட்டுப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் போது?

உங்கள் ஏஜெண்டுகளோ, தொண்டர்களோ, பின் தொடர்ந்து செல்லலாம். பாதுகாப்பு அறைகளில் வைத்துப் பூட்டும் போது, உங்கள் ஏஜெண்டுகள் அல்லது தொண்டர்கள் கூட ஸீல் வைக்கலாம்!

வோட்டுக்கள் எண்ணும் போது...

ஒவ்வொரு கவுன்ட்டிங் டேபிளுக்கும் ஓர் ஏஜெண்ட் வைத்துக் கொள்ளலாம்.

யார் முடிவுகளை வெளியிடுவார்?

தொகுதியின் தேர்தல் அதிகாரியான ரிடர்னிங் ஆபீசர்தான் முடிவுகளை அறிவிப்பார். எல்லா வாக்குகளும் எண்ணி முடிக்கப்பட்டு, இன்னின்னாருக்கு இத்தனை இத்தனை வோட்டுகள் என்று சொல்லுமுன், ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் பயங்கரமான சஸ்பென்ஸ் நிலவும். அந்த ஒரு நிமிட இரண்டு நிமிட இடைவெளிக்குப் பிறகே வெற்றி பெற்றவரின் பெயரை அறிவிப்பார். இடைவெளி, வேட்பாளர் எவரேனும் கடைசி நிமிட ஆட்சேபம் எழுப்ப.

அப்புறம்?

வெற்றி பெற்றவருக்கு, தொகுதியின் தேர்தல் அதிகாரி சான்றிதழ் தருவார். அப்புறம் அவர் பெயர் மாநில கெஜட்டில் வெளியாகும். நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரை இந்திய அரசாங்க கெஜட்டில் பெயர் வெளியாகும்.

வெற்றி வாகை சூட முடியவில்லை. ஆனால் வெற்றி பெற்றவரின் வெற்றியில் சந்தேகம் இருக்கிறது என்றால், 45 நாட்களுக்குள் மறுபரிசீலனை மனுவைச் சமர்ப்பித்து விட வேண்டும்!

பேட்டி: சாருகேசி
படம்: ரமணன்

ஆசிரியர் பக்கம்

தீர்க்க தரிசனம்!


பக்கம் பக்கமாக நாளிதழ்களில் போலித்தனமான விளம்பரங்கள்; பெட்டி பெட்டியாக விநியோகமாகும் பணம்; அடுக்கடுக்காக அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள்; கூச்ச நாச்சமின்றிப் பரிமாறிக் கொள்ளப்படும் ஏச்சுக்கள் - இது தேர்தல் களம்.

விலைவாசி உயர்வு; வேலை வாய்ப்பின்மை; தகுதிக்கு மதிப்பில்லாமை; குவியும் அயல்நாட்டுக் கடன்கள்; வறுமை; நோய்; சுகாதாரமின்மை; படிப்பறிவில்லாமை - இது மக்கள் களம்.

இரண்டையும் நோக்க, ஒரு தீர்க்கதரிசி இன்றைக்கு 71 ஆண்டுகளுக்கு முன் எழுதியதுதான் நினைவு வருகிறது. அது பின்வருமாறு:

''சுதந்திரம் வந்தால் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும் என்று எண்ண வேண்டாம். ம க் க ளு க் கு அதிக சந்தோஷமோ சிறப்பான ஆட்சியோ அமைந்து விடாது. தேர்தல்களும் அதையொட்டிய ஊழல்களும், அநீதிகளும், செல்வத்தினால் உண்டாகும் கொடுங்கோன்மையும், திறமையற்ற நிர்வாகமும் நமக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு நமது வாழ்க்கையை நரகமாக்கும். 'ஆங்கிலேயர் ஆட்சியே தேவலாம்' என்று மக்கள் பேசிக் கொள்வார்கள். ஒரே ஒரு லாபம்தான் கிட்டும். அது, 'நாம் இனி அடிமைகள் இல்லை; எனவே அவமானம் இல்லை' என்ற ஒரு லாபம்தான்!''

நாம் சுதந்திரம் பெறுவதற்கு 27 ஆண்டுகளுக்கு முன் அவர் கூறியது, நாம் சுதந்திரம் பெற்று 44 ஆண்டுகளுக்குப் பிறகும் அப்படியே உண்மையாக இருக்கிறது. இப்படி நிலைமையைத் துல்லியமாகக் கணித்த அந்தத் தீர்க்கதரிசி... வேறு யார்? ராஜாஜிதான்! 1920 ல் அவர் சிறைப்பட்டிருந்த போது தினந்தோறும் டயரி எழுதினார். அந்த டயரியில்தான் ஒருநாள் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.



ராஜாஜியின் சிறப்பு, பிரச்னையைச் சரியாக அளந்து விடுவது மட்டுமல்ல; எந்தப் பிரச்னையைக் குறித்து எழுதினாலும் பேசினாலும் தீர்வுக்கு என்ன வழி என்று கூறாமல் விட மாட்டார். இந்த ஜெயில் டயரியிலும் பரிகாரம் என்ன என்று எழுதியிருக்கிறார்:

''நாட்டில் ஒருவர் பாக்கியில்லாமல் அனைவருக்கும் கல்வி வசதி என்ற ஒரு விஷயத்தில்தான் நாம் நம்பிக்கை வைக்க முடியும். அந்தக் கல்வியோடு, நல்லொழுக்கமும், இறைவனிடம் பயபக்தியும், மற்ற அனைவரிடமும் அன்பு செலுத்தவும், போதிக்க வேண்டும். இதில் நாம் வெற்றி பெற்றால்தான் சுயராஜ்யம் சந்தோஷம் தருவதாக இருக்கும்.''


ஆனால் நடப்பது என்ன? நாட்டில் படிப்பறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதேயொழியக் குறையவில்லை. உலக வங்கியே எச்சரிக்கிறது. கேட்பாரில்லை. வெறும் படிப்பறிவு போதாது. அனைவருக்கும் தன்னம்பிக்கையை வளர்க்கிற, வாழ்க்கைக்குப் பயன்படுகிற, தரமான கல்வி புகட்டப்பட வேண்டும். இதில் நாம் வெற்றி பெற்றுவிட்டால், கூடவே வேறு பல பிரச்னைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும். சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு, மரங்கள் வளர்ப்பது, ஜாதிமத வேற்றுமைகளை ஒழித்தல், ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல், சுகாதாரம், நோய்த்தடுப்பு போன்ற பலவற்றுக்கு இன்று செலவாகும் கோடிக்கணக்கான ரூபாய்களை மிச்சம் பிடிக்கலாம். நாடு வளம் பெற வேறு விதங்களில் செலவழிக்கலாம். கல்வியால் பண்பாடு பெருக, குற்றங்கள் குறையும். ஏழை, பணக்காரன் என்ற மனப்பான்மைகள் மறையும்.

நம் தலைவர்களுக்கு இதெல்லாம் தெரியும். ஆனால் செய்ய மாட்டார்கள். காரணம் என்ன? சுயநலம்தான்! மக்கள் படிப்பறிவு அற்றவர்களாக, ஏழ்மையில் உழல்பவர்களாக இருப்பதே நமது தலைவர்களுக்கு ஆதாயம்! புத்திசாலி மக்கள் என்றால் இன்றையத் தலைவர்களைத் தூக்கி எறிந்து விடுவார்களே!

ஒரு 'டிரெய்லர்' காட்சி:

ஒரு கிழவி உள்ளே நுழைந்தாள். ''என்னடி ராஜம், பெற்றுப் பிழைச்சியா? பிள்ளைதானே?'' என்றாள். அப்போது வந்த ஒரு வாட்ட சாட்டமான ஆளிடம், ''என்னடா ராமசாமி, பையன்தான்! உனக்கு வரவுதான்; செலவு இல்லை!'' என்றாள்.

திடீரென அந்தக் கிழவி நான் சற்றும் எதிர்பாராத வகையில் குனிந்து, எனக்கு முத்தம் கொடுக்க வந்தாள். முத்தம் என்பது எவ்வளவு இனிமையானது! அதை முதன் முதலில் ஒரு கிழவியா கொடுப்பது? எனக்கு என்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியவில்லை. இருந்த ஒரே ஆயுதத்தால் ஆத்திரம் தீர அவள் முகத்தில் தண்ணீர் அடித்தேன்! கிழவி முகத்தைச் சுளித்து மேலே தூக்க, நான் ''களுக்''கென்று சிரித்தேன். யாருக்கு யார் முத்தம் கொடுக்கிறது?



விசு

சிரிக்கச் சிரிக்க எழுதும் வாழ்க்கை அனுபவங்கள்

நிழலுக்குப் பின் நிஜங்கள்

அடுத்த இதழில் ஆரம்பம்

அட்டைப்படம்: உத்ரா

கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்கு தேடும் தலைவர்கள்!

● நாகேஸ்வரராவின் பேட்டியை மிகவும் ரசித்துப் படித்தோம். 'ஆர்ட் படம்தான் உயர்வானது' என்று மேதாவித்தனமாக நினைத்துக் கொண்டிருக்கும் பலருக்குத் தெளிவு ஏற்படுத்தும் விதமாக 'எல்லோருக்கும் பொதுவான சினிமாதான் உயர்ந்த சினிமா' என்று காரண, காரியங்களோடு அவர் விளக்கிய விதம் அட்டகாசம்!

குடந்தை (கும்பகோணம்), எஸ். மங்களம்.

● அட்டைப் படத்தின் கம்பீரத்திற்கேற்ப நாகேஸ்வரராவின் பேட்டியும் கம்பீரமாக அமைந்திருந்தது. கல்கியின் தரத்திற்கு மற்று மோர் மைல் கல். பாராட்டுக்கள்.

திருப்பத்தூர், சின்னி ராஜன்.

● ''பால்கே'' விருது பெற்ற நாகேஸ்வரராவின் எளிமையும், நடந்து வந்த முட்பாதையைப் பற்றி மறந்து விடாமல், முள்ளைச் சுத்தப்படுத்தி, முள்பாதைதான் கதி என்ற நிர்ப்பந்தத்திற்குள்ளானவர்களுக்குத் தன்னால் இயன்ற நல் உதவிகளைச் செய்யும் பாங்கும்..... அவருடைய தொண்டுள்ளத்திற்கு மிகவும் பெருமைப்படக்கூடிய விருது கிடைத்திருப்பது பொருத்தம்தான்.

சென்னை - 45, ஏ. ஜும்பர் காதர்.

● இந்த வாரக் கல்கி இதழில் 'கற்பூர முல்லை', 'சாந்தி எனது சாந்தி' பட விமர்சனங்கள் சூப்பர்! உள்ளதை உள்ள வாரே கூறியுள்ளீர்கள், பாராட்டுக்கள்!

தி.வெ. நல்லூர், எஸ். தமிழன்பன்.

● இவளால் என்ன லாபம்? 'ஜென்மம்' என்ற இரு சிறுகதைகளும் இல்லாத வற்றுக்காக ஏங்கும் மனித மனங்களைச் செல்லமாகக் கோபித்துக் கொண்டது நன்றாய் இருந்ததுங்க!

தஞ்சாவூர், ஏ.ஆர். லலிதா.

● ஆர். எம். வீரப்பனுக்கு இனிப்பான செய்தியைச் சொல்லி இருக்கிறீர்கள். வேண்டுமானால் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் முடியும் வரை அவரைக் கருவேப்பிலையாக வைத்துக் கொண்டு பிறகு காணாமல் அடித்து விடு வார் ஜெயலலிதா. ஜெ.யின் செயல்கள் அநுமானங்களுக்கு அப்பாற்பட்டவை. எஸ்.டி.எஸ்ஸைத் தஞ்சையில் பலி கடா ஆக்கிவிட்டார். பல தலைவர்கள் கடப்பாரையை விழுங்கி விட்டு, சுக்கு கஷாயம் குடித்தது போல் குழம்பி இருக்கிறார்கள்.

தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

● எழுத்தில் மாற்றம், விமர்சனத்தில் மாற்றம் என்று 'பளீர்' மாற்றம் செய்து வாசகர்களின் அதிக வாசுகுகளைப் பெற விரும்பும் 'கல்கி'யின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

கும்பகோணம் - 1, எஸ்.வி. ரவிகணேஷ்.

● புதிய மெருகில், அழகிய அச்சில், பொலிவுடன் மின்னிய கல்கியை, பஸ்கள் ஓடாத சமயத்திலும் தாமதம் ஏற்படுத் தாமல், முன்கூட்டியே அனுப்பிவைத்து, எங்கள் கைகளில் தவழவிட்ட உம்மை எப்படிப் பாராட்டுவதென்றே தெரிய வில்லை!

நெய்வேலி - 3, ப. உத்தண்டராமன்.

● நாட்டை உயர்த்த 'உட்கட்சி ஜனநாயகம் தேவை' என்கிற உன்னதமான கருத்தை வலியுறுத்திய இந்த வாரத்துத் தலையங்கத்தை வரவேற்கிறேன் பாராட்டு கிறேன்.

பெங்களூர், ப. மூர்த்தி.

● ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சிக்கும்எதிர்க் கட்சிக்கும் சம அந்தஸ்து இருப்பதைத் தலையங்கத்தில் சுட்டிக் காட்டி விட்டீர்கள். ஆனால், நமது நாட்டில் ஏதேனும் ஒரு கட்சி ஆட்சிக்கு வந்து விட்டால், தனக்குப் பிடிக்காத கட்சிக்கு எதிர்க் கட்சி அந்தஸ்து கிடைப்பதைக் கூட விரும்புவதில்லை! எதிர்க் கட்சித் தலைவ ராகச் சிலர் வருவதைக் கூட ஆளும் கட்சித் தலைவர்களில் சிலர் வெறுக்கிறார்களே!

வெள்ளகால், இரா. கந்தையா.

● கவிசிவம் அவர்களின் ''நல்ல வண்ணம் வாழலாம்'' என்ற தொடரை விடாமல் படித்து வருகிறேன். நமக்கு மிகவும் வேண்டியவரொருவர் மிகவும் இதமான குரலில் மனத்திற்கு இதமாகச் சொல்வதைக் கேட்பது போலிருக்கிறது அத் தொடர்.

பெங்களூர் - 40, சித்ரா கஸ்தூரி.

● சொந்த ஊர் சொர்க்கம் தலைப்பிலான கட்டுரைகளைப் படித்தபோது, அந்தந்த ஊர்களிலேயே இருந்து இயற்கை எழிலை ரசித்தது போன்ற பிரமிப்பு ஏற்பட்டது.

விசாலூர், ஜி.ஜி. கிருஷ்ணன்.

● 'குழப்பத்திலிருக்கும் தில்லி வாலாக்கள்' என்ற கட்டுரையில், நாட்டுப் பற்றை விட, நாற்காலி பற்று அதிகம் கொண்டு அலைந்து திரியும் அரசியல் கட்சிகளையும், அதன் தலைவர்களின் போக்கையும், வெளிப்படுத்திய விதம் மிக நேர்த்தி.

கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

● சசிகலா நடராஜன் கூட ஒன்பது எழுத்துதானே! மிஸ்டர் தில்லப்பா கவனிக்கவில்லையா?!!

ஆம்பூர், எம். பரந்தாமன்.

வட்ட மேஜை






உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்®

உங்களுக்குள் இன்னொரு புதிய உயிர், உங்கள குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கிய நேரத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும், சிசுவின் வளர்ச்சிக்கும் போதுமான கூடுதல் ஊட்டச்சத்துக்கள் தேவை.

காம்ப்ளான்–விட்டாமில்க் உங்களுக்கும், பிறக்கப்போகும் உங்கள் குழந்தைக்கும், தேவையான ஊட்டச்சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது. இதில் ஃபாலிக் ஆஸிட், பால் புரதம் (22.2 கிராம்), வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச் சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம், தேவையான அளவில் அடங்கியுள்ளது.



தினமும் 2 கப்புகள்

ரெகுலர் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/P/91/R-TAM

கல்கி
1991 மே 26
மலர்: 49 இதழ்: 43
பிரஜோத்பத்தி வைகாசி 12


முன்னால் பார்த்தால் குதிரை ; பின்னால் பார்த்தால் கழுதை !


இந்த இதழ் நேயர்களின் கரங்களை அலங்கரிக்கும் போது பகுதி அளவில் தேர்தல் முடிந்திருக்கும். சில மாநிலங்களில் வோட்டுப் போட மக்கள் கியூவில் நின்று கொண்டிருப்பார்கள். தமிழகத்தில் பரபரப்பான பிரசாரம் உச்சகட்டத்தை அடைந்து, 'இதோ முடியப் போகிறது' என்ற நிலை.

கடந்த சில தேர்தல்களின் போது மக்கள் எப்படி வாக்களித்தால் நாட்டுக்கு நல்லது என்று உறுதியாகக் கூறக் கூடிய சூழல் இருந்தது. இம்முறை அப்படி இல்லை. காரணம் ஒவ்வொரு கட்சியும் முன்னால் பார்த்தால் குதிரையாகத் தோன்றி, பின்னால் வந்தால் கழுதையாக உதைக்கிறது!

'மற்ற கட்சிகளுக்கு வாய்ப்பளித்து ஏமாந்தீர்கள்; இந்த முறை பாரதிய ஜனதாவுக்கு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள்' என்ற பி. ஜே. பி. கோஷம் நியாயமானது. அக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளிலும் வேறு பல அம்சங்களிலும் நமக்கு உடன்பாடு உண்டு. ஆனால் அவர்களுடைய தீவிர மதச் சார்புப் போக்கு ஆபத்தானது. அதுவே நம்மைத் தயங்கச் செய்கிறது.

பப்ரி மஸ்ஜித் பற்றிய நடுவர் குழுவின் ஆய்வு அறிக்கை ஒன்று சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. அது, 'மசூதி உள்ள இடத்தில் முன்பு ராமர் கோயில் இருந்ததே இல்லை; அதை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டது என்று கூறுவதற்கு ஆதாரமே இல்லை' என உறுதியாகக் கூறுகிறது. 'அடாடா, இல்லாத கோயிலுக்கா இத்தனை ஆர்ப் பாட்டம்' என்று நாம் வேதனைப்படுகிறோம், இந்த நடுவர் குழு அறிக்கையை நாளை வி. எச். பி. போன்றவை நிராகரித்து விடக்கூடும். வேறு ஆதாரங்களைக் காட்டவும் கூடும். என்றாலும் மசூதியை இடிப்பது அல்லது பெயர்ப்பது எல்லாம் தேவையற்றது; மத மாச்சரியங்களை வளர்ப்பது; ஒருமைப்பாட்டைக் குலைப்பது என்பதாகவே நமக்குத் தோன்றுகிறது.





லஞ்ச ஊழல் காரணமாகவே பதவி இழந்த காங்கிரஸ், இந்தத் தேர்தல் பிரசாரத்தின் போது அது பற்றிப் பேசவேயில்லை என்றாலும் அது ஒரு பாடம் கற்றுக் கொண்டிருப்பதாகவே கருதலாம். ராஜீவ் பிரசாரத்தின் போது அடக்கமாகத் தெரிந்தார். மக்களில் ஒருவராகக் காணப்பட்டார். இடஒதுக்கீடு விஷயத்திலும்; சுதந்திரப் பொருளாதாரம், தொழில்; சுதந்திரமான டி. வி. ரேடியோ முதலிய அம்சங்களிலும் சிந்தனைத் தெளிவு காணப்பட்டது. ''நிலையான ஆட்சி'' என்ற காங்கிரஸின் கோஷம், பாக்கில் பயின்ற காஷ்மீர் போராளிகளின் ஊடுருவல் காரணமாகக் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. என்றாலும் பிரும்மாண்ட ஊழல்களின்கறை முற்றிலும் நீங்காததால் ''காங்கிரஸுக்கு வாக்களியுங்கள்'' என்று எழுதவோ, கூறவோ கூசுகிறது.

ஜனதா தளம் - தேசிய முன்னணி - உட்கட்சிப் பூசல்களால் உடைந்து நமது எதிர் பார்ப்புக்களை நாசமாக்கிய கட்சி. இன்று யாருடைய வோட்டுக்களைப் பிரித்து, யார் ஆட்சிக்கு வர உதவப் போகிறது என்ற நிலைக்குத் தாழ்ந்து போயிற்று.

சமாஜவாடி ஜனதா பற்றியோ கூறவே வேண்டாம். சந்திரசேகர் கட்சியைக் கலைத்து விட்டுச் சன்னியாசம் வாங்கிக் கொள்வதே மேல்!

வேட்பாளர்களைத் தனித்தனியே எடை போட்டு வோட்டுப் போடுவது சாலச் சிறந்ததுதான். ஆனால் அதற்குரிய அறிவாற்றலை நமது மக்கள் பெற்றிருக்கிறார்களா? அல்லது தனித்தனி வேட்பாளர்களின் தகுதிகள்தாம் நமக்கு முற்றிலும் தெரியவருகிறதா? இரண்டும் இல்லை!

ஆக மொத்தம், இன்று நமக்கு இருப்பதெல்லாம் ஒரே ஒரு நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்புத்தான். காங்கிரஸோ, பி. ஜே. பி. யோ, எது ஆட்சிக்கு வந்தாலும் நிலையான அரசு அமைக்கும் அளவுக்கு 50 - 52 சதம் இடங்களை நாடாளுமன்றத்தில் பெற வேண்டும். ஆனால் அபரிமித மெஜாரிடி கூடாது. அது மீண்டும் ஆணவத்துக்கே வழிவகுக்கும். கிட்டத்தட்ட சரி சமம் என்றால் எதிர்க்கட்சிக்கு, 'நாளை நாமும் ஆட்சிக்கு வர வாய்ப்பிருக்கிறது' என்ற எண்ணம் ஏற்படும். எனவே, விழிப்புடன் செயலாற்றி, ஆட்சியில் இருப்போரின் குற்றம் குறைகளை அம்பலப்படுத்தி, கண்டித்து, மக்களின் கவனத்தைக் கவர முயலும். ஆட்சியில் இருப்போரும் பயந்து செயல்படுவார்கள். இத்தகைய சமபல ஜனநாயகமே நாட்டுக்கு நல்லது.

தமிழகத்திலும் இத்தகைய நிலைதான் லட்சிய ஜனநாயகமாக இருக்கக்கூடும். இருதரப்பினரும் தேர்தல் சர்ச்சைகளையும் துவேஷங்களையும் மறந்து, ஒத்துழைக்க வேண்டிய சமயம் ஒத்துழைத்தும், எதிர்க்க வேண்டிய தருணத்தில் எதிர்த்தும் சிறப்பாகப் பணியாற்றி, மக்களுக்கு நல்வாழ்வு கிட்ட உதவட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

உள் மனிதர்கள்

அபர்ணா நாயுடு

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. பருமனான அந்த மரத்தின் பின்னேயிருந்து தலையை மட்டும் வெளிப்படுத்தி, பார்வையைக் கூர்மையாக்கினான் குணா.

அதே வரிசையில் நாலு கட்டிடம் தாண்டி அந்த அலுவலகம் இருந்தது. அதன் காம்பவுண்டு சுவரின் கம்பிக் கதவுகள் சாத்தப்பட்டு, பூட்டப்பட்டு, அதனருகில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்த காவலாளி தெரிந்தான்.

பார்வையைத் திருப்பினான் குணா.

எதிர் வரிசையில் இருந்த டீக்கடையை மூடுவதற்கான ஆயத்தங்கள் தெரிந்தன. இரவு ஆட்டம் முடிந்து, பார்த்த சினிமாவைப் பற்றிய விமர்சனப் பேச்சுக்களுடன் சிறு சிறு குழுவாக ஆணும் பெண்ணுமாக மக்கள் கூட்டம் கடந்து சென்று மறைந்து அரைமணி நேரம் ஆனவுடன் அந்த ஏற்பாடுகள் தொடங்கும்.

கடந்த ஒரு வாரமாக ஒவ்வொரு இரவும் அந்த மரத்தின் பின்னே ஒளிந்து நின்று கவனித்து இதைத் தெரிந்து கொண்டிருந்தான் குணா.

ஆயிற்று. இன்னும் சில நொடிகளில், கடை மூடுவதற்குள் ஒரு முறை டீ குடித்து விட்டு வந்து விடுவதற்காக அந்தக் காவலாளி இருக்கையிலிருந்து எழுந்து சாலையின் குறுக்கே நடந்து செல்வான். நிதானமாக உறிஞ்சிக் குடித்து விட்டு, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டு, சுவாரஸ்யமாக இழுத்துப் புகையை வெளியேற்றியவாறு திரும்பி வந்து தன் இருக்கையில் அ ம ர் ந் து கொள்வான். அதற்கு அவன் எடுத்துக் கொள்ளும் நேரம் பத்து நிமிடங்கள்.

இதையும் கடந்த ஒரு வாரத்தில் கவனித்துத் தெரிந்து கொண்டிருந்தான் குணா.

அந்தப் பத்து நிமிடங்கள்தான் அவனுக்குக் கிடைக்கும் நேரம். அதற்குள் அவன் அந்த அலுவலகச் சுவர் ஏறிக் குதித்து, உள்ளே விரைந்து ஓடி, பிரதான கதவின் பூட்டை நெம்பித் திறந்து, கட்டிடத்தின் உள்ளே புகுந்து, பீரோவை உடைத்து, உள்ளே இருக்கும் ரூபாய்க் கட்டுகளை அள்ளித் தன் ப்ரீஃப்கேஸினுள் அடைத்துக் கொண்டு வெளியே வந்து விட வேண்டும்.

முடியுமா? முடியும். முடிய வேண்டும்.

அவன் சார்ந்திருந்த அந்தப் போராளி இயக்கத்தினர் எதையும் திட்டமிட்டுச் செய்தனர். தீவிரமாகக் கவனித்து, காலம் நேரம் கணக்கிட்டு, வாய்ப்புக்களை மதிப்பிட்டுச் செயல்பட்டு வந்தனர். எனவே அவனால் அதை நிச்சயமாகச் செய்து விட முடியும்.

அதன் பின்?

அங்கேதான் அவர்களுடைய திட்டத்திற்கும் அவன் செய்திருந்த முடிவிற்கும் இடையே பெருத்த வேறுபாடு இருந்தது.

சட்டெனச் சிந்தனைகள் அறுந்தன.

அதோ... அந்தக் காவலாளி இருக்கையை விட்டு எழுந்து, சாலையின் குறுக்கே அந்த டீக்கடையை நோக்கி நடக்கிறான்...

மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான் குணா.

கடந்த ஒரு வாரமாகக் குணாவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தான் பிரதாப். போட்டி இயக்கத்துக்காரன். குணா திட்டப்படி வேலையை முடித்துக் கொண்டு, கையில் பெட்டியுடன் சுவரேறிக் குதித்து, தன்னை யாரும் பார்க்கவில்லை என்று சர்வ நிச்சயத்துடன் நடப்பதைக் கண்டான். தனக்குள் பலமாகச் சிரித்துக் கொண்டான்.

வேணி அவனுக்காகக் காத்திருந்தாள். தூங்காமல் காத்திருந்தாள். அவளுக்கு மிகவும் பிரியமான குணாவுக்காகக் காத்திருந்தாள். அவனுடைய லட்சிய வெறி அவளுக்குப் பிடித்திருந்தது. அவனுடைய துணிச்சலான செயல்கள் அவளுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தன. அவனிடம் அவள் ஈடுபாடு கொண்டதற்கு அந்த இரண்டு மட்டுமே காரணமாக இருந்தன. அவனுடன் இணைந்து பணியாற்றுவதில் அவளுக்கு ஒரு பெருமிதம் கூட இருந்தது....

வாசல் கதவு தட்டப்படும் ஒலி.

சடக்கென்று படுக்கையிலிருந்து எழுந்தாள் வேணி. கதவையடைந்தவள் ஒரு கணம் தயங்கினாள். கேட்டாள்.

''யாரு?''

''நான்தான் குணா... கதவைத் திற...''

தாழ் நீக்கி, அவனை உள்ளே அனு

மதித்து, கதவைச் சாத்தித் தாழிட்டாள். திரும்பி அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''என்ன ஆயிற்று?''

''எல்லாமே திட்டமிட்டபடி முடிஞ்சுடுச்சு...''

சொல்லி விட்டு ப்ரீஃப்கேஸை உயர்த்திப் பிடித்தான். அவள் கையை நீட்டினாள்.

அவளிடம் அதைக் கொடுத்த போது அவனுக்குள் ஒளிந்திருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சினுள் தலையைத் தூக்கினான். சொன்னான்: ''அசட்டுப் பெண்ணே! நம்பிக்கையோடு இதை வாங்குகிறாய். ஏமாறப் போவது நீ மட்டுமல்ல. நம்முடைய இயக்கமும் தான்...''

அந்த ப்ரீஃப்கேஸை வாங்கியவள் படுக்கை அறைக்குச் சென்றாள். கட்டிலின் அடியில் அதைத் தள்ளினாள்.

ஹாலின் விளக்கை அணைத்து விட்டு அவளைப் பின்தொடர்ந்து வந்த குணா அந்தக் கட்டிலின் மீது உட்கார்ந்து, அவளைப் பார்த்துச் சிரித்தான். சொன்னான்.

''என் வேலை முடிஞ்சிருச்சு. நாளைக்குக் காலையில இதைக் கொண்டு போய்த் தலைவர்கிட்டே சேர்க்கறது உன் பொறுப்பு.''

''நீ உள்ளே போனதையோ, இதைக் ஸெப்பிக்கிட்டு வெளியே வந்ததையோ யாரும் பார்க்கலையே?''

''மூச்! ஒரு ஈ காக்காய்க்குத் தெரியாது. காம்பவுண்ட் கேட் பூட்டினது பூட்டினபடி. அது பக்கத்துல சேர் போட்டு உட்கார்ந்திருக்கற காவலாளி உட்கார்ந்தபடி. நாளைக்கு அந்த அலுவலகத்தைத் திறந்த பின்னாடிதான் விஷயமே வெளியாகும்...''

உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சிரித்தான். சொன்னான். ''அப்போது இன்னொரு உண்மையும் வெளியாகும். தலைவரின் இடத்துக்கு நீ பெட்டியைக் கொண்டு போய்க் கொடுத்து, அவர் அதைத் திறந்து பார்க்கும் போது அதனுள் பணம் இருக்காது. ஒரு வெடிகுண்டுதான் இருக்கும். பெட்டியைத் திறந்தவுடன் வெடிக்கும் ஏற்பாட்டுடன்...''

அவள் சொன்னாள்.

''சீக்கிரம் தூங்கலாம் குணா. நாளைக்குக் காலையில பணம் கொள்ளையடிக்கப்பட்ட செய்தி வெளியில வரதுக்கு முந்தி இந்த ப்ரீஃப்கேஸைத் தலைவர்கிட்டே நான் கொண்டு போய்ச் சேர்த்துடணும்.''

''ஆமாம். அதை மறந்தே போயிட்டேன். காரியம் வெற்றிகரமா முடியற சந்தோஷத்துல அது நினைவுக்கு வராமலே போயிடுச்சு. ம்... ம்... விளக்கை அணைச்சுட்டுப் படுத்துத் தூங்கு.''

சொல்லி விட்டுக் கட்டிலில் சாய்ந்து படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். அவள் ஸ்விட்சைத் தட்ட, அறையில் இருள் சூழ்ந்தது. கட்டிலில் சாய்ந்த அவனுக்கு இடம் விட்டுச் சற்று ஒதுங்கித் திரும்பினாள்.



உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சொன்னான். ''சீக்கிரம் தூங்கித் தொலை. அப்போதுதான் பெட்டியை மாற்ற எனக்கு வசதியாக இருக்கும்.''

அவர்கள் தூங்கிப் போனார்கள்.

அவனைத் தட்டியெழுப்பினாள் வேணி.

''குணா! எழுந்திரு. மணி ஏழாயிடுச்சு.''

''என்ன நீ... அசந்து தூங்கறவனைத் தட்டி எழுப்பிக்கிட்டு?''

கண் விழித்தவன் சோர்வோடு சொல்ல, அவன் தோள்களைப் பற்றியெழுப்பி உட்காரச் செய்தாள். சொன்னாள்.

''நான் பெட்டியை எடுத்துக்கிட்டுப் போறேன். நீ வாசல் கதவைத் தாழ் போட்டுட்டு வந்து எவ்வளவு நேரம் வேணாலும் தூங்கு.''

குனிந்து கட்டிலுக்கடியிலிருந்து அந்த ப்ரீஃப்கேஸை இழுத்து எடுத்தாள். அவன் அவசரமாகச் சொன்னான்.

''பணம் சரியா இருக்கான்னு பார்க்க ஊஹும்று பெட்டியைத் திறந்து திறந்து நேரத்தைக் கடத்தாதே. கொள்ளையடிச்ச சமாசாரம் வெளியே தெரியறதுக்கு முந்தி நீ தலைவர்கிட்டே இதைக் கொண்டு போய்ச் சேர்த்துடணும்.''

சொன்ன அவனை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தாள். ஏதோ சொல்ல நினைத்து, அதை அடக்கிக் கொண்டு விருட்டென்று திரும்பி வாசலை நோக்கி நடந்தாள்.

அவள் பின்னால் வந்த குணா, கதவைத் தாழிடாமல், ப்ரீஃப்கேஸுடன் தெருவில் நடந்து செல்லும் அவளையே பார்த்தான்.

உள்ளுக்குள் இருந்த இன்னொரு குணா அவன் நெஞ்சுக்குள் சொன்னான். ''பெண்ணே! தலைவரும் நீயும் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் போது நான் இந்த இடத்திலேயே இருக்க மாட்டேன். இந்த ஊரை விட்டே வெளியேறிக் கொண்டிருப்பேன். பெட்டியினுள் எவ்வளவு பணம் இருக்கும்? எண்ணிப் பார்க்க வேண்டும்...''

அவசரமாகக் கதவைத் தாழிட்டுக் கொண்டு ஆர்வத்தோடு உள்ளே சென்றான்.

நடந்தது நடந்தபடி...

★ ராஜஸ்தானில் பிரதமர் சந்திரசேகர் சுற்றுப் பயணம் செய்த போது, பிற்பகல் முழுதும் காரின் பின் ஸீட்டில் அமர்ந்திருந்தவர், எங்கே சாலையில் உள்ள மக்கள் தம்மைப் பார்க்க மாட்டார்களோ என்று, டிரைவர் அருகே முன் ஸீட்டுக்கு வந்து உட்கார்ந்தார். சாலையில் போகிற, வருகிறவர்களுக்கெல்லாம் கை அசைத்தார். யார் என்றே புரிந்து கொள்ளாமல் அவர்களும் பதிலுக்குக் கையை அசைத்தனர். இருட்டத் தொடங்கவே காரில் இருக்கிற தன்னைக் கண்டுகொள்ள மாட்டார்களோ என்று, கார் ஹெட் லைட் விளக்குகளின் வெளிச்சத்தில் முன்னால் நடக்க ஆரம்பித்தார். ஊஹூ¬ம்; அப்போதும் பயன் இருக்கவில்லை. ராஜஸ்தானத்து மக்கள் அசுவாரசியமாக, அவர் ஆர்வத்துடன் சொல்லும் 'நமஸ்தே'க்கு வெறுமே தலையை மட்டும் அசைத்தார்கள்!

★ வீட்டுக்குப் போக மூட்டை முடிச் செல்லாம் தயாராக இருக்கிற போதும், தேவிலால் வேண்டப்பட்டவர்களுக்கு உதவப் பின்வாங்குவதில்லை. சமீபத்தில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில், தமது ஹரியானா நண்பர் ஒருவரை டைரக்டராக நியமிக்கு மாறு, அதன் நிர்வாக இயக்குநருக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். நிர்வாக இயக்குநருக்கு, அதைப் படித்ததும் சொல்ல முடியாத கோபம். 'இயக்குநர் பதவி என்ன கிள்ளுக்கீரையா? நியமனக் குழு கூடிப் பரிசீலனை செய்ய வேண்டும். போய் வாருங்கள்!' என்று சொல்லிப் பார்த்தார். தாவுவின் ஆளா சும்மா விடுவார்? 'ஒரு பங்களாவும் பென்ஸ் காரும் முதலில் எனக்கு ஒதுக்கி விடுங்கள். நியமனம் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!' என்றார்!

சொன்னது சொன்னபடி...

★ தேவிலாலும், சௌதாலாவும் கட்சிக்குப் பெரிய சுமை என்று சொல்லுவது அப்பட்டமான நகர்ப்புற, நடுத்தர மக்கள் மனோபாவம். இதை நான் ஏற்கவில்லை. இவர்கள் இருவரும்தான் எங்கள் கட்சியின் பெரும் சொத்து! - சுப்பிரமணியம் சுவாமி.

★ எம். ஜி. ஆர். உடல் வைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து என்னை இழுத்துக் கீழே தள்ளியவரைத் தேர்தலில் தோல்வியுறச் செய்யுங்கள்.

- ஜெயலலிதா.

★ செருப்புக் காலோடு அந்த வாகனத்தில் ஜெயலலிதா ஏறியதால்தான் கீழே இறக்கினேன். அதற்கு வீரப்பன் என்னை அன்று பாராட்டினார்!

-கே.பி. ராமலிங்கம்.

தொகுப்பு: எஸ். வி. எஸ்.

வெற்றியின் ரகசியம்!



புதிய அரசு பதவியேற்ற பின் ஐந்து ஆண்டுகளுக்கு அது அசைக்க முடியாத நிலையைப் பெற வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?.

1. நாட்டின் அஸ்திவாரம் போல் உள்ள நல்லவர்களின் நலனைக் காக்க வேண்டும்.
2. நல்லோர்களை பாதிக்கக்கூடிய சட்டம் ஏதேனும் இருந்தால் அவற்றை திருத்தி யமைக்க வேண்டும்.
3. நல்லோர்களின் ஆசிர்வாதத்தைப் பெறுவது தான் நல்லாட்சிக்கு பலம்.

கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகிக்கவும்



தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்



24, 2.வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-20 ☎ 412557

திருமண வைபவங்களுக்கு:

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.



யார் இவர்?

படத்தில் இருப்பவர் யார் தெரிகிறதா? பிரதமர் சந்திரசேகரேதான்!

தகவல் : சம் பத் குமாரி

ஆதாரம் : வீக் லி



''உங்க வெற்றி வாய்ப்புதான் 'உறுதி' ஆச்சே! அப்புறம், என்ன கவலை?''

''ஒரு ஜோர்ல 'இந்தத் தொகுதியை ஒரு 'குட்டி சிங்கப்பூர்' ஆக மாற்று வேன்'னுல்லே சொல்லித் தொலைச் சிட்டேன்!''

- ஆர். அப்துல் சலாம்.



''அதோ போறாங்களே ரெண்டு எழுத்தாளர்கள்; அவங்களிலே ஒருத்தர் விடாக்கண்டர். இன்னொருத்தர் கொடாக்கண்டர்!''

''எப்படிச் சொல்றே?''

''விடாக்கண்டர் 'எலக்ஷனில் வெற்றி பெறுவது எப்படி?' என்ற புத்தகம் எழுதினார். உடனே கொடாக்கண்டர், 'எலெக்ஷனில் வெற்றி பெறுவது எப்படி? என்ற புத்தகம் எழுதுவது எப்படி?'ன்னு ஒரு புத்தகம் எழுதிட் டார்!''

- க. வேங்கடேசன்.

வேணி முனைப்போடு நடந்தாள். பின்னால் கேட்ட மோட்டார் சைக்கிளின் ஒலி அவளைத் தன்னிச்சையாக இன்னும் ஓரத்தில் ஒதுங்க வைத்தது. மோட்டார் சைக்கிள் இன்னும் நெருங்கி வந்தது. இடது பக்கம் இனி ஒதுங்க இடமில்லாமல் உயரமான காம்பவுண்டு சுவர். இயக்கப் பயிற்சியால் கூர்மைப்பட்டிருந்த வேணி யின் உள்ளுணர்வு உந்த, அவள் பெட்டியை வலது கையிலிருந்து இடது கைக்கு மாற்ற முற்பட்டாள்.

அதே கணத்தில் பெட்டி அவள் கையிலிருந்து பறிக்கப்பட்டது. பறித்தவன், மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்த பிரதாப். பெட்டியைப் பிடுங்கிய வேகத்தில், அவன் அணிந்திருந்த முகமூடி சைஸ் கறுப்புக் கண்ணாடி ஒரு கணம் இடம் பெயர, வேணி போட்டி இயக்கத்துக் காரனைப் பளிச்சென்று அடையாளம் கண்டு கொண்டாள். பறித்தவன் மின்னல் வேகத்தில் சென்று மறைந்தான்.

வேணி யோசிக்கவில்லை. நேரே தலை வரின் இருப்பிடம் நோக்கிச் சென்றாள். நடந்ததை ஒன்று விடாமல் சொன்னாள்.

அவள் உள்ளுக்குள் இருந்த இன்னொரு வேணி அழுதாள். ''குணா... என் கடமையைச் செய்து விட்டேன்... போட்டி இயக்கத்துக்காரனுக்கு நம் திட்டம் தெரிந்து போகும் அளவுக்கு அசிரத்தையாக இருந்ததற்காக நீ தலைவரின் தண்ட னையை ஏற்றே ஆக வேண்டும்.''

மறுநாள் செய்திப் பத்திரிகையில் ஒரு பிரபல நிதி நிறுவனத்தின் அலுவலக பீரோ உடைக்கப்பட்டுப் பணம் கொள்ளை போன விவரம் வெளியாகியிருந்தது. புரட்டிய போது, அடுத்த பக்கத்தில் இன்னொரு செய்தியும் இடம்பெற் றிருந்தது.

''புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த ஒரு தனி வீட்டில் வெடிகுண்டு வெடித்ததில் ஒருவர் பலி. இவர் போராளி இயக்கத்தைச் சேர்ந்த பிரதாப் என்ற இளைஞர் என நம்ப இடமிருக்கிறது. போட்டி இயக்கத்தின் சதியாக...''

படித்த வேணி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

உள்ளுக்குள் இருந்த இன்னொரு வேணி அவள் நெஞ்சுக்குள் சொன்னாள். ''குணா! நீ இவ்வளவு பெரிய துரோகம் செய் வேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. நான் உயிருக்குயிராய் உன்னை எத்தனை நேசிச்சேன்! நீ எங்கு போனாலும் தலைவர் உனக்கு ஏற்கெனவே விரித்து விட்ட வலையில் தான் விழு வாய். உலகின் எந்த மூலையிலும் உனக்கினி மரணம்தான் முடிவு...''

முக்கியத் தொகுதிகள் 3

மணியின் பாக்கெட்டில் மயிலாடுதுறை!

கொள்ளிடத்தை ஒட்டி உள்ள கடற்கரையோர மீனவக் கிராமம் கோட்டமேடு. மணி இரவு எட்டரை. ஃபோகஸ் லைட் வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டு ஜீப் விரைந்து வந்து கிராமத்து மத்தியில் நிற்கிறது. சீர்காழி தொகுதி சட்டமன்ற அ.தி.மு.க. வேட்பாளர் மூர்த்தி பேசுகிறார்:

''பாராளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிற்கும் அண்ணன் மணி சங்கர் அய்யர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பர். ஜெயித்தால் நிச்சயம் மந்திரி. அவரை ஜெயிக்க வைத்தால் நம் மாயவரம் பகுதி வளம் கொழிக்கும், காவிரித் தண்ணீருக்குக் கவலையிருக்காது...''

''அது சரி தம்பி. எங்க கிராமத்துக்குக் கரண்டே இல்லையே!'' - கூட்டத்திலிருந்து ஒரு பெரியவர் குரல் கொடுக்கிறார்.

மூர்த்தி ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்க்கிறார். கூட இருக்கும் மணிசங்கர் அய்யர் மைக்கைப் பிடித்து ''என்னைத் தேர்ந்தெடுத்தால் நிச்சயம் கரண்ட் கொண்டு வருவேன்'' என்று உறுதிமொழி கொடுக்கிறார். இப்போது கூட்டமே கோரஸாக, கிராமத்தில் மின் வசதிக்காகக் குரல் கொடுக்கிறது. எப்படியோ சமாளித்துக் கிராமத்தை விட்டு வெளிவரும் போது மணி சங்கர் அய்யர் நம்மிடம், ''பாருங்க... பஞ்சாயத்து செய்ய வேண்டிய வேலையைப் பாராளுமன்ற



◆ மயிலாடுதுறை வாக்காளர்களுக்கு மணியின் கடிதங்கள்



◆ மணி சங்கர் அய்யர்: காவிரியில் தண்ணீர் வருமா?



✤ பண்ருட்டியில் பா. ம. க. அலுவலகம்

✤ பலமான ஆதரவு. பண்ருட்டிக்கு



உறுப்பினர்தான் செய்யணும் போலிருக்கு!'' என்று அங்கலாய்த்துக் கொள்கிறார். பயணம் அடுத்த கிராமம், அடுத்த கிராமம் என்று குறுகலான வயல்களுக்கிடையே வளையும் சாலைகள் வழியாக இரவு இரண்டு மணி வரையில் தொடர்கிறது.

கிட்டத்தட்ட பத்து லட்சம் வாக்காளர்களைக் கொண்ட மயிலாடுதுறை பாராளுமன்றத் தொகுதியில் இ. காங் தலைமைக்கு நெருக்கமாயுள்ள மணிசங்கர் அய்யரை எதிர்த்து, தி. மு. க. சார்பில் கல்யாணம்; பா. ம. க. ஆதரவுடன் முஸ்லீம் லீக் தலைவர் அப்துல் சமது ஆகியோர் நிற்கிறார்கள் - பேருக்கு. தொகுதி எங்கும் மணிசங்கர் வியாபித்துக் கொண்டிருக்கிறார். இந்தத் தொகுதியில் உறுப்பினர் காலஞ்சென்ற பக்கீர் முகமது பெற்ற நல்ல பெயர் மணிசங்கருக்கும் உதவும் எனினும் சில நெருடல்கள் இல்லாமல் இல்லை.

தஞ்சை மாவட்டத்தில் கொஞ்சம் பலம் வாய்ந்த மூப்பனார் கோஷ்டிக்காரர்கள், மணிக்கு 'ஷோக்கு' காட்டுகிறார்கள். இதைப் பற்றி மணி கவலைப்படவில்லை. ஜெ. யின் செல்வாக்கும், காங்கிரஸின் 'நிலையான ஆட்சி' கோஷமும் தம்மைக் கரை சேர்த்து விடும் என்று நம்புகிறார்.

''இத்தனை நாள் வடக்கே அதிகாரியாய்ப் பணியாற்றி வந்த இவர் திடீரென்று இந்தத் தொகுதியில் குதிக்கிறார். ஆனால் கல்யாணம் இதே தொகுதியைச் சேர்ந்தவர். மண்ணின் மைந்தர். அவர் வெற்றி பெற்றால், மக்கள் சுலபமாக அணுகக்கூடியவராய் இருப்பார்'' என்கிறார் சீர்காழி தி. மு. க. ஊழியர் வாசு.

''மணிசங்கர் அய்யருக்குச் சொந்த ஊரே திருவையாறுக்கு அருகே உள்ள காருகுடி தான். மேலும், மயிலாடுதுறையில் ஒரு வீடே வாங்கி விட்டார். எனவே, அய்யரும் மண்ணின் மைந்தர்தான்'' என்று எதிர் வாதம் செய்கிறார்கள் காங்கிரஸ் காரர்கள்.

தொகுதியில் உள்ள சுமார் இரண்டு லட்சம், முஸ்லீம் - வன்னியர், வோட்டுக்களைப் பெற அப்துல் சமது முயன்றாலும், பெருவாரியான முஸ்லீம்கள் அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. பொதுவாகத் தி. மு. க. மேல் மக்களுக்கு உள்ள வெறுப்பால் கல்யாணத்துக்கும் வெற்றி வாய்ப்பு எட்டாக் கனி தான். ஆனால் கும்பகோணம், குத்தாலம், சட்டமன்றத் தொகுதிகளில் கொஞ்சம் கடுமையான போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

மணிக்கு 'மணி'யைப் (பணம்) பற்றித் துளியும் கவலையில்லை. ''ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஐந்து கார்கள் வீதம், ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு முப்பது கார்கள் தேர்தல் பிரசாரம் செய்கின்றன. ஒரு காருக்கு ஒரு நாள் வாடகை சுமார் எழுநூறு ரூபாய். ஆக காருக்கே சுமார் 20,000 ரூபாய் தினமும் செலவாகிறது. இது தவிர ஆட்களுக்குச் சாப்பாடு, போஸ்டர், பேனர் என்று தடபுடல் செய்கிறார் மணி'' என்கிறார் பா. ம. க. தொண்டர். இது தவிர, தொகுதியிலுள்ள இரண்டரை லட்சம் பேர்களுக்கு, இன்லேண்ட் லெட்டரில் கடிதம் எழுதி வாக்கு கேட்கிறார் மணி! இதற்கே சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவாகும்!

ஜெயித்து வந்தால் குடிநீர், தொழில் வளர்ச்சி, காவிரியில் தண்ணீர் என்று வரு



✤ டி. ராமச்சந்திரன்.



✤ சண்முகம்.

டத்துக்கொரு திட்டத்தை நிறைவேற்றுவதாகக் கூறுகிறார் மணி: ''டெல்லியில் கோப்புகளைச் சரியான பாதையில் எடுத்துச் சென்றாலே பாதித் திட்டங்கள் நிறைவேறி விடும்'' என்கிறார். மணியிடம் மயிலாடுதுறை நிறையவே எதிர்பார்க்கிறது!

பண்ருட்டிக்குப் பயமில்லை!

விறுவிறுப்பான ஒரு போட்டியை எதிர்பார்த்த பண்ருட்டி வாக்காளர்கள் இன்று ஏமாந்து நிற்கிறார்கள். ''பண்ருட்டி ராமச்சந்திரனுக்கும் நந்தகோபால கிருஷ்ணனுக்கும் போட்டி என்றால் அது போட்டி. அந்த ந. கோ. கிருஷ்ணனே, பண்ருட்டி சைடில் சாய்ந்த பிறகு பண்ருட்டிக்கு ஏது எதிர்ப்பு? எல்லாம் இந்த மாஜி மந்திரி பொன்முடியின் 'கைங்கர்யம்'தான் என்கிறார் தி. மு. க.வைச் சேர்ந்த சீதாபதி.''

நகரச் செயலாளர் மணியை ஆதரித்த பொன்முடி, தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் ந. கோ. கிருஷ்ணனை ஓரம் கட்டி இந்தத் தேர்தலில் டிக்கெட் கிடைக்காமல் செய்து விட, ந. கோ. கி. பா. ம. க. வில் ஒதுங்கி விட்டார். நகரச் செயலாளர் மணிதான் தி. மு. க. வேட்பாளர். அ. தி. மு. க. சார்பில் டாக்டர் தேவ சுந்தரம் நிற்கிறார்.

1,40,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதி பண்ருட்டி. இதில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் வன்னியர்கள். நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட தொகுதி. நான்கு முறை இதே தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்து மந்திரியாகவும் இருந்த ராமச்சந்திரன், தொகுதிக்குச் சாலை வசதி, பஸ் வசதி என்று நிறையவே செய்திருக்கிறார். சென்ற '89ம் ஆண்டு தேர்தலில் அ. தி. மு. க. ஜெ. ஜா என்று பிளவுபட்டதால், பண்ருட்டி எந்த அணியின் சார்பிலும் நிற்கவில்லை. இந்த முறை யானைச் சின்னத்தில் நிற்கும் பண்ருட்டிக்குப் பா. ம. க. தொண்டர்கள் பம்பரமாகச் சுற்றி வேலை செய்கிறார்கள்.

இந்தப் பகுதியில் பிரபலமான தி. மு. க. பிரமுகர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி வேறு, கட்சியிலிருந்து விலகி பா. ம. க. வில் சேர்ந்து விட்டதால், பண்ருட்டிக்குக் கூடுதல் பலம் கிடைத்திருக்கிறது. கடலூர் பாராளுமன்ற சீட் கிடைக்காததால் கடலூர் காங்கிரஸ்காரர் வெங்கடேசன், பண்ருட்டிக்கு ரகசியமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதும் ஒரு செய்தி!

''பண்ருட்டிக்கு என்று தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது. இது தவிர சென்ற பாராளுமன்றத் தேர்தலில், இந்த சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தமட்டில், பா.ம.க. 32,000 வாக்குகள் வாங்கியது. எனவே வெற்றி உறுதி என்கிறார் பா. ம. க. வைச் சேர்ந்த சேகர்.

பாண்டியில் நிலவும்கேள்விக் குறிகள்

தமிழ்நாட்டில் வாழப்பாடி - மூப்பனார் கோஷ்டிப்பூசல் எப்படி ஜகப் பிரசித்தமோ, அது போல் பாண்டியில் சண்முகம் - பரூக் கோஷ்டித் தகராறும் பிரசித்தம். தேர்தல் முடிவடையும் வரை கோஷ்டிப் பூசலை ஓரம் கட்டி வைத்து விட்டுக் கருமமே கண்ணாக இருக்க முயன்று வருகிறது காங்கிரஸ். ஆனாலும் புகைச்சல் தெரிகிறது.

''அரசியலையும் வியாபாரத்தையும் ஒன்றாகச் செய்யும் சிலரால்தான் பாண்டியில் காங்கிரஸ் கோஷ்டிப் பூசல் வெடிக்கிறது'' என்கிறார் சண்முகத்தின் ஆதரவாளர் ஒருவர்.

பரூக் முதல்வராக இருந்த போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார் சண்முகம். அப்போது டெல்லியில் இருந்து பல சங்கடங்களை பரூக்கிற்குக் கொடுத்தார். ''என்ன செய்வது அவருடைய யோக்யதை அவ்வளவுதான்'' என்கிறார் பரூக்கின் ஆதரவாளர்!

சண்முகத்திற்கு உள்ள பெரிய பலம் கஷ்டமோ, நஷ்டமோ தொடர்ந்து காங்கிரஸில் இருந்து வருவதுதான். கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்களாக மாநிலத் தலைவர் பதவியில் இருக்கிறார் அவர். ஆனால் பரூக் தி. மு. க. விலிருந்து கட்சி மாறியவர். இந்த நிலையில் சட்டமன்றத் தொகுதியில் சண்முகமும், பாராளுமன்றத் தொகுதியில் பரூக்கும் போட்டியிடுகிறார்கள்!

முப்பது உறுப்பினர் கொண்ட பாண்டி சட்டசபைக்கு, இருபது இடங்களில் காங்கிரஸும் பத்து இடங்களில் அ. தி. மு. க. வும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. தி. மு. க. 19 இடங்களில் போட்டியிடுகிறது. மீதி இடங்களை ஜனதா தளத்துக்கும், இடதுசாரி கட்சிகளுக்கும் பகிர்ந்தளித்திருக்கிறது.

இது தவிர, பா. ம. க. கூட்டணி. முன்னாள் முதல்வர் ராமசாமி, புதுவை மக்கள் முன்னணி என்ற கட்சியை ஆரம் பித்துப் போட்டியிடுகிறார். ஏ. வி. ராமகிருஷ்ணன், ஜனதா தளம் (பாண்டிச்சேரி) என்ற கட்சியைத் துவங்கியிருக்கிறார்.

பொதுவாகவே வீசும் காங்கிரஸ், அ. தி. மு. க. அலை இந்த மாநிலத்திலும் வீசினாலும், காங்கிரஸ் தனித்து ஆட்சியைக் கைப்பற்றுமா என்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. முதலியார் பேட்டை, பாகூர், திருநள்ளார், மண்ணாடி பட்டு போன்ற தொகுதிகளில் போட்டி கடுமையாக இருக்கிறது.

''ஜெ.வின் கவர்ச்சி இங்கு எடுபடாது'' என்கிறார் டி. ராமச்சந்திரன். சென்ற தேர்தலில் தெருத் தெருவாகப் பிரசாரம் செய்தும்,

மூன்று இடங்களைத்தான் ஜெ. பெற முடிந்தது. பாண்டியைப் பொறுத்தமட்டில் கட்சி ஒரு பக்கம் இருந்தாலும், வேட்பாளர்கள் அந்தந்த தொகுதிகளில் நன்கு அறிமுகமாகியிருந்தால் வெற்றி நிச்சயம். காரணம் சட்டமன்றத் தொகுதிகளின் பரப்பளவு சிறியதாக இருப்பதால் பரஸ்பரம் அறிமுகங்கள சுலபம்.

ராஜினாமா செய்த தி. மு. க. ஜனதா தள அரசுக்கு நல்ல பெயர் இல்லை. ஆக்ட்ராய் வரி போட்டதும் குடிதண்ணீருக்கு வரியை அதிகப்படுத்தியதும் மக்களுக்கு எரிச்சலை உண்டாக்கி இருக்கிறது. ஆனால் டி. ராமச்சந்திரனோ, ''எங்களுக்கு முன்பு முதல்வராக இருந்த பரூக் மத்திய அரசுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படிதான் ஆக்ட்ராய் வரி போடப்பட்டது. இன்னமும் சொல்லப் போனால், பரூக் அரசு தயாரித்து வைத்திருந்த பட்ஜெட்டைத்தான் நாங்கள் சட்டசபையில் வைத்தோம்'' என்கிறார்.

''பாண்டி மக்கள் ஒரு நிலையான ஆட்சியை விரும்புகிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பல்கலைக் கழகம், விவசாயக் கல்லூரி போன்றவற்றைக் கொண்டு வந்திருக்கிறோம். துறைமுக அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த இருக்கிறோம். கடந்த சில வருடங்களில் பாண்டிச்சேரி நகரத்தைச் சுற்றி ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்குக் காங்கிரஸே காரணம். இதெல்லாம் மக்களுக்குத் தெரியும். வெற்றி எங்களுக்குத்தான்.'' என்கிறார் சண்முகம்.

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்கும் பட்சத்தில் 'யார் முதல்வர்' என்பதிலும் சர்ச்சை இருக்கிறது. 'கண்ணன்தான் முதல்வர்' என்று பரூக் பேசி வருவது சண்முகத்தின் ஆதரவாளர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது.

பரூக்கிடம் நேரடியாக இது பற்றிக் கேட்டால் ''இதெல்லாம் பெரிய விஷயமல்ல'' என்று கூறி நழுவுகிறார்!

- ப்ரியன்.

படங்கள்: ராஜன்

மேற்கு வங்கத்தில் இரயில்வே டிவிஷனல் மானேஜரின் அலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டு, பயணிகள் அவரை 'கெராவ்' செய்தனர். காரணம் விசாரித்த போது, பல ஆண்டுகளாக மிகத் தாமதமாக வரும் சக்ரதார்பூர் பாசஞ்சர் கடந்த சில தினங்களாக சரியான நேரத்துக்கு வந்து சென்று விடுவதாகவும், அதனால் தாங்கள் அலுவலகம் செல்ல முடியவில்லையென்றும், வழக்கம் போல் அந்த ரயில் ஒரு மணி நேரமாவது தாமதமாக வர வேண்டும் என்பதுமே அவர்களுடைய கோரிக்கை என்று தெரிந்தது.

- அ. ஷண்முகசுந்தரம்.

இருப்பிடம்

எப்படிச் சண்டை ஆரம்பித்தது என்று இப்போது நினைவில் இல்லை. ஆனால் புனிதா தன் சூட்கேசில் துணிகளை அடுக்கு வது மட்டும் நிஜம்.

மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந் தான். எரிமலை மௌனம். உள்ளூர, எழுந்து அவளை அறைய வேண்டும், அல் லது இன்னும் கோபமாக நாலைந்து கேள்விகள் கேட்க வேண்டும் என்ற உணர்வு!

ஆனால் எதுவும் செய்யவில்லை. அவ ளுக்கு மட்டும் அவ்வளவு ரோஷமா! போய் விடுவாளா?

''உங்களுக்குத் தானாவும் புரியாது. எடுத் துச் சொன்னாலும் கேட்டுக்கிற பொறு மை இல்லை. அவசரத்துல எதையாவது செஞ் சுட்டு, அப்புறம் நஷ்டப்பட்டதும் வந்து குதிப்பீங்க. இத்தனை நாளா அதைத் தானே பார்க்கிறேன்..''

''என்ன உளர்றே நீ. அவன் தெரிஞ்ச வன்னுதானே பணத்தைக் கொடுத்தேன்.''

''தெரிஞ்சவனா? நல்லா யோசிக்கச் சொல்லுங்க. உங்க ஃப்ரெண்டு என்ன சொன்னாரு? அவன் ஆளு ஒரு ம ா தி ரி. வேலைய வாங்கற சாமர்த்தியம் நமக்கு இருக்கணும். அ லை ய விட்டுருவான்னு சொல்லலே ? ''

''அவரு வீ ட் டு க் கு ம் அவன்தானே செஞ்சு கொடுத்தான்.''

''அவன் கடைசில அலைய விட்டதை யும்தானே சொன்னாரு.''

''இப்ப என்னை என்ன மடையன்கி றியா? வேற எவனையாவது.. உனக்குத் தெரிஞ்சவனாக் காட்ட வேண்டியது தானே.''

''என்ன உளர்றீங்க. ஆளு நம்பகம் இல்லை. வேற ஆளு விசாரிச்சுப் பாருங் கன்னு சொன்னா.. என்னமோ அசிங்கமாப் பேசறீங்களே...'' என்றாள் எரிச்சலாகி.

அவளையே முறைத்தான்.

''எங்க ஃபேமிலியே அசிங்கம்.. ஏன் தேடி வந்து சம்பந்தம் வச்சுக்கிட்டீங்க?''

''சரி.. சரி... இன்னைக்கு உங்களுக்கு ஏதோ வெறி.. நான்தான் கிடைச்சேன் போலிருக்கு.''

''வெறி.. அசிங்கம்.. அப்புறம் ஏண்டி என்கூட வாழணும். போயேன் உங்க வீட்டுக்கே...'' திடீரென உரத்த குரலில் அலறினான்.

''எதுக்கு?''

''அப்படித்தான். பிடிக்காமே என்கூட என்னையே விமர்சனம் பண்ணிக்கிட்டு வாழ வேண்டிய அவசியம் என்ன? போ உங்க வீட்டுக்கு!''

''கல்யாணம் இதுக்குத்தான் செஞ்சு கொடுத்தாங்களா? எங்க வீட்டுக்குப் போகணுமாமே!''

''இஷ்டம் இல்லாமே போலி வாழ்க்கை அனாவசியம்!''

''நீங்க செஞ்சது தப்புன்னு சொல்லக் கூடாதா?''

''அவசியம் இல்லே. என் செயலை விமர் சிச்சா என்னையே விமர்சிக்கிற மாதிரி தான். இதுல மட்டும் இல்லே. நான் எது செஞ்சாலும். எங்க வீட்டுல இப்படிச் செஞ்சிருப்பாங்கன்னு கம்பாரிசன் வேற. போயேன் உங்க வீட்டுக்கே....''

''மறுபடி மறுபடி அந்த வார்த்தையச் சொல்லாதீங்க. அநாகரிகமா இருக்கு..''

''வெறி.. அசிங்கம்.. அநாகரிகம்! பேஷ்! திரும்பத் திரும்பச் சொல்றேன். என்னோட முடிவு இதுதான். போ. உங்க வீட்டுக்கு. எனக்கு உன் முகத்தையே பார்க்கப் பிடிக்கலே!''

அவ்வளவுதான். உள்ளே போனாள். பீரோ மேலிருந்த சூட்கேஸைக் கீழிறக்கி, தூசி தட்டினாள். துணிகளை வரிசையாய் அடுக்கினாள். வெளியில் வந்தாள்.

ஏதாவது சொல்லுவாள் என்று எதிர் பார்த்தான். பேசவில்லை. அவன் இருந்த

ரிஷபன்

திசைகூடத் திரும்பவில்லை. வெளியேறி விட்டாள்.

மூன்று நாட்கள் எப்படிக் கழிந்தனவோ! வீட்டின் தனிமை இரவு திரும்பியதும் பளாரென்று அறைந்தது. நிலைப்படி சிப்பி மாலை. காஸ்கட்டில் செய்த ஒயர் கிளி களின் வரிசை. ஹேப்பி ஹோமில் அவர்க ளின் கறுப்பு வெள்ளைப் புகைப்படம். இரவு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் ஸ்பரிச நினைவுகள். டைனிங் டேபிளில் ஹாட் பேக்கைத் திறந்தால் வெறுமை.

ஏதோ ஒன்று அவனை விடாமல் உறுத்தி யது. யோசித்ததில் தவறு புலப்பட்டது. ஏன் அப்படி இரைந்தேன்.

''உனக்குத்தான் தெரியுமில்லே. நான் கொஞ்சம் முன்கோபி. நீதான் அந்த நேரத் துல என்னை அனுசரிச்சுப் போகணும்னு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்..''

என்னவோ அவள் எதிரில் இருப்பது போல் தன்னிச்சையாய்ப் புலம்பினான் மன சுக்குள். அன்று எந்த அளவு ஆங்காரம் மனத்தில் அழுத்தமாய் இருந்ததோ, அதே அளவு இன்று வருத்தம் அப்பி இருந்தது.

தூக்கம் வராமல் புரண்டான். நாளை ஞாயிறு. இந்த வீட்டில் அவளின்றி.. ஏன் எந்தத் தகவலும் இல்லை...? அவள் வீட்டில் என்ன நினைத்திருப்பார்கள். மிகக் கேவலமானவனாக.. ச்சே! படித்த பெண்ணை அநாகரிகமாய்ப் பிறந்த வீட் டுக்கு விரட்டி... எண்ணங்களில் மனசு திமி றியது.

அம்மாவைப் போய்ப் பார்க்கணும்.. ஏனோ அப்படித் தோன்றியது. இதுவரை அம்மாதான் அவன் கோபத்தைத் தாங்கி இருக்கிறாள்... சகித்துக் கொண்டு இருந்தி



ருக்கிறாள். வெளிப்பட எதுவும் சொன்ன தில்லை. எவ்வளவு தடவை வார்த்தைகளால் கட்டிருப்பான். அம்மா.. ஒரு தடவை கூட என்னை நீ விரட்டவில்லை. வெறுத்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை.

அம்மாவைப் பார்க்கணும். நாளைக்குக் காலையில் முதல் பஸ்ஸைப் பிடித்து.. அம்மா கையால் காலை காப்பி.. சுருங்கிப் போன அந்த உடம்பு.. அம்மா...

கதவைத் தட்ட வேண்டிய அவசியம் இல்லாத வீடு. வாசலில் 'பளிச்'சென்று கோலம்- தெருவை அடைத்து. வீட்டுக்குள் ஊதுபத்தி வாசனை.

''வாடா...'' என்றாள் அம்மா. ''சொன்ன மாதிரியே வந்துட்டியே...''

''சொன்ன மாதிரியேவா? யார் சொன்னது?''

கேள்விக்கு விடை அவசியமாய் இருக்கவில்லை. ஈரத் தலையில் டவலை முடிந்து.. கையில் கோலப் பொடி டப்பாவுடன் புனிதா வந்தாள்.

எலிக்கும் கொசுவுக்கும் குடும்பக் கட்டுப்பாடு!

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் எம். செல்வராஜ் (சுயேச்சை) வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:

* அரசு அதிகாரிகளுக்குத் தற்காப்புக்குத் துப்பாக்கி வழங்கப் படும்.
* கணவன் மனைவிக்கு அலுவலகத்தில் ஒரே மேஜையில் வேலை கொடுக்கப்படும்.
* இந்தியக் குடிமக்களுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சி. கட்டாயக் கல்வி கொடுக்கப்படும்.
* கல்வித் திட்டத்தில் ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து தொழில் நுட்பம் பெற, ஆசிரியர்களுக்குக் குடும்பத்துடன் சென்று பயிற்சி பெற அனுமதி தரப்படும்.
* அரசு ஊழியர் இறந்தால் கோவில் நிலங்களிலிருந்து ஐந்து ஏக்கர் வழங்கப்படும்.
* விவசாயிகளுக்கு போர்வெல், பைப், ஆயில் இஞ்சின், மின்சார மோட்டார் இனாமாக வழங்கப்படும்.
* சினிமா தியேட்டர்களில் பகல் பொழுதில் கல்வி போதிக்கப்படும். இரவில் சினிமா காண்பிக்கப்படும்.
* ஒரே மதத்தில் திருமணம் செய்து கொள்ளத் தடை கொண்டு வரப்படும். படித்த ஆண் - படிக்காத பெண்ணையும், படித்த பெண் படிக்காத ஆணையும்தான் திருமணம் செய்ய வேண்டும் என்பதைச் சட்டம் ஆக்குவோம்.
* எலிக்கும் கொசுவிற்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படும். மனிதனுக்குக் குடும்பக் கட்டுப்பாடு ரத்து செய்யப்படும்.

எப்படி வாக்குறுதிகள்...? முக்கியக் கட்சிகளின் வாக்குறுதிகளைத் தூக்கிச் சாப்பிடவில்லை!

கணவன்- மனைவிக்கு ஒரே மேஜையில் வேலை!

தொகுப்பு: எஸ். சுவாமிநாதன்.



''என்ன சார், இதுவரைக்கும் எண்பது ரூபாய்க்குச் சாப்பிட்டிருக்கீங்க?''

''கையிலேயோ காசு இல்லை; இதுல, ஏன் குறைச்சு சாப்பிடுவானேன்னு தான்...''

- ஆர். வசந்தகுமார்.

''துளசி மாடத்துக்குக் கோலம் போட்டு...''

இவளைப் பார்த்ததும் பேசாமல் சமையல் அறைக்குள் போனாள்.

''வாடா... காப்பி சாப்பிடலாம்...'' சொல்லி விட்டு, அம்மா வாசல் பக்கம் கீரைக்காரியின் குரல் கேட்டுப் போனாள்.

''என்னது இது!''என்று அடிக்குரலில் அவளிடம் சீறினான் சமையலறைக்குள் நுழைந்து.

''எது?''

''இதுதான் உங்க வீடா?'' அவன் கேள்வி அவனுக்கே அபத்தமாய்த் தொனித்தது.

''பின்னே?'' என்றாள் அழுத்தமாய்.

''சொல்லிட்டியா.. உங்க பையன் இப்படி அநாகரிகம்னு...''

''எதுக்குச் சொல்லணும்?''

''பரவாயில்லையே...!''

இ டை ம றி த் த ா ள். ''அவங்களுக்குத் தெரிஞ்சதுதானே. நான் எதுக்குப் புதுசாச் சொல்லணும்..''

''திமிர்! போக வேண்டியதுதானே.. உங்க வீட்டுக்கே!''

''இதுதான் எங்க வீடு. வந்தேன். உங்க பையன் ரெண்டு நாள்ல வருவார்னு சொன்னேன். நிம்மதியா இருக்கேன். மாமியார் உபசரிப்புல...''

''நம்ம சண்டை எதுவுமே சொல்லலியா?'' என்றான் குழப்பத்துடன்.

''அது என் பிரச்னை. என்னால அதைத் தீர்த்துக்க முடியும். அதை ஏன் அவங்ககிட்டே சொல்லி.. அவங்களோட மன அமைதியைக் கெடுக்கணும்...'' என்றாள் தீர்க்கமாய்.

என்ன பெண் இவள்! நினைத்ததைச் சாதிக்கிற திடம் உண்டு என்பது போல.. தைரியமாய் நிமிர்ந்து .. உறுதியாய்ப் பேசி..

சொன்னான்.

''ஐயாம் ஸாரி..''

''காப்பி சாப்பிடறீங்களா?''

வெளியில் அவன் அம்மா நின்றிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

அம்மா நினைத்துக் கொண்டாள்.

'இதுவே என் காலமானால்... அழுது கொண்டு அம்மா வீட்டுக்குப் போயிருப்பேன். இப்ப.. இந்தப் பெண்ணுக்கு.. எத்தனை நெஞ்சழுத்தம்.. துளிக்கூட கலையாமல்.. இருப்பிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு விட்டாளே.. தேவைதான் இந்தச் சாமர்த்தியம்.'

அவர்கள் கவனிக்குமுன் விலகி, கொல்லைப்பக்கம் போனாள் அம்மா.



சுப்பையா பிள்ளை



அருணாசல ஆசாரி

"எங்க கிராமத்தில் பெண் உரிமை கொடிகட்டிப் பறக்கிறது"

ஸ்ரீவைகுண்டம் தாண்டி, சுமார் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் சிவகளை என்கிற சின்ன கிராமம். சுற்றிவர குளமும், குளக்கரையில் வாத்துகளுமாய் உள்ள சின்ன ஊர். ஆனால் பெரிய பெரிய எண்ணங்கள் கொண்ட மனிதர்களின் இருப்பிடம். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னாலேயே பெண் விடுதலை, உரிமை பற்றின சிந்தனை உடையவர்கள் வாழ்ந்த கிராமம் இது.

இங்குள்ள நன்குடி வேளாளர் என்கிற பிரிவினரிடையே உள்ள திருமண வழக்கங்கள் வித்தியாசமானவை. திருமணம் முடிந்து நடைபெறும் 'மறு வீடு' வைபவத்தின் போது பெண்ணைத் தான் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வருவார்கள். வழக்கம். ஆனால் இங்கு அப்படியில்லை. மாப்பிள்ளையைப் பெண் வீட்டுக்கு நூற்றியொரு ரூபாய் கொடுத்து அழைத்து வருகிறார்கள். மாப்பிள்ளை பெண் வீட்டில் வாழ்கிறார்.

எதனால் இப்படியொரு பழக்கம் என்று ஓய்வு பெற்ற ஆசிரியர் சுப்பையா பிள்ளையிடம் கேட்ட போது அவர் விளக்கினார்!

"திடீர் திடீர் என்று குடும்பத்தில் சச்சரவு ஏற்படும் போது பெண்ணைப் பார்த்துக் கணவன், "வீட்டை விட்டு வெளியே போ" என்று சொல்வதுண்டு. ஆனால் எங்களில் அப்படிச் சொல்ல முடியாது. காரணம் அந்த வீடே பெண் பெயரில்தான் இருக்கும். இதை ஆண் அடிமைத்தனம் என்று கருத வேண்டியதில்லை. பெண்ணின் பாதுகாப்புக் கருதி எங்களின் முன்னோர்கள் தீர யோசித்து எடுத்த முடிவு...

'பெற்றோர் காலத்துக்குப் பிறகு நன்செய் நிலங்களும் பெண்ணுக்கே போய்ச் சேரும். மனைவியைத் தாஜா பண்ணி, கணவன் நிலத்தை விற்று விடக் கூடாதென்று, குழந்தைகள் பிறந்த பிறகு அவர்கள் பெயரில் சொத்தை எழுதி வைப்பதாகச் சொல்லியே பெண்ணின் பெற்றோர் கல்யாணத்தை நிச்சயிப்பார்கள்.

"எங்களுள் நிறைய கிளைகள் உண்டு. ஒரே கிளையில் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. குழந்தைகள் பிறந்த பிறகு தாயின் கிளை தான் குழந்தைகளுக்கும் உரியது. தாயின் சொத்து முழுக்க மகள்களுக்கே செல்லும். தகப்பனின் சொத்தும் அவன் சுயமாகச் சம்பாதித்த சொத்தும் பணமும் மட்டுமே மகன்களுக்குக் கிடைக்கும். அதே போல் குழந்தைகளுக்கு யாரைத் திருமணம்செய்துகொடுக்க வேண்டும் என்று தாய் தேர்ந்தெடுக்கிறாளோ அவர்களுக்கே திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும். இதில் ஆணுக்கு எந்தப் பங்கும் கிடையாது.

"தாலி முதற்கொண்டு எல்லாவற்றையும் பெண் வீட்டாரே செய்து விடுவார்கள். 'நான் கட்டின தாலிதானே. கழற்று' என்று கோபத்தில் கூடச் சொல்ல முடியாது! இதெல்லாம் பல காலம் முன்பாகவே எங்கள் சமூகத்தில் இருக்கிற கருத்துக்கள்; செயல்பாடுகள். பெண்களுக்கென்று பள்ளிகள் கட்டி வைத்திருக்கிறோம். வரதட்சணைக் கொடுமையோ, மற்றும் பெண்ணைச் சித்ரவதைப்படுத்துகிற கொடுமைகளோ எங்கள் சமூகத்தில் இடையவே கிடையாது."

சிவகளையிலே வாழ்கிற அருணாசல ஆசாரி என்பவர், "இந்த சமூகத்திடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உண்டு. பெண் உரிமை, பெண் கல்வி, பெண்ணை நிந்தனை செய்யாமலிருப்பது போன்ற நல்ல கருத்துக்கள் வெறும் வாய்ப் பேச்சாக இல்லாமல் நடைமுறையில் இருக்கின்றன" என்றார்.

இவ்வளவு உரிமைகள் இருந்தும் அந்தப் பெண்களின் இயல்பான கூச்சமும் அடக்கமும் மாறாமலே தான் இருக்கின்றன. பத்திரிகைக்குப் பேட்டி தரவோ, புகைப்படம் எடுக்கவோ அவர்கள் சம்மதிக்கவேயில்லை!

பேட்டி: **தமயந்தி**
படங்கள்: **சுந்தர்**

வாசகர் யோசனை:
மு. சேரந்தையன்,
ஸ்ரீவைகுண்டம்.

50



அமரர் கல்கி நினைவாக — பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

○ **கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.**

- உறையின் மேல் பொன் விழா சிறுகதை/நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம். கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ **போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வது ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.**

○ **பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.**

○ **எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.**

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

மரிக்கொழுந்து


கதை: ஓர் அவலட்சணமான - கருப்புப் பெண்ணின் மனஉளைச்சல்கள் சம்பவங்களுக்குப் பின்னணி. தான் உதாசீனப்படுத்தப்படுவதற்கு எதிர் நடவடிக்கையாக வீண் புரளி களைக் கிளப்பிவிட்டுக் கிராம மக்களை அவதிக்குள்ளாக்குகிறாள் மரிக்கொழுந்து. உண்மையாகவே கிராம மக்களைப் பாதிக் கக் கூடிய ஒரு விஷயத்தை, உச்ச கட்டத் தில், அவள் எடுத்துச் சொல்லி எச்சரிக்கும் போது அதை அவர்கள் நம்ப மறுக்க, உண்மையை உணர்த்த வேறு வழியின்றித் தன்னையே பலி கொடுத்து அவர்களைக் காப்பாற்றி விடுகிறாள். 'புலி வருது' கதைதான்!

நடிப்பு: ஐஸ்வர்யாதான் மரிக்கொழுந்து. பெண் பார்க்க வரும் ஒவ்வொருவரும் அவரது அழகற்ற தன்மையைக் காரணம் காட்டி ஒதுக்கித் தள்ளும் போதும், அதன் விளைவாகக் கிராம மக்கள் அவரைக் கேலி பேசும் போதும் அவர் படும் வேதனை நெஞ்சைத் தொடுகிறது. விடுமுறையைக் கழிக்கக் கிராமத்துக்கு வரும் பெருந்தனக் காரரின் மகன் - அந்த 'டிரீம் பாய்' - அரவிந்த் ரமேஷ் ஓர் இனிமையான சூழ்நிலையில் மன பலவீனப்பட்டு மரிக்கொழுந்துவிடம் உறவு கொள்ள முற்பட, அந்தச் சில நிமிடங்கள் கிளுகிளுப்பேற்படுத்துகின்றன. அதன்பின் - நூறு சதவிகித சோகம்தான். இவரையடுத்து, மற்றவர்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர், கொஞ்ச நேரமே வந்து போனாலும், மனோரமா.

இசை: ஒரே சீராகத் தலையசைக்கச் செய்யும் பாடல்கள். ஐந்து பாடல்களில் சிகரமாக விளங்குவது: ''கண்ணதாசனே கண்ணதாசனே வந்துவிடு!''

திரைக்கதை, வசனம், இயக்கம்: 'புதியவன்' என்கிற பெயரில் ஒளிந்து கொண்டுள்ள ஒரு புதியவர். அந்தவொரு காரணத்தாலோ என்னவோ, தொடக்கத்தில் தன் முன்னோடிகளுக்கும் மானசீக குருவுக்கும் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறார். முடிவில், அனைவரது ஆதரவையும் கோரி வேண்டுகோள் விடுக்கிறார். இது அவையடக்கமா அல்லது தன்னம்பிக்கைக் குறைவா... புரியவில்லை. பின்னதாக இருந்தால் அதற்கு அவசியம் இல்லை.

- சி. ஆர். கே.



சிவகாமியின் சபதம்

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

மொட்டு வெடித்தது!

தடாகத்தில் ஒரு அழகிய தாமரை மொட்டு தண்ணீருக்கு மேல் தலைதூக்கி நின்றது. அதன் குவிந்த இதழ்களுக்குள்ளே நறுமணம் ததும்பிக் கொண்டிருந்தது. இரவெல்லாம் அந்த நறுமணம் வெளியில் வருவதற்கு முயன்று நாலாபுறமும் மோதிப் பார்த்தும் வெளியில் வர முடியாதபடியால் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தது. தாமரை மொட்டுக்கும் அது மிக்க வேதனையளித்தது.

உதய நேரத்தில் நறுமணத்தின் குமுறலும் மோதலும் அதிகமாயின. திடீரென்று கீழ் வானத்தில் ஒரு ஜோதி தோன்றியது. உதய சூரியனின் அமுதனைய கிரணங்கள் தடாகக் கரையில் இருந்த விருக்ஷங்களின் இடையே நுழைந்து வந்து தாமரை மொட்டைத் தொட்டன. அந்த இனிய ஸ்பரிசத்தினால் மொட்டு சிலிர்த்தது; இதழ்கள் விரிந்தன. இரவெல்லாம் உள்ளே விம்மிக் கொண்டிருந்த நறுமணம் விடுதலையடைந்து தடாகத்தையும் தடாகக் கரையையும் வான வெளியையும் நிறைத்தது.

அவ்விதமே, சிவகாமியின் இதயமாகிய தாமரை மொட்டுக்குள்ளே இத்தனை நாளும் விம்மிக் குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும் மாமல்லரிடம் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்ததும், கரையை உடைத்துக் கொண்ட ஏரி வெள்ளத்தைப் போலப் பிரவாகமாகப் பெருகின. மாமல்லர் முதன் முதலில் அரண்ய வீட்டுக்கு வந்ததைக் குறிப்பிட்டபோதுதான் சிவகாமியின் வார்த்தைப் பிரவாகம் சிறிது தடைப்பட்டது.

அப்போது கிடைத்த சந்தர்ப்பத்தை மாமல்லர் பயன்படுத்திக் கொண்டு கூறினார்: ''ஆம்! எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. நானும் சக்கரவர்த்தியும் முதன் முதலில் உங்கள் அரண்ய வீட்டுக்கு வந்த போது, உன் தந்தையின் தெய்வச் சிலைகளுக்கு மத்தியிலே நீ நடனமாடிக் கொண்டிருந்தாய். ஆயனர் ஸ்வரக் கோவை பாடிக் கொண்டும், தாளம் போட்டுக் கொண்டும் இருந்தார். எங்களைக் கண்டதும் ஆயனர் பாட்டையும் தாளத்தையும் நிறுத்தினார். நீயும் ஆட்டத்தை நிறுத்தினாய். உன்னுடைய விரிந்த கண்கள் இன்னும் மலருமாறு விழித்து எங்களை நோக்கினாய். என் தந்தை 'நிறுத்த வேண்டாம்; ஆட்டம் நடக்கட்டும்!' என்று வற்புறுத்தினார். அதன் மேல் ஆயனர் பாடத் தொடங்க, நீயும் ஆடத் தொடங்கினாய்! ஆட்டம் முடிந்ததும் நான் பலமாகக் கரகோஷம் செய்தேன். நீ மகிழ்ச்சி ததும்பிய கண்களினால் என்னை ஏறிட்டுப் பார்த்தாய். அந்தப் பார்வையில் நாணம் என்பது அணுவளவும் இருக்கவில்லை....''

''பிரபு! தாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான். அப்போது நான் பன்னிரண்டு பிராயத்துப் பெண். உலகம் அறியாதவளாயிருந்தேன். தாங்கள் வானத்தில் ஜோதி மயமாய்ப் பிரகாசிக்கும் சூரியன் என்பதையும், நான் கேவலம் பூமியில் புல் நுனியில் நிற்கும் அற்பப் பனித்துளி என்பதையும் அறியாதவளாயிருந்தேன். ஆகையினால், தங்களை ஏறிட்டுப் பார்க்கச் சிறிதும் தயக்கமடையவில்லை. சூரியனை ஏறிட்டுப் பார்க்கத் துணியும் கண்கள் கூடிய சீக்கிரத்தில் கூசிக் குனிய நேரிடுமென்று அறியாமல் போனேன்!...''

''சிவகாமி! நான் சூரியனுமல்ல; நீ பனித்துளியுமல்ல. நீ தீபச்சுடர்; நான் அதைச் சுற்றிச் சுற்றி வரும் விட்டில்!....''

''பிரபு! நான் சொல்ல ஆரம்பித்ததை விட்டு வேறு விஷயத்துக்குப் போனது தவறுதான். மன்னியுங்கள். நான் ஆடி நிறுத்

தியதும் நீங்கள் கரகோஷம் செய்தீர்கள். எனக்கு அப்போது உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. உங்கள் தந்தை உங்களைப் பார்த்து, 'சிவகாமியோடு சற்று நேரம் விளையாடிக் கொண்டிரு! ஆயனரோடு பேசியான பிறகு உன்னைக் கூப்பிடுகிறேன்' என்றார். நீங்கள் உடனே என் அருகில் வந்தீர்கள். இருவரும் கை கோத்துக் கொண்டு காட்டுக்குள்ளே குதித்தோடினோம்.

''காட்டிலே நான் பார்த்து வைத்திருந்த அழகான இடங்களையும் செடி கொடிகளையும் காட்டியான பிறகு தங்களை வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று நான் வளர்த்து வந்த கிளிகளையும் புறாக்களையும் காட்டினேன். பிறகு என் தந்தை செய்து வைத்திருந்த சிலைகளைக் காட்டத் தொடங்கினேன். நடன வடிவச் சிலைகளைப் பார்க்கும் போது தாங்கள், 'நானும் நடனக் கலை பயில விரும்புகிறேன்' என்றீர்கள். அந்தச் சிலைகளில் ஒன்றைப் போல் அபிநயத் தோற்றத்தில் நின்றீர்கள். அதைப் பார்த்து விட்டு நான் கலீரென்று சிரித்தேன். 'குழந்தைகள் அதற்குள்ளே வெகு சிநேகமாகி விட்டார்களே!' என்று நம் தந்தைமார் பேசிக் கொண்டார்கள்.

''அன்று முதல் தங்களுடைய வருகையை நான் ஆவலுடன் எதிர்பார்க்கலானேன். குதிரையின் சப்தமோ ரதத்தின் சப்தமோ கேட்கும் போதெல்லாம் தாங்கள்தான் வந்து விட்டீர்கள் என்று என் உள்ளம் துள்ளி மகிழ்ந்தது. உதய சூரியனையும், பூரண சந்திரனையும், வண்ண மலர்களையும், பாடும் பறவைகளையும், பறக்கும் பட்டுப் பூச்சிகளையும் பார்க்கும்போது எனக்குண்டான குதூகலம் தங்களைப் பார்க்கும் போது உண்டாயிற்று. ஆனால் சூரிய சந்திரர்களிடமும், புஷ்பங்கள் பட்சிகளிடமும் பேச முடியாது. தங்களிடம் பேசுவது சாத்தியமாயிருந்தபடியால், தங்களைக் கண்டதும் பேச ஆரம்பித்தவள் மூச்சு விடா மல் பேசிக் கொண்டேயிருப்பேன்...''

''உண்மைதான், சிவகாமி! அந்த நாளில் உன்னைப் பார்க்கும் போது, உன் தந்தையின் அற்புதச் சிலைகளில் ஒன்றைப் பார்ப்பது போன்ற மகிழ்ச்சி எனக்கும் உண்டாகும். ஆனால் சிலை பேசாது; நீயோ ஓயாமல் பேசுவாய். பறவைகளின் குரல் ஒலிகளில் எவ்வளவு பொருள் உண்டோ, அவ்வளவு பொருள்தான் உன் பேச்சுக்களிலும் இருப்பதாக எனக்குத் தோன்றும். ஒன்றும் புரியாவிட்டாலும் நெடுநேரம் கேட்டுக் கொண்டிருப்பேன்....''

''என் பேச்சைப் போலவேதான் நமது சிநேகமும் அப்போது அர்த்தமற்றதாயிருந்தது. கொஞ்ச நாளைக்கெல்லாம், தாங்கள் சக்கரவர்த்தியுடன் தேச யாத்திரை சென்றீர்கள். அப்புறம் மூன்று வருஷ காலம் அரண்ய வீட்டுக்கு நீங்கள் வரவில்லை. மறுபடியும் எப்போதுமே தங்களைப் பார்க்க மாட்டோமோ என்ற ஏக்கம் எனக்குச் சிற்சில சமயம் உண்டாகும். இல்லை, தாங்கள் எப்படியும் ஒருநாள் வருவீர்கள் என்று தைரியம் அடைவேன். தாங்கள் வருவதற்குள்ளே நடனக் கலையிலே சிறந்த தேர்ச்சியடைந்துவிட வேண்டுமென்றும், தாங்கள் திரும்பி வந்ததும் அற்புதமாய் ஆட்டம் ஆடித் தங்களைத் திகைக்கச் செய்ய வேண்டுமென்றும் எண்ணுவேன். தாங்கள் மீண்டும் வரும் போது தங்களுடைய உருவம் எப்படியிருக்குமென்று கற்பனை செய்து பார்க்க அடிக்கடி முயல்வேன். ஆனால் மனத்தில் உருவம் எதுவுமே வராது... கடைசியாக ஒருநாள் தாங்களே வந்து விட்டீர்கள்! முற்றும் புதிய மனிதராய் வந்தீர்கள்....''

''நீயும் வெகுவாக மாறிப் போயிருந்தாய், சிவகாமி! உருவத்திலும் மாறியிருந்தாய்; குணத்திலும் மாறியிருந்தாய். நான் எதிர்பார்த்தது போல் என்னைக் கண்டதும் நீ ஓடி வந்து என் கரங்களைப் பற்றி வீட்டுக்குள் அழைத்துப் போகவில்லை. தூண் மறைவிலே நாணத்துடன் நின்று கடைக்கண்ணால் என்னைப் பார்த்தாய். 'கலகல'வென்று சிரிப்பதற்கு மாறாகப் புன்முறுவல் செய்தாய்! அந்தக் கடைக்கண் பாணமும் கள்ளப் புன்னகையும் என்னைக் கொன்றன.''

''ஓடி வந்து முகமன் கூறி உங்களை வரவேற்க முடியாமல் ஏதோ ஒன்று என்னைத் தடைசெய்தது. முன்னால் வரலாமென்றால் கால் எழவில்லை. ஏதாவது பேசலாமென்றால் நா எழவில்லை. நின்ற இடத்திலேயே நின்றேன். என்னை நானே, 'சிவகாமி! உனக்கு என்ன வந்து விட்டது?' என்று கேட்டுக் கொண்டேன். அதே சமயத்தில் அப்பாவும், 'சிவகாமி! ஏன் தூண் மறைவில் நிற்கிறாய்? வந்து சக்கரவர்த்திக்கு நமஸ்காரம் செய்! பல்லவ குமாரரைப் பார்! எப்படி ஆஜானுபாகுவாய் வளர்ந்திருக்கிறார்?' என்றார். நான் தயக்கத்துடன் வந்து நமஸ்காரம் செய்தேன். அப்போது சக்கர

வர்த்தி, 'ஆயனரே! சிவகாமியும் வளர்ந்து போயிருக்கிறாள்! முதலில் எனக்கு அடையாளமே தெரியவில்லை. கற்சிலை செய்வதோடு நீர் தங்கச் சிலையும் செய்ய ஆரம்பித்து விட்டீரோ என்று நினைத்தேன்' என்றார். இதனால் என்னுடைய நாணம் இன்னும் அதிகமாகி விட்டது. சற்று நேரம் பேசாமல் நின்று விட்டு அப்புறம் வீட்டிலிருந்து நழுவிக் காட்டுக்குள்ளே சென்றேன். தாமரைக் குளக்கரையில் உட்கார்ந்து எனக்கு என்ன வந்து விட்டது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.


''சற்று நேரத்துக்கெல்லாம் என் பின்னால் மிருதுவான காலடிச் சப்தம் கேட்டது. ஆனால் நான் திரும்பிப் பார்க்கவில்லை. தாங்கள் வந்து என் கண்களைப் பொத்தினீர்கள். மூன்று வருஷத்துக்கு முன்னால் இப்படிக் கண்களைப் பொத்தும் போது நான் உங்கள் பெயரைச் சொல்லிக் 'கலகல'வென்று சிரித்துக் கைகளைத் தள்ளிவிட்டுத் திரும்பிப் பார்ப்பேன். இப்போது தங்களுடைய கரங்கள் என் கண்களை மூடிய போது, என் தேகம் செயலற்று ஸ்தம்பித்தது. என் உள்ளத்திலோ ஆயிரக்கணக்கான அலைகள் எழுந்து விழுந்து அல்லோலகல்லோலம் செய்தன.

''பிறகு நீங்கள் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து என் கையை உங்கள் கையோடு சேர்த்துக் கொண்டீர்கள். நான் செயலற்றுச் சும்மா இருந்தேன். 'சிவகாமி! என் பேரில் கோபமா?' என்றீர்கள். நான் மௌனமாய் உங்களைப் பார்த்தேன். 'ஆமாம், கோபம் தான் போலிருக்கிறது!' என்று கூறி, தங்களுடைய யாத்திரையைப் பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டே போனீர்கள். ஆனால், நீங்கள் சொன்னது ஒன்றும் என் காதில் ஏறவேயில்லை. 'நீங்கள் என் அருகில் உட்கார்ந்திருக்கிறீர்கள்; நம் இருவருடைய கரங்களும் ஒன்றுபட்டிருக்கின்றன' என்னும் ஒரு உணர்ச்சிதான் என் மனத்தில் இருந்தது. அந்த நினைவு என்னை வான வெளியிலே தூக்கிக் கொண்டு போய் மேக மண்டலங்களின் மேல், மிதக்கச் செய்தது. தடாகத்துத் தண்ணீரில் மிதக்கும் தாமரை இலைகளின் மேலே நின்று என்னை நடனமாடச் செய்தது. தண்ணீருக்குள்ளே அமுக்கிக் கீழே கீழே கீழே கொண்டு போய் மூச்சு விட முடியாமல் என்னைத் திக்கு முக்காடச் செய்தது!....''

''என்னை எத்தகைய அசடாகச் செய்து விட்டாய் நீ! நான் சொன்னதையெல்லாம் நீ வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாக எண்ணியல்லவா என் யாத்திரை அநுபவங்களையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன்?''

''கடைசியாக, நீங்கள் விடைபெற்றுச் சென்ற போது, 'சீக்கிரத்தில் திரும்பி வருவேன்' என்று சொல்லி விட்டுச் சென்றீர்கள். அப்புறம் சில காலம் நான் தரையிலே நடக்கவேயில்லை. ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டேயிருந்தேன். என் வாழ்க்கையில் ஒரு மகத்தான அதிசயம் - அபூர்வமான புதுமை - யாருக்கும் கிடைக்காத அற்புதமான பாக்கியம் கிடைத்து விட்டதாகத் தோன்றியது. அதனால் என் கண்களுக்கு உலகமே புதிய தோற்றம் கொண்டது. வானத்திலும் பூமியிலும் அதுவரை காணாத வனப்புக்களையெல்லாம் கண்டேன். மல்லிகையும் முல்லையும் செண்பகமும் அதற்கு முன் நான் என்றும் அறியாத நறுமணத்தை அளித்தன. நீலவானம் புதிய மெருகுடன் பிரகாசித்தது. பட்சிகளின் கானத்தில் புதிய இனிமை தென்பட்டது. மூங்கில் காடுகள் காற்றில் அசையும் போது உண்டாகும் சப்தம் முன்னெல்லாம் அழுகைச் சப்தமாக எனக்குத் தோன்றும். இப்போது அதுவே ஆனந்த கீதமாக என் காதில் ஒலித்தது. செடிகளும் கொடிகளும் பட்சிகளும் பூச்சிகளும் ஆயிரம் ஆயிரம் குரல்களில் 'சிவகாமி! நீ கொடுத்து வைத்தவள்; பாக்கியசாலி' என்று ஆதரவோடு சொல்வதாகத் தோன்றியது. இரவிலே வானத்து நட்சத்திரங்கள் முன் எப்போதையும் விடக் குதூகலமாக என்னைப் பார்த்துச் சிரித்தன. வெண்மதியாகிய தந்தத் தோணியின் மேலே அமர்ந்து வானக் கடலில் அந்த விண்மீன்களிடையே சுற்றி வந்த போது, இப்போது நான் தனியாகச் சுற்றவில்லை; தோணியில் என் அருகில் நீங்களும் வீற்றிருந்தீர்கள்! எல்லையற்ற உள்ளக் கடலிலே தாலாட்டிய சிந்தனை அலைகளுக்கு மத்தியில் மிதந்த வாழ்க்கைத் தெப்பத்தில் நான் மட்டும் தனியாக இருக்கவில்லை; பக்கத்தில் தாங்களும் இருந்தீர்கள். அப்போதெல்லாம் எனக்குத் தானாகவே பாட்டுப் பாடத் தோன்றியது. ஆட்டத்தில் அளவில்லாத உற்சாகம் உண்டாயிற்று. நடனக் கலையில் நான் அடைந்த துரிதமான அபிவிருத்தியைக் கண்டு என் தந்தையே பிரமித்துப் போனார்....''

''சக்கரவர்த்தியும் நானும் கூடத்தான் அதிசயம் அடைந்தோம். பரத சாஸ்திரம் எழுதிய முனிவருக்கே எட்டாத நடனக் கலை விந்தைகளெல்லாம் உன் ஆட்டத்தில் வெளியாவதாக என் தந்தை அடிக்கடி சொன்னார். காஞ்சிமாநகரில் இராஜ சபை





"அரசியல்ல யார் யாரைப் பழிவாங்குவாங்கன்னே புரியலை போங்க!"

"இதுல புரியறதுக்கு என்ன இருக்கு...? எல்லா அரசியல்வாதிங்களுமே பொது மக்களைப் பழிவாங்குவாங்க!"

-- சீர்காழி வி. ரேவதி

யில் அரங்கேற்றம் நடத்த வேண்டும் என்று அவர்தான் வற்புறுத்தினார்."

"பிரபு! அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த அரங்கேற்றம் நடக்கும் சமயத்தில் என் மனநிலை மாறி விட்டது. அந்த மாறுதலை நினைத்தால் எனக்கே அதிசயமாயிருக்கிறது. மூன்று வருஷ பிரிவுக்குப் பிறகு தங்களைப் பார்த்ததும் எனக்குண்டான சந்தோஷம், குதூகலம் எல்லாம் சில நாளைக்குள் எங்கேயோ போய் விட்டன. வரவர, தங்களுடைய நினைவு எனக்கு மகிழ்ச்சியை அளிப்பதற்கு மாறாகத் துன்பத்தைத் தர ஆரம்பித்தது. எதைப் பார்த்தாலும் பிடிக்காமல் போய் விட்டது. சந்திரனும் நட்சத்திரங்களும் வெறுப்பை அளிக்கத் தொடங்கின. பொழுது விடிந்தால் ஏன் விடிகிறது என்று தோன்றியது. இரவு வந்தால் ஏன் இருட்டுகிறது என்று தோன்றியது. பூக்களைக் கண்டால் கசக்கி எறியத் தோன்றியது. என் கண்களிலிருந்து தூக்கம் மாயமாய்ப் போய் விட்டது. அருமையாக வளர்த்த மான் குட்டியையும் கிளியையும் வெறுக்கத் தொடங்கினேன். நடனக் கலையிலே கூட எனக்கு ஆசை குன்றத் தொடங்கியது. 'ஆட்டமும் பாட்டமும் என்ன வேண்டிக் கிடக்கிறது?' என்று எண்ணத் தொடங்கி விட்டேன்....... இந்தச் சமயத்தில்தான் அரங்கேற்றம் நடந்தது; அபசகுனம் போல் அது நடுவில் நின்று போனதில் எனக்குத் திருப்தியே உண்டாயிற்று....."

"அரங்கேற்றத்துக்குப் பிறகு தாமரைக் குளக்கரையில் நாம் சந்தித்தபோதும் நீ ஒரு மாதிரி வருத்தத்துடனேதான் பேசினாய். என்னிடம் வாக்குறுதி கேட்டாய்! எனக்கு அதெல்லாம் பெருவியப்பாயிருந்தது...."

"பிரபு! அச் சமயம் தங்களுடைய திருமணத்தைப் பற்றிய பிரஸ்தாபம் என் காதில் விழுந்தது. ஏற்கெனவே வேதனைக்குளாகியிருந்த என் உள்ளத்தில் அது வேலினால் குத்துவது போலிருந்தது. தாங்கள் எனக்கே முழுவதும் உரியவராயிருக்க வேண்டுமென்று கருதினேன். தங்களைப் பார்க்காமல் ஒரு கணம் போவது ஒரு யுகமாயிருந்தது. என்னுடைய தூண்டுதலினாலேதான் என் தந்தை காஞ்சிக்கு நாவுக்கரசர் பெருமானைப் பார்ப்பதற்கு வந்தார். அன்று நடந்ததைத் தாங்கள் அறிவீர்கள்...."

"அன்று நடந்ததை மட்டுமல்ல, சிவகாமி! உன் உள்ளத்தின் நிலைமையையும் அன்றைக்குத் தெரிந்து கொண்டேன். அதனாலேதான் மறுநாளே கண்ணபிரானிடம் ஓலை கொடுத்து அனுப்பினேன்."

"அந்த ஓலையிலிருந்து நான் காஞ்சிக்கு வருவது தங்களுக்கு விருப்பமில்லையென்று அறிந்தேன். தங்களைப் பார்க்காமல் நான் கழித்த எட்டு மாதமும் எனக்கு எட்டு யுகமாயிருந்தது. நாளுக்கு நாள் என் மன வேதனையும் நெஞ்சு வலியும் அதிகமாகி வந்தன. தங்களிடமிருந்து ஓலை வந்த இரண்டொரு தினங்கள் சிறிது உற்சாகமாயிருப்பேன். பிறகு துன்பம் அதிகமாகிவிடும். தங்களை ஒரு நாளும் இனிப் பார்க்கப் போவதில்லையென்றும், என்னுடைய பகற் கனவு ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லையென்றும் தோன்றும். 'இப்படி எதற்காக உயிர் வாழ வேண்டும்? இந்த வாழ்நாளை முடித்துக் கொள்ளலாம்' என்று அடிக்கடி எண்ணமிடத் தொடங்கினேன். இப்படியே கொஞ்ச நாளிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடலாம் என்று அடிக்கடி தோன்றியது..... பிரபு! தங்களுடைய விருப்பத்தின்படி அரண்ய வீட்டிலேயே காத்திராமல் ஏன் யாத்திரை கிளம்பி வந்தேன் என்று இப்போது தெரிகிறதா?" என்று சிவகாமி முடித்தாள்.

"தெரிகிறது, சிவகாமி! தெரிகிறது! இப்படிப் பிரளய வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு இரண்டு பேரும் திண்டாட வேண்டும். இந்த ஜன சூன்யமான ஏகாந்த தீவிலே வந்து ஒதுங்க வேண்டும் என்பதற்காகத்தான்! இது தெரியாதா என்ன?" என்று மாமல்லர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தத் தீவைப் பற்றிய அவருடைய வார்த்தையைப் பொய்ப்படுத்திக் கொண்டு, சற்றுத் தூரத்தில் வாத்திய கோஷங்களும் ஜனங்களின் ஆரவார ஒலிகளும் கேட்டன. இருவரும் திடுக்கிட்டு எழுந்திருந்தார்கள்.

(தொடரும்)

நம்பிக்கை

தார் உருகி ஓடும் மதிய வெம்மையில் தூரத்தில் வசுமதி வருவது ஜன்னல் கம்பிகள் வழியே துண்டுத் துண்டாய்த் தெரிந்தது. விஸ்வனாதன் திரும்பிப் படுத்துக் கொண்டான். கொஞ்ச நாளாய் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து வந்தான். 'அவள் வேறெங்காவது செல்லக் கூடாதா? நேராய் இங்குதான் வர வேண்டுமா?'

''என்னங்க! வசுமதி... வசுமதி...!'' - கிசுகிசுப்பாய் அவன் மனைவி.

இப்பொழுதுதான் புதிதாய்த் தெரிந்து கொள்பவன் போல் எழுந்து லுங்கியைக் கட்டிக் கொண்டு, அவசரமாய்ச் சட்டை தேடி அணிந்து...

கதவு தட்டுகிறாள்.

''வாங்க!''

சந்தோஷமாய் அழைக்க முடியாமல் எதுவோ தடுக்கிக் கொண்டு தொண்டைக்குள் மீன் முள்ளாய் உறுத்திக் கொண்டு இருந்தது. பளீரென்று வழித்துப் போட்டது போல் முகம். வெறுமையாய் நெற்றி. சலனமில்லாமல், எதையும் வெளிக் காட்டாத கண்கள். இழுத்துப் போர்த்திய புடைவை.

மூன்று மாதத்துக்கு முன் வசுமதிக்கும், அன்பழகனுக்கும் திருமணமான புதிதில் மின்னலாய் இருந்தவள்.

''நண்பா! அ ச த் த லா பொண்டாட்டி கிடைச்சிட்டா மட்டும் போதாது. ஒழுங்கா வச்சுக் காப்பாத்து. உன் முன்கோபத்தை அங்க காட்டாதே! அதெல்லாம் எங்களோட நிறுத்திக்கோ!''

-- கிண்டலாய் விஸ்வனாதன் சொன்னதற்குச் சிரித்தான் அன்பழகன்.

மூன்று மாதமும் சுத்தமான சந்தோஷ தினங்கள்.

'டிக்கெட் டிக்கெட்' என்று ஜனசமுத்திரத்தில், வியர்வை நாற்றத்தில், உரசல் கசகசப்பில், கண்டக்டர் தொழில் செய்வது தெரியாமலே அன்பழகனுக்கு ஆகாசத்தில் மிதப்பாய்க் கழிந்த அந்த தினங்கள். புதிய உலகில் சஞ்சரிப்பதாக உணர்ந்த அன்பழகன், விஸ்வநாதனிடம் வசுமதி பற்றியும், அவள் நற்குணம் பற்றியும் அந்த விபத்துக்கு முதல் நாள்தான் இந்த வெள்ளை நாடாக் கட்டிலில் உட்கார்ந்தபடி 'ம்கும் ம்கும்' என்று கனைத்துச் சிரித்தபடி சொன்னான்.

மறுநாள் மயங்கித் தூங்கி, கனவு கொண்டிருந்த இதே போன்ற ஒரு மதியத்தில் விஸ்வனாதன் உலுக்கப்பட்டான்.

''நம்ம அன்புக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிருச்சி. மேம்பாலம் இறக்கத்துல... ஸ்பாட்லேயே...''

அலறித் துடித்து ஓடிய போது அன்பு சாலையோரம் வெள்ளை விரிப்பால் மூடப்பட்டுக் கிடந்தான்.

புதுக் கனவுகளோடும், புது அனுபவங்களோடும் புருஷன் வீட்டிலிருந்து முதன் முறையாய் அம்மா வீட்டிற்குச் சென்றிருந்த வசுமதியை மயக்கமாய்த் தூக்கி வந்து போட்டார்கள்.

மூன்று மாதங்களாகி விட்டன.

''உட்காருங்க!''

நாடாக் கட்டிலைக் காட்டினான். தயங்கித் தயங்கித் தரையில் உட்கார்ந்தாள்.

''பசங்கள்ளாம் எங்கே?''

''ஸ்கூலுக்கு!'' என்றான் விஸ்வனாதன்.

''ம்!''

எதுவும் பேச முடியாமல் அன்பழகன் இறப்பு மட்டுமே திரும்பத் திரும்ப மனத்தில் சூறாவளியாய்ச் சுழன்றது. இந்த மூன்று மாதத்தில் எத்தனை மாற்றம்! அவளிடம் ஏதோ துறவி போல ஒரு சாந்தம் வந்து விட்டது. எங்கே போயிற்று அந்த 'பளிச் பளிச்'சென்ற பேச்சும் நடையும்? இறுக்கமாய் இவன் கால் நகத்தையும், வசுமதி சுவர்க் கடிகாரத்தையும் வெறித்துக் கொண்டிருந்தார்கள்.

விஸ்வனாதன் மனைவி மெல்ல வசுமதி அருகில் தரையில் அமர்ந்து கேட்டாள்.

''பணமெல்லாம் சரியா வந்துருச்சில்லே...?''

'என்னதான் அடக்கினாலும். அதட்டினாலும் இவளுக்கு ஏன் இந்த புத்தி போக மாட்டேனென்கிறது? கண்ணுக்கு நேராய் வசுமதியைப் பார்த்தபின்னும் கேள்வி மட்டும் 'பணம்'. அன்பழகன் பணி செய்த போதே இறந்து விட்டதால் அவளுக்கு வந்த பணம்!

''பத்து நாளாச்சி!'' என்றாள் வசுமதி.

''பத்திரமா பேங்க்ல போட்டு வச்சிக்கங்க. ஏதாச்சும் உதவி வேணுமானா இவரைக் கேளுங்க!'' என்று விஸ்வனாதனைக் காட்டினாள் அவன் மனைவி.

''ம்ஹூம்!'' என்று விரக்தியாய்ச் சிரித்து விட்டுச் சொன்னாள்.

''எங்க.. அம்பதாயிரம் போல புடுங்கிட்டாங்க!''

''யாரு?'' அதிர்ச்சியில் கத்தி விட்டான்

திருவையாறு பாலுசாமி

விஸ்வனாதன்.

''மாமனார் வீட்ல...''

''ஓ!''

வேலியாக இருக்க வேண்டியவர்களே மேய்ந்திருக்கிறார்கள். ஆ த ர வு காட்ட வேண்டியவர்களே அநியாயம் பண்ணியிருக்கிறார்கள். விஸ்வனாதனுக்கு இதில் என்ன செய்வது என்று தெரியவில்லை.

''எப்படி விட்டீங்க நீங்க!''

விஸ்வனாதனுக்குக் கை இலேசாக நடுங்கியது.

''பச்ச துரோகங்க இது!''

''விடுங்க!'' அமைதியாய்ச் சொன்னாள்.

''போறாங்க விடுங்க! பிள்ளை வளத்ததுக்குக் கூலின்னு வச்சிக்க வேண்டியது தான்...''

''அதெப்படிங்க! கோர்ட்டுக்கு இழுத்துடலாமே! அந்தாளைக் கோர்ட்டுக்கு இழுத்து ஊரைக் கூட்டி நாறடிக்கணும்....''

''நல்லாருக்கட்டும் விடுங்க... போனது போக மிச்சம்னு நானே கை கழுவிட்டேன்...''

இல்லங்க! நம்ம சங்க வக்கீல் இருக்காரு. ஒரு வார்த்தை சொன்னா போதும். கிழி கிழின்னு கிழிச்சுருவாரு. நீங்க நாளைக்கு வீட்டுக்கு வாங்க. ரெண்டு பேருமா போயி அவரப் பாப்போம்... நிலமை தெரிஞ்சுக்கிட்டு நோட்டீஸுக்கு ஏற்பாடு பண்ணிரலாம்....''

''ஐயோ அதெல்லாம் வேண்டாம்...''

''எதுக்குப் பயப்படறீங்க? யாரும் ஒண்ணும் பண்ணிட மு டி யா து. தைரியமா வாங்க...''

''பயத்துக்கில்ல... எனக்குப் பிடிக்கலே...''

''அப்ப பணம் போனா போகட்டுங்கிறீங்களா?''

''ஆமாம்...'' குரலில் அழுத்தம்.

'கண்ணெதிரே ஒரு பச்சைப் பரிதாபம். எப்படி சும்மா கைகட்டி வேடிக்கை பார்ப்பது? ஏதேனும் செய்தே ஆக வேண்டும்.'

''அப்ப நீங்க வர வேணாம். நான் மட்டும் போயி பாத்து...''

''இதோட விட்டுடுங்க இத....''

''இல்லங்க... எனக்குக் காரணம் புரியல...''

''எனக்குச் சொந்தம்னு சொல்லிக்க இங்க அவங்க மட்டுந்தான். அவங்களையும் பகைச்சுக்க நான் விரும்பல. இன்னிக்கில்லேன்னாலும் ஒரு நாள் அவங்க எங்கிட்ட வருவாங்க...''

''பிடுங்கிட்டாங்கன்றீங்க. அப்புறம் வருவாங்கன்றீங்க....''

''நிச்சயம் வருவாங்க....''

''நீங்க உங்க அப்பா அம்மா வீட்டுக்குப் போயிடலாமே....?''

''அங்க சூழ்நிலை சரியில்லே. எனக்குப் பின்னால் இரண்டு தங்கச்சிங்க இருக்காங்க. என்னால யாருக்கும் கஷ்டமோ, சுமையோ வந்துடக் கூடாது. அதுக்கும் மேல அவர் வாழ்ந்த இடம், பழகின இடம்.... அவர் வீடு... இதான் நல்லதுன்னு எனக்குப் படுது....''



விஸ்வனாதனின் மனைவி ஆற்றமாட்டாமல் கூறினாள்.

''என்னமோ போங்க. பணத்தப் பிடுங்கிட்டுப் போயிட்டாங்கன்னு சொல்றீங்க. அப்புறம் வந்துடுவாங்கங்கிறீங்க. போன பணம் நாளைக்கு வந்துருமா?''

திடீரென்று குரலில் ஆவேசம் ஏறக் கேட்டாள் வசுமதி.

''நாளைக்கு எனக்கொண்ணுன்னா அவங்க உடனே வருவாங்க. அவங்க உரிமை அது. நீங்க வருவீங்களா? பத்து நிமிஷம் யோசிச்ச பின்னாலதான் நீங்க வருவீங்க. எத்தனை நாளைக்குத்தான் நண்பனோட மனைவின்னு பார்க்க முடி யும். எல்லாத்துக்கும் ஒரு எல்லை இருக்கு. அதை மீறி உங்களால உள்ள வர முடியுமா, சொல்லுங்க!''

பயந்து போனான் விஸ்வனாதன்.

''சரி! விடுங்க! கோவம் வேணாம்!''



கொஞ்சம் புழுக்கமாக ஆகி விட்டது. தேவையின்றி மூக்கு நீட்டி விட்டோமோ என்ற கூச்சம்...

''காப்பி கொண்டா!''

கூச்சம் மறைக்க மனைவியை விரட்டினான்.

காப்பி குடித்து விட்டுக் கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தார்கள்.

''தப்பா ஏதும் பேசியிருந்தா மன்னிச்சுக்குங்க. நான் இங்க வந்ததே அவர் ஃபோட்டோ ஒண்ணு வாங்கிப் போவலாம்னுதான். ஆனா ஏதேதோ பேசி...''

''பரவாயில்லை. மனசு விட்டுப் பேசிடறது நல்லதில்லையா?''

தலைகுனிந்து மௌனமாய் அமர்ந்திருந்தாள் வசுமதி.

''அவன் ஃபோட்டோ நிறைய இருந்திச்சே வீட்ல?''

''அள்ளிட்டுப் போயிட்டாங்க! அவர் சட்டையும், செருப்பும் தவிர....''

''அப்படியென்ன வன்மம் உங்க மேல...?''

''அவங்க பிள்ளையைக் கல்யாணம் முடிஞ்சவுடனே சாகடிச்சது என் ஜாதகக் கோளாறாம். ஜாதகம், ஜோஸ்யம்னு ஜென்ம விரோதியாக்கிட்டாங்க என்ன...''

பழைய டிரங்க் பெட்டிகளைத் தும்மல் நெடியுடன் கிளறிக் கிளறிப் பார்த்தான் விஸ்வநாதன். எப்போதோ கபடி விளையாடப் போன போது பூதலூரில் எடுத்தது. நடுநாயகமாக உதடு விரியச் சிரித்துக் கொண்டு அன்பழகன். போட்டோவைக் கொடுத்தான். விஸ்வநாதனுக்குச் சிரிப்புடன் அன்பழகனைப் பார்த்ததுமே மனசு பிசைய ஆரம்பித்து விட்டது.

''குரூப் போட்டோ'தான் இருக்கு. பரவாயில்லையா?''

சலனமில்லாமல் 'அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''போதும்!'' என்றாள்.

அன்பழகன் மறைவால் அவள் நொறுங்கிய நொறுங்கலின் மொத்த பரிமாணத்தையும் ஒரு சிறு உழுதட்டுக் கடிப்பினால் மென்று விழுங்கி விட்டு நீர் படர்ந்த கண்களுடன் சொன்னாள்.

''வயித்துல வளர்ற அவர் குழந்தை நாளைக்கு அப்பா யார்னு கேட்டா காட்டறதுக்கு அவரோட நிழலாவது வேணுமே?''

உங்களது உயரம், உள்ளத்தின் உயரம்!

திருவள்ளுவர் ஒரு பள்ளிக்கூட இலக்கிய மன்ற விழாவுக்குப் பேசப் போனார்... ஒரு கற்பனைதான்! மாணவர்களை ஒரு கேள்வி கேட்டார்:

''தாமரைப் பூவின் உயரம் என்ன?''

ஒருவன் மற்றவனைப் பார்த்தான். அவன் அடுத்தவனைப் பார்த்தான். இது மாணவர்கள் டெக்னிக். அடுத்தவனைப் பார்த்து விட்டால் கேள்வியைத் தூக்கி அவன் தலை மேல் போட்டதாக அர்த்தம்!

ஒரு மாணவன் உத்தேசமாகச் சொன்னான்: ''தாமரையின் உயரம் இரண்டரை அடி.''

திருவள்ளுவர் கேட்டார்: ''ஏன் நாலடி இருக்காதோ?''

பளிச்சென்று பையன் சொன்னான்: ''வைச்சுக்குங்க... எனக்கென்ன? அது என்ன எங்க வீட்டுத் தாமரையா? உங்க வீட்டுத் தாமரையா?''

மாணவர்களோடு சேர்ந்து வள்ளுவரும் சிரித்தார். ஆனால், ''ஒருவருக்கும் உண்மை தெரியவில்லையா?'' என்று வருத்தத்தோடு வினவினார்.

ஒரு புத்திசாலிப் பையன் எழுந்து சொன்னான்: ''ஐயா, உங்கள் கேள்வி தவறு. தாமரைக்கு என்று ஏது உயரம்? தண்ணீரின் உயரம், தாமரையின் உயரம். தண்ணீர் மேலே போகப் போகத் தாமரை மேலே போகும். தண்ணீருக்கு மேலே இருப்பதுதான் தாமரையின் இலட்சியம்.''

திருவள்ளுவர் மகிழ்ந்து போனார்: ''சபாஷ்... வாழ்க்கையில் உன்னுடைய உயரம் என்ன?''

மாணவன் சொன்னான்: ''என்னுடைய உயரம் என் எண்ணத்தின் உயரம்.''

''வெள்ளத் தனைய மலர்நீட்டம்;
மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.'' என்று உற்சாகமாகக் குறள் உரைத்தார் திருவள்ளுவர்.

என்னைச் செயற்கையாக யாரும் உயர்த்தி விட முடியாது. என் உயரம் என் எண்ணத்தைப் பொறுத்தது. இது சத்தியம்.

பெரிய இடங்களில் தகுதி அற்றவர்களை உட்கார வைத்தாலும் நல்ல எண்ணங்கள் இல்லை என்றால், அங்கே அவர்களால் நீடிக்க முடியாது. பெரிய தலைவர்களாகச் சிலரைப் போஸ்டர்களாலும் கட் அவுட்டுகளாலும் தூக்கி நிறுத்தினாலும் வலுவான எண்ணங்கள் இல்லாதவர்கள், தலைமை நிலைகளை இழப்பது உறுதி.

அந்த எண்ணங்களின் பிறப்பிடம், இருப்பிடம், ஏன் இறப்பிடம் எல்லாமே மனம்தான். அதைப் பொறுத்தே உயர்வு. உள்ளத்தனையது உயர்வு.

உலகில் உருவான எண்ணங்களிலேயே உயர்வான எண்ணம், கடவுள் என்ற எண்ணம். அதன் தூய்மை, ஆற்றல், பெருமை எல்லாமே எல்லையற்றவை. காலத்துக்கும் பரிமாணங்களுக்கும் சொற்களுக்கும் அப்பாற்பட்ட, எல்லையற்ற ஒன்றை, நமது உள்ளத்தில் அடக்கி வைக்கலாம் என்ற சிந்தனையே எவ்வளவு உயர்வானது! உள்ளம்தான் கடவுள் குடியிருக்கும் இடம் என்ற கருத்தில், 'மனத்தகத்தான் தலைமேலான்,' 'நினைப்பவர் நெஞ்சமே கோயிலாகக் கொண்டான்,' 'உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்' என்றெல்லாம் ஞானிகள் மொழிந்தனர்.

இதயத்தில் எதைத்தான் வைப்பது என்பதில் இளைஞர்கள் தெளிவுடன் இருக்க வேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்து, அப்பா இரும்பு பீரோ வாங்கி வந்து வீட்டில் வைத்தார். ஏதோ காரியமாகச் சென்றவர், மாலை வீடு திரும்பி பீரோவைத் திறந்தார். பழைய செருப்பு, தேய்ந்த விளக்குமாறு, வண்ண ஜாலம் காட்டும் எண்ணெய்ப் பிசுக்கடைந்த சட்டிப் பிடித் துணி, உடைந்த அலுமினியக் கிண்ணம் என்று உள்ளே வைத்திருந்தால் அந்தப் பெற்றவன் வயிறு எப்படி எரியும்?

விலை மதிப்பில்லாத இந்த இதயத்தைக் கடவுள் கொடுத்தார். அதில் ஒழுக்கம் கெட்ட ஒரு சிலரை உள்ளே வைத்திருப்பது

சுகிசிவம்

தருமா? களவு, பொய், காமம் இவற்றைக் கடைப்பிடித்து வாழும் சில தலைவர்களை இதயத்தில் வைத்துப் பூசிக்கிறேன் என்றால், இரும்பு பீரோவைத் திறந்த, பெற்றவன் வயிறு எரிந்தது போல், படைத்தவன் மனதும் பற்றி எரியாதா?

அரசியல் அழுகல்களையும், சினிமாச் சொத்தைகளையும் இதயத்தில் இருந்து அப்புறப்படுத்துங்கள். 'இறைமை, இறைவன்' என்ற தூய எண்ணத்தை இதயம் முழுவதும் நிரப்புங்கள். உள்ளத்தின் உயரமே உங்கள் உயரம் -- மறவாதீர்கள்.

உள்ளத்தை வைத்தே உங்களை உலகம் மதிப்பிடுகிறது. நாள்தோறும் சிவபெருமான் மீது, ஒரு கல்லை விடாமல் எறிந்தார் சாக்கியர். அவர் நாயனார் என்று மதிக்கப்பட்டார். சிவ பெருமான் மீது ஐந்து மலர்களை வீசினான் மன்மதன். அவன் எரிக்கப்பட்டான். ஏன்? காரணம், இரண்டுக்கும் பின்னால் இருந்த மனம்.

சிவ பெருமானை வணங்க நினைத்துக் கல்லை எறிந்தார் சாக்கியர். அந்தச் சிவனைக் காம வயப்படுத்தமலர்களை வீசினான் மன்மதன். செயல்களின் பின்னால் உள்ள மனம்தான் அளக்கப்படுகிறது.

ஓர் ஆற்றங்கரை வழியே இரண்டு பிஞ்சுத் துறவிகள் நடந்து போனார்கள். அப்போது ''வயது பதினாறு இருக்கும்'' என்ற பாரதியின் வாக்குப் போலச் சதையால் எழுதப்பட்ட கவிதை ஒன்று, தண்ணீரில் தவறி விழுந்து விட்டது. ''உதவி! உதவி!'' என்று அலறியபடி தண்ணீரில் மூழ்கினாள் அவள்.

முதல் துறவி யோசித்தார்: 'ஓடிப் போய்க் காப்பாற்றலாம். ஆனால் அவளைத் தொட வேண்டி வருமே...? காவி கொடுக்கும் போதே திருமடத்தின் தலைவர், 'பெண்களைக் கனவிலும் நினைக்காதே... எப்போதும், எந்த நிலையிலும் தொடாதே' என்று எச்சரித்தாரே!' என்று சிந்தித்துத் தயங்கினார்.

அடுத்தவர் இதையெல்லாம் நினைக்கவே இல்லை. ஆற்றில் பாய்ந்து, இளம் பெண்ணைக் கரைக்குக் கொண்டு வந்து, முதல் உதவி அளித்துக் கண் திறக்க வைத்தார். கண் விழித்தவள், ''நன்றி'' என்றாள். ''நல்லது தாயே, வருகிறேன்'' என்று புறப்பட்டார்.

இதையெல்லாம் பார்த்த முதல் துறவி, திடுக்கிட்டார். ''இளம் பெண்ணை எப்படித் தொடலாம்? தொட்ட போது ஒரு



மாதிரியாக இருந்திருக்குமே? ஐயய்யோ! தப்பு! தப்பு!'' என்றார்.

இரண்டாமவர் பேசவில்லை. 'ராம் ராம்' என்றபடி நடந்து கொண்டே இருந்தார். முதல் துறவி விடுவதாக இல்லை. ஆசிரமத்தை நோக்கி நடந்த மூன்று மைல் தூரமும் இதைப் பற்றியே புலம்பினார்.


ஆசிரமம் வந்த பிறகும் புலம்பல் நிற்கவில்லை. குரு தேவரிடம், ''பெண்ணைத் தொட்டான்; தோளில் தூக்கினான்; தலைக்கு மேலே சுழற்றினான்'' என்றெல்லாம் புகார் செய்தார்.

'ஆசிரமத்தை விட்டு வெளியே போ' என்று முதல் துறவிக்கு உத்தரவு வந்தது. ''ஐயய்யோ, அவனல்லவா அவளைத் தொட்டுத் தூக்கினான்? நான் என்ன தவறு செய்தேன்?' என்று கதறினார் அவர்.

குரு சொன்னார்: ''அவன் அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கியது உண்மை. ஆனால் ஆற்றங்கரையிலேயே இறக்கி விட்டு விட்டான். நீதான் அவளை ஒரு மணி நேரம் - மூன்று மைல் தூரம் - சுமந்து ஆசிரமத்துக்குள் கொண்டு வந்திருக்கிறாய். அவன் உடம்பால் சுமந்தான். நீதான் உள்ளத்தால் நீண்ட நேரம் சுமந்த பாவி.''

உள்ளத்தின் உயரம்தான் உங்கள் உயரம் என்று வள்ளுவர் சொன்னது சரிதானே!

(இன்னும் சொல்வேன்)


விரக்தி
மருத்துவமனைச்
செலவுகளுக் குப்
பணம்
எங்கிருந்து கிடைக்கப்
போகிறது என
புரியாமல் இருக்கும் நிலை.

20

ஆகாசத்

சந்தியாவும் மூர்த்தியும் அவர்கள் வீட்டுக்குச் சென்ற போது நாலைந்து போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

ஹாலில் 'சிவில்' உடையில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். நல்ல உயரம். ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். சந்தியாவுக்கு அவரை எப்பொழுதோ எங்கோ பார்த்திருப்பது போல் பட்டது.

அவர் மூர்த்தியைக் கண்டதும் கைகுலுக்கினார்.

''என்னை நினைவிருக்கிறதா?''

மூர்த்தி அவரைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தார்.

''ஓ! மை காட்! பாண்டே! 'சந்தோஷமான ஆச்சரியம்' என்று சொல்வதா இல்லாவிட்டால் 'துக்ககரமான ஆச்சர்யம்' என்று சொல்வதா எப்படிச் சொல்வது? வீட்டைப் பரிசோதனை செய்வதற்கு முன்னால் தேநீர் குடித்து விட்டுச் செய்யுங்கள், இனிய பழைய நாட்களின் நினைவாக...!'' என்றார் மூர்த்தி பாண்டேயைத் தழுவியவாறு.

சந்தியாவுக்கு ஞாபகம் வந்தது. அப்பா கௌஹாத்தியிலிருந்த போது, பாண்டே அங்கே போலீஸ் சூப்ரெண்டண்ட்டாக இருந்தார். அப்பாவின் 'பிரிட்ஜ்' விளையாடும் தோழர்களிலொருவர்.



''ஐ ஆம் ஸாரி. மேஜர் ஜெனரல் மூர்த்தி...'' என்று தொடங்கிய பாண்டேயை மூர்த்தி இடைமறித்தார்.

''ப்ளீஸ்.... நோ மேஜர் ஜெனரல் ஸ்டஃப், நான் மிஸ்டர் மூர்த்தி, ஓய்வு பெற்றவனுக்கு என்ன பட்டம் வேண்டிக் கிடக்கிறது. வீட்டைப் பரிசோதனை செய்யவே வந்திருக்கும் போது, ராணுவப் பட்டப் பெயரெல்லாம் எதற்கு?''

''இதை நான் செய்ய விரும்பவில்லை. நான் அப்பொழுது பார்த்த இந்தச் சின்ன பெண் சந்தியாவால் அரசாங்கத்துக்கே ஆபத்து என்று மேலிடத்தில் கருதுகிறார்கள். இதுவும் ஒரு வகையில் சந்தியாவுக்குப் பாராட்டுதான்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் பாண்டே.

''என்னுடைய அறையைத்தானே பரிசோதிக்க வேண்டும், தாராளமாகச் செய்யுங்கள். வாரன்ட் இருக்கிறதா?'' என்றாள் சந்தியா.

சப் - இன்ஸ்பெக்டரை அழைத்தார் பாண்டே. ''வாரன்டை எடுத்துக் காட்டுங்கள்'' என்றார் அவனிடம்.

அவன் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான். அதை அவர் சந்தியாவுக்குக் காட்டினார்.

''பரிசோதனை செய்ய உயர்ந்த அதிகாரியாக இருக்கும் நீங்களே வந்திருப்பதும் எனக்குப் பாராட்டுதான்'' என்றாள் சந்தியா.

''நான் வரத் தேவையில்லை. இருந்தும் நானாகவே முன்வந்தேன். சரி... உன் அறையைக் காட்டு.''

சந்தியா வேகமாக முன்நடந்தாள். பாண்டேயும் சப் - இன்ஸ்பெக்டரும் அவளைத் தொடர்ந்தார்கள்.

சந்தியாவின் அறை துப்புரவாக இருந்தது.

சுவரில் அங்குமிங்கும் சில நவீன வண்ண ஓவியங்கள். நீண்ட புத்தக அலமாரி. மேஜையில் ஒரு துண்டுக் காகிதம் கூட கிடையாது. சுத்தமாக இருந்தது.

இந்திரா பார்த்தசாரதி

தாமரை

''இந்த அறையை நீ பயன்படுத்துவதே கிடையாதா?'' என்றார் பாண்டே.

''ஏன்?''

''புழக்கத்திலிருப்பதாகவே தெரியவில்லையே?''

''என் வேலை எல்லாம் அறையில் இல்லை, வெளியில்தான்'' என்றாள் சந்தியா.

பாண்டே புன்னகை செய்தவாறு, புத்தக அலமாரியில் இரண்டொரு புத்தகங்களை எடுத்துப் பார்த்தார். பிறகு மேஜையின் இழுப்பறைகளைத் திறந்து பார்த்தார். சந்தியா எழுதி வைத்திருந்த சில தாள்கள். அவற்றை அவர் மேலோட்டமாகப் பார்த்தார்.

''ஒன்றும் புரியவில்லை'' என்றார் பாண்டே.

''இதற்காகவே என்னைக் கைது செய்யலாம். புரியாமலெழுதுவது ஒரு பெருங் குற்றம். ஜூலியஸ் ஸீஸரில் பொது மக்களில் ஒருவன், சின்னா என்ற கவிஞனைச் சுட்டி, இவனுடைய மோசமான கவிதைகளுக்காக இவனைக் கிழித்தெறியுங்கள் என்கிறான்... அது போல்...''

பாண்டே வாய் விட்டு உரக்கச் சிரித்தார்.

''நீ சின்னா என்ற சதிகாரர் இல்லை என்கிறாய், அப்படித்தானே?''

''தீர்ப்பளிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.''

''சரி, போகலாம்'' என்று கூறிக் கொண்டே அறையை விட்டு வெளியே வந்தார் பாண்டே.

சப் - இன்ஸ்பெக்டர் இப்பரிசோதனை சரிவர நடைபெறவில்லை என்று நினைத்தது போல் அவன் முகபாவனையில் தெரிந்தது.

''என்ன இதற்குள் வந்து விட்டீர்கள்? சோதனை என்றால், அலமாரி, மேஜை எல்லாவற்றையும் அரை மணி நேரம் அலங்கோலப்படுத்தி விட்டல்லவா வர வேண்டும்?'' என்றார் மூர்த்தி பாண்டே விடம்.

''நான் சந்தியாவிடம் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்,'' என்றார் பாண்டே.

''ஓ.கே... நான் என் அறைக்குப் போகிறேன்'' என்று கூறிக் கொண்டே எழுந்தார் மூர்த்தி.

''நீங்களும் வாசலிலிருங்கள்'' என்று சப் இன்ஸ்பெக்டரிடம் சொன்னார் பாண்டே.

சிறிது நேரம் மௌனம்.

''ஹூம். கேளுங்கள். ஏன் பேசாமலிருக்கிறீர்கள்?'' என்றாள் சந்தியா.

ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் பேரைச் சொல்லி, அவருக்கும் சந்தியாவுக்கும் ஏதாவது தகராறா என்று வினவினார் பாண்டே.

''ஓ! ஐ ஸீ... இப்பொழுது புரிகிறது'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சந்தியா.

''என்ன புரிகிறது?''

''நான் அவர் கன்னத்தில் அறைந்தேன்...''

''என்ன சொல்லுகிறாய்?''

சந்தியா தான் அமைச்சரைப் பார்க்கச் சென்றது, அங்கு என்ன நடந்தது என்பது பற்றி விளக்கமாகச் சொன்னாள்.

''மை காட்! இதை ஏன் நீ அம்பலப் படுத்தவில்லை? நான் போலீஸ்காரன் என்ற முறையில் கேட்கவில்லை, குடும்ப நண்பன் என்ற முறையில் கேட்கிறேன்.''

''தெருவில் நடந்து செல்கிறோம். அழுக்கு மேலே ஒட்டிக் கொள்கிறது. அதைத் தட்டி எறிய வேண்டுமே தவிர, உலகத்துக்கு அதைப் பற்றிப் பறைசாற்ற வேண்டுமா?''



''இப்பொழுது அந்த அமைச்சர் உன்னைப் பழிவாங்க இருக்கிறார்.''

''எப்படி? நான் என்ன தவறு செய்தேன்?''

''நீ சில தினங்களுக்கு முன்பு சண்டிகார் போனதை வைத்துக் கொண்டு உனக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கிறதென்கிறார் அந்த அமைச்சர்.''

''நிரூபணம்?''

''நூற்றுக்கணக்கான துப்புக்களைப் போலீஸால் உற்பத்தி செய்ய முடியுமென்பதை நீ மறந்து விட்டாய்....''

''சரி, உற்பத்தி செய்து, என்னைக் கைது செய்து கொள்ளுங்கள், எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றாள் சந்தியா.

''நானே நேரில் வந்ததற்கு இதுதான் காரணம்'' என்றார் பாண்டே.

''எதுதான் காரணம்?''

''அமைச்சருடைய 'ஈகோ' பாதிக்கப்பட்டிருக்கிறது. நேரில் பார்த்து நீ செய்த தற்கு வருத்தம் தெரிவித்து விட்டு, சமூகப் போராட்டங்கள் நடத்துவதினின்றும் நீ விலகி விடுவதுதான் விவேகம். இந்தச் சமூகத்துக்கு இப்பொழுதைய சூழ்நிலையில் விடிவுகாலம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.''

''அந்த அமைச்சர் உங்கள் மூலம் சொல்லி அனுப்பிய செய்தியா இது?'' என்று கோபத்துடன் கேட்டாள் சந்தியா.

''நோ... சத்தியமாக இல்லை. மிஸ்டர் மூர்த்தி என் அருமை நண்பர். கௌஹாத்தியில் உங்கள் வீட்டில் பல இனிய மாலைப் பொழுதுகளை நான் கழித்திருக்கின்றேன். அமைச்சர் சொல்லி அனுப்பிய செய்தியா என்று கேட்டு என்னைத் தயவு செய்து அவமானப்படுத்தாதே... அரசியல் சகதியில் கல்லை விட்டெறிந்தால் நம் உடைகள்தாம் வீணாகும், அதற்காகச் சொன்னேன். நான் இன்னும் மூன்று மாதங்களில், 'வாலண்டியரி ரிடையர்மென்ட்'டுக்காகக் கடிதம் கொடுக்கப் போகிறேன். அமைச்சருக்காகத் தூது வந்து ஆதாயம் பெற வேண்டிய அவசியம் எனக்கில்லை.''

''ஐ ஆம் ஸாரி. உங்களைப் புண்படுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், அந்த அமைச்சர் என்னைப் பழிவாங்க இவ்வாறு செய்தாரென்றால், என்னால் என்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நான் எந்தத் தவறும் செய்யவில்லை, வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.''

''சரி.. உன் இஷ்டம். உன் நல்லதுக்குச் சொன்னேன். இப்பொழுது நடப்பனவெல்லாம் தர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையே நிகழும் போராட்டமல்ல. அதர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையே நிகழும் போராட்டம் - தர்மம் என்ற சொல், சமூக அகராதியினின்றும் எப்பொழுதோ எடுத்துத் தூக்கி எறியப்பட்ட சொல்...'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் பாண்டே.

''அடுத்த கட்டம் என்ன?'' என்றாள் சந்தியா புன்னகையுடன்.

''உன் மீது ஏதாவது குற்றம் சுமத்தி உள்ளே தள்ளப் பார்ப்பார்கள்.

மூர்த்தி அப்பொழுது அங்கு வந்தார்.

''பேசி முடித்தாகி விட்டதா?'' என்றார் மூர்த்தி.

''சந்தியாவுக்கு எது நல்லதென்று சொல்ல முயன்றேன். அவள் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்றார் பாண்டே புன்னகையுடன்.

''எது நமக்குச் சௌகர்யமானதோ அது தான் நல்லது'' என்றார் மூர்த்தி.

''அதைத்தான் நானும் சொன்னேன்.''

''சரி, தேநீர்...?''

''வேண்டாம். ஏற்கெனவே என் சப் - இன்ஸ்பெக்டர் என்னைச் சந்தேகக் கண்களுடன் பார்க்கிறான். இன்னொரு நாள், வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு - அது வெகு தூரத்திலில்லை - வருகிறேன்,''



கல்கத்தாவில் மாநில இந்திரா காங்கிரஸ் கமிட்டி ஆபீஸில், தேர்தலில் நிற்க டிக்கட் கிடைக்காத ஊழியர்கள் அங்கிருந்த மேஜை, நாற்காலி, தட்டுமுட்டு சாமான் என்று கிடைத்தவற்றையெல்லாம் உடைத்தெறிந்து கோபத்தைத் தணித்துக் கொண்டனர். சித்தார்த்த சங்கர்ரே, அஜீத்பாஞ்சா, பிரணாப் முகர்ஜி என்று பலர், முன்பு கட்சிக்கு எதிராகச் செயல்புரிந்தவர்கள் இன்று கட்சியில் அனுமதிக்கப்பட்டு, டிக்கட்டுகள் வழங்கப்பட்டுள்ளனர். உண்மை ஊழியர்களுக்கு டிக்கெட் மறுக்கப்படுகிறது என்பதுதான் கோபத்துக்குக் காரணம்.

- சேலம் சக்திக்கொடி.

என்றார் பாண்டே.

அப்பொழுது டெலிஃபோன் ஒலித்தது. சந்தியா எடுத்தாள்.

சாவ்லாவிடமிருந்து ஃபோன். அவர் கோபத்தில் கத்தினார். அவருடைய குரல் மூர்த்திக்கும் கேட்டது.

''யாரு சாவ்லாவா?'' என்றார் மூர்த்தி சந்தியாவிடம்.

அவள் தலையசைத்தாள்.

''கோபப்படாதீர்கள். உங்களுக்கு இரத்த அழுத்தந்தான் கூடும். இப்பொழுதுதான் என் நண்பர் ஒருவர் சொன்னார், 'இப் பொழுது நடப்பனவெல்லாம் அதர்மத்துக் கும் அதர்மத்துக்குமிடையே நிகழும் போராட்டந்தான்; தர்மம் வழக்கிழந்து போன சொல்' என்று. அவர் சொல்வது உண்மையோ என்ற பயம் எனக்கேற்பட்டிருக்கிறது. பொறுமையாக இருங்கள், நான் பிறகு வந்து உங்களைப் பார்க்கிறேன்,'' என்றாள் சந்தியா.

''என்ன ஆகி விட்டது?'' என்றார் மூர்த்தி.

''அரசாங்கம் அவர் நிலத்தை எடுத்துக் கொண்டு விட்டது. அங்கும் பலத்த போலீஸ் காவல்'' என்றாள் சந்தியா.

''நான் வருகிறேன்'' என்று புன்னகை யுடன் வெளியே சென்றார் பாண்டே.

''என்ன செய்யப் போகிறாய்?'' என்றார் மூர்த்தி.

''யோசிக்க வேண்டும்.''

''பாண்டே என்ன சொன்னார்?''

''விலகி விடு என்கிறார். அது கோழைத் தனம்.''

''கோழைத்தனமல்ல. விவேகம். ஒரு குரூரமான அமைப்புடன் மோதுவதென் பது, கடும் பாறையில் முட்டிக் கொள்வது போல. மண்டைதான் உடையும்.''

சந்தியா பேசாமல் சிறிது நேரம் உட் கார்ந்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது மறுபடியும் டெலிஃபோன் ஒலித்தது.


சந்தியா எடுப்பாளென்று மூர்த்தி பேசாம லிருந்தார். அவள் எழுந்திருக்கவில்லை. அவர் எழுந்து போய் எடுத்தார்.

''மூர்த்தி... எஸ். சந்தியாவின் அப்பா. வாட்? என்ன சொல்றேள்? நெஜமாகவா? ஓ.கே. அவளிடம் சொல்றேன்,'' என்றார் மூர்த்தி.

''என்ன?'' என்றாள் சந்தியா குரலில் சிறிது நடுக்கம் தோன்ற.

''அந்தப் பொண்ணு கோமளா தற் கொலை பண்ணிண்டுட்டாளாம், மஞ்சுளா கிட்டேயிருந்து ஃபோன்...'' என்றார் மூர்த்தி.

(தொடரும்)



''சட்டையைக் கிழிச்சுக்கிட்டு நடு ரோட்டுல ஒருத்தர் ஓடுறாரே, யார் அது?''

''எந்த அரசியல் கட்சிக்காரர் பொதுக் கூட்டத்திலே பேசினாலும், தவறாமல் போய்க் கேட்பாரே, அவர்தான்!''

- சீர்காழி. வி. ரேவதி.



தேர்தல்!

நீ இன்று நீதிபதி!
குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்தி
விசாரிக்க வேண்டும் நீ!
தவறிப் போய்...
வழக்கம் போல்...
கூண்டில் நீயே
நின்று விடாதே!

— எம். ஜோஸப் ராஜ்.


தேர்தல் அதிகாரி: ''ஏற்கெனவே உங்க கையில மை இருக்கே... கள்ள வோட்டுப் போட வந்திருக்கீங்களா?''

வாக்காளர்: ''நீங்க ஒண்ணு... அடிக் கடி தேர்தல் வந்து போய்க்கிட்டு இருக் கிறதால போன தேர்தலுக்கு வச்ச மையே இன்னும் அழியலை.''

''கட்சித் தலைவர் ஏன் திடீர்னு லுங்கி கட்டிக்க ஆரம்பிச்சிட்டாரு?''

''அது லுங்கி இல்லை... பல தோழமை கட்சிகளோட கரை போட்ட கூட்டணிவேஷ்டி...!''

- வி. கி. குமார்.



விரதம்

அந்த ஊரில் என்னை எதுவும் பாதிக்கவேயில்லை. கிராமம் என்று நான் கற்பனை பண்ணிவைத்திருந்த சமாசாரங்கள் எல்லாம் வேறு! சினிமாவில் காண்பிப்பது போல் ஓர் ஓடை. தூரத்தில் மலையும் மேகங்களும் இருக்க... தரையெங்கும் பச்சை. இளம்பெண்கள் எல்லாம் முழங்காலுக்கு மேல் புடைவைகட்டியிருக்க... இழவிகள் எல்லாம் காது தொங்கல்களுடன் பழமொழியும் நாட்டுப்பாடலும் சொல்ல... ப்ச்! ஒன்றுமேயில்லை... கொளுத்தும் வெயிலும் பறக்கும் தூசியும் தான் இந்தக் கிராமத்தில் நான் கண்டது.

இந்தக் கிராமத்துக்கு நான் வந்தது அரசு உத்தியோகமாற்றலினால். என்ன உத்யோகம் என்று சொல்லலாம். ஆனால் அதற்கும் இந்தக் கதைக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை. எனக்கு இங்கிருக்கக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. சுகந்தாவுக்கும் எழுதிப்போட்டுவிட்டேன். வேண்டாம் நீ அங்கேயே இரு. சீக்கிரம் லீவு போட்டு விட்டு வந்து விடுகிறேன்.

ஆனால் இந்தக் கிராமத்தில் எனக்கு ஆதரவாய் இருந்தது முத்துசாமிதான், அவன் எனக்கு உதவியாளன். எப்பொழுதும் என் கூடவே இருப்பான். அவன் இவன் என்று சொல்வது அலுவலக மேலதிகாரி என்ற முறைப்படிச் சொல்லலாம். ஆனால் என்னைவிடப் பத்து வயது மூத்தவன். வெள்ளைக் கதர் சட்டையும் வேட்டியும் உடுத்திக் கொண்டு, இதற்குமேல் ஒருவன் இளைக்கமுடியாது என்ற உருவத்தில் இருந்த முத்துசாமிக்குக் குடும்பமோ பிள்ளைக்குட்டிகளோ இருந்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு முறையும் கேட்க வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் அடுத்தவர் விவகாரங்களில் அவ்வளவாகத் தலையிடுதல் எனக்குப் பிடிக்காது. எனவே என்ன நினைத்துக் கொள்வானோ(ரோ) என்ற நினைப்பில் கேட்காமல் இருந்துவிடுவேன்.

நாங்கள் சாயங்காலவேளைகளில், ஏதாவது ஒரு பம்ப் செட்டில் உடல் குளிரக் குளித்துவிட்டு, சூடாய் ஒரு 'டீ' சாப்பிட்டுவிட்டு, சுற்றக் கிளம்புவோம். கால் நடையாய் எங்கெல்லாம் தோன்றுகிறதோ அங்கெல்லாம் செல்வோம். (பொழுது போக வேண்டுமே!) ஒரு நாள் ஏரிக்கரை. ஒரு நாள் மாந்தோப்பு. ஒரு நாள் குமரன் டாக்கீஸில் - 'கலைக்கோவில்' (புத்தம் புதிய காப்பி).

ஒவ்வொரு நாளும் எங்கே செல்ல வேண்டும் என்று நான்தான் தீர்மானிப்பேன். முத்துசாமி மறுத்ததோ, வேண்டாம் நான் வரவில்லை வேலையிருக்கிறது என்று சொன்னதோ கிடையாது. நான் இழுத்த இழுப்புக்கு வந்து கொண்டிருந்தான்.

அன்றைக்கு எனக்கு லீவு. மதியம் நெத்திலி மீன் குழம்புச் சாப்பாடு கண்களைக் கிறக்கியது. தூங்கி விழித்து, நான்கு மணிக்கெல்லாம் கிளம்பிவிட்டோம். வழக்கமாய்ச் செல்லுமிடம் தான் - ஏரிமதகுக்கருகில் புளியமரத்தடி. நாட்டாண்மை வீட்டில் கொடுத்து அனுப்பியிருந்த அவித்த வேர்க்கடலையைக் கொறித்தபடி, படிப்பதற்கு மாலை தினசரி வாங்கி வந்திருந்தேன்.

பாராளுமன்றத்தில் அமளி! என்று பேப்பரில் முக்கியச் செய்தியாய்க் கடையில் தொங்கவிட்டிருந்த தாளைப் பார்த்ததும் வாங்கி விட்டேன். அமளியாமே...? எப்பேர்ப்பட்ட தேசமிது. இந்த அமளிக்காகவா அன்றைக்கு அத்தனை பேர் வெள்ளைக்காரனிடம் அடிபட்டது?

புளியமரத்தடியில் அமர்ந்து பேப்பரை உடனே படிக்க வேண்டும் என்று பிரித்ததும் தெரிந்தது. அடடா கண்ணாடி கொண்டுவரவில்லை! முத்துசாமியிடம் பேப்பரை நீட்டினேன்: ''கொஞ்சம் படிக்கச் சொல்லு - கண்ணாடி கொண்டாரலை.''

நான் சொன்னது அவன் காதில் கேட்காதது போல் முத்துசாமி மௌனமாயிருந்தான்.

''முத்துசாமி! படியேன். என்ன நடந்துச்சுன்னு சொல்லேன்'' என்றேன்.

முத்துசாமி திரும்பி, ''இப்போ என்னா சார் அவசரம்? வீட்டில போய்ப் படிச்சுக்கங்க. வால்குருவி பாத்திருக்கீங் களா. அங்க எலந்த மரத்துக்கு அந்தாண்ட தெரியுது பாருங்க அதான்'' என்றான்.

எனக்கு வழக்கமாகவே முன்கோபம் ஜாஸ்தி. முத்துசாமியிடம் மட்டும் அது, இது வரை தலை காட்டியதில்லை. இன்றைக்கு எகிறியது.

''படிச்சுக்காட்டப் போறியா? இல்

எஸ்.ஷி.ஆர்.

வியா?''

''இல்ல வேண்டாம் விட்ருங்கசார்!''

''அவசரம்! படியேன்!''

முத்துசாமிக்குச் சற்றுக் கோபம் வந்தது போலிருந்தது: ''என்ன அவசரம்? படிச்சு பாராளுமன்றத்த மாத்தப் போறீங்களா? இல்லியே! ராத்திரிக்குப் படிச்சுக்கலாம்'' என்றான்.

புத்தி சொல்கிறான்! கிண்டல் தொனியுடன்! நான் யார்! இவனுக்கு என் அதிகாரத்தைக் காட்டவேண்டும்!

''படிப்பியா? மாட்டியா?'' என்றேன் உஷ்ணத்துடன்.

முத்துசாமி சற்றுத் தயங்கியது போலிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

''வேண்டாங்க விட்ருங்க. நான் படிக்கறதில்லீங்க...''

எனக்குக் கோபம் உச்சத்தில் ஏறியது. ''உனக்குப் படிக்கத் தெரியும் பொய் சொல்லுகிறாய். எனக்குப் படிச்சுக்காட்ட உனக்கு வெட்கமாயிருக்கிறது. அதனால் மறுக்கிறாய்?''

முத்துசாமி தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தான். சிறிது நேரம் கழித்து நிமிர்ந்த பொழுது அவன் கண்களில் நீர்!

''இதுமட்டும் வேண்டாங்க. விரதம். பேப்பர் படிக்கிறதில்லைன்னு விரதம். இருவது வருஷமா பேப்பர் படிக்கிறதில்லை...''

''என்ன...? இருவது வருஷமாவா...! ஏன்?''

கொஞ்சம் தயங்கியபின் மனம் திறந்தான்:

''இருபது வருஷத்ததுக்கு முந்தி எனக்குக் கல்யாணமாச்சு... விக்ரகம் கணக்காப் பொண்ணுங்க. அழகு ஆளை அடிக்கிற மாதிரியிருக்கும். அ ழ கா பொண்டாட்டி கிடைச்சா எல்லோருக்கும் ஒரு கிறுக்கு வரும். எனக்கும் வந்துச்சு. தலைகால் கொள்ளல, துள்ளினேன்.

''நீயா...?''

''ம்.... நானும் மனுசன்தானுங்க... அவளுக்கும் எம்மேல உசுரு. அப்பத்திக்கு எங்க ஊர்ல புருஷன் பெண்சாதி ஒண்ணா சைக்கிள்ல டபிள்ஸ்ல போனது நாங்கதாங்க.''

''அப்புறம்?'' கொஞ்சம் சுவாரஸ்யமானேன்.

''அதாங்க வினையே. அவளுக்கு சினிமான்னா இஷ்டம். ஒருக்கா டவுன்ல சினிமா பாத்திட்டு நைட்டு திரும்பி வந்தோம் - டபிள்ஸ்தான்!''

''என்னாச்சு...?''

''மெயின் ரோட்டில கா ல னி



இருக்கே...!''

''ஆமாம்!''

''அப்பெல்லாம் அங்க ஒண்ணும் கிடையாது. பொட்டல்...''

''என்னாச்சு? காத்து கருப்பு... பேய்... ஏதாவது?''

''அதல்லாம் ஒண்ணுமில்லிங்க. மனுசனுக்கு மிஞ்சி எதுவுமில்லை, தெரிஞ்சவனோ... தெரியாதவனோ... கள்ளனோ... நான் அறியேன் நாலுபேர்...''

எனக்குப் புரிந்து விட்டது! நடக்கக்கூடாதது.....

''என்னை அடிச்சுப் போட்டுட்டு... சைக்கிளுக்குத் துளிக்கூட சேதமில்லீங்க... ஆனா...''

அதற்கப்புறம் முத்துசாமி கொஞ்ச நேரம் பேசவில்லை. பேச நினைத்து நாக்கு தழுதழுத்து விடும் எனப் பேசாமல் இருந்திருப்பானோ...

''போலீஸுக்குச் சொன்னீங்களா?'' என்றேன்.

''வெறி இருந்துச்சுங்க. அந்த நாலு பேரையும் நுங்கு சீவராப்பல சீவிடணும் என்று - சமாதிகட்டணும் என்று''

''அப்புறம் அதுக்கும் பேப்பருக்கும்...?''

''இருக்குங்க. இது நடந்து ரெண்டு நாள் கழிச்சு ஒல்லியா கண்ணாடி போட்டுக்கிட்டு வெட வெடப்பா ஒரு பையன் வந்தாங்க. வெவரம் கேட்டான். நாங்க குற்றவாளியைக் கண்டுபிடிக்கத்தான் கேட்கறான்னு நினைச்சோம். மறுநாள்தான் போட்டோவோட நியூஸ் வந்தது. அந்த ராத்திரி நடந்த விஷயத்தை எல்லாம் கதை மாதிரி எழுதி, போட்டோ போட்டு 'இவள் தான் கற்பழிக்கப்பட்ட அழகின்னு போட்டு அரைபக்கத்துக்கு நியூஸ் போட்டாங்க...''

''அடடா...!''

''ஊரே கொல்லுன்னு போச்சு.... ஆறுதலுக்கு யாருமில்லிங்க... இண்டல். கேலி... 'துள்ளுனாளே அடங்கிட்டாள்'னாங்க...''

''உன் ஒய்ப்...?''

''அந்த பேப்பரையே பார்த்துக்கிட்டிருந்தாங்க.. சொல்லிச் சொல்லிக் காண்பிச்சா... 'அழகி'ன்னு போட்டிருந்தது. 'மாறி மாறி'ன்னு ஒருமாதிரி எழுதியிருந்தது. போட்டோ எல்லாத்தையும் காமிச்சு அழுவாங்க. மூணாம் நாள் கிணத்துல விழுந்து செத்துப் போச்சங்க. அதுலந்து தாங்க எனக்குப் பேப்பர் மேல கோபம். அன்னிக்கு ராத்திரி அந்த நாலுபேர் எங்களுக்குச் செஞ்ச கொடுமையோட இந்த பேப்பர்காரங்க பண்ணது அக்கரமம்!''

''செய்திதானே போட்டாங்க?''

''அது செய்தி மாதிரி இல்லியே...! பேப்பர் படிச்சுட்டுப் பக்கத்து ஊர்லந்து நிறையப் பேர் எங்க வீட்டுக்கு வந்து இவளைப் பார்த்தாங்கன்னா, அது செய்தியில்லீங்க. விபரீதம்..!''

எனக்குப் புரிந்தது. எதுவும் பேசவில்லை. முத்துசாமியும் பேசவில்லை. அன்றைக்கு நான் அந்த பேப்பர் படிக்கவில்லை.

அருள்வாக்கு

'ஆசார்யர்' என்பதுதான் 'ஆசிரியரா'கியிருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டும் எப்படியோ எழுத்தாளர்களையும் பத்திரிகை எடிடர்களையும் கதாசிரியர், பத்திரிகாசிரியர் என்றெல்லாம் 'ஆசிரியர்' பேர் கொடுத்துச் சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது. கல்விச் சாலையில் எழுத்தறிவிப்பவன் ஆசிரியன் எனப்படுவதிலிருந்தே எழுத்தைத் தொழிலாகக் கொண்ட ரைட்டர்கள், எடிடர்கள் ஆகியவர்களையும் ஆசிரியரென்று சொல்லும் வழக்கம் வந்து விட்டது போலிருக்கிறது. அல்லது, நடைமுறை எப்படி இருந்தாலும், கதை எழுதுகிறவர்களும் பத்ரிகை நடத்துகிறவர்களும் ஆசார்ய ஸ்தானத்திலிருந்து கொண்டு நல்ல நிலை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தில் அவர்களை ஆசிரியர்களாகச் சொல்லும் வழக்கம் உண்டாகியிருக்கலாம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



காஞ்சியின் கருணாமூர்த்தமே!

இறைவன் பிறப்பதில்லை
என்று யார்
சொன்னது?

நடம் ஆடும் தெய்வமே
அன்றோ இங்கு
நடமாடும் தெய்வமாய்
வந் திருப் பது.

இந்த ஞானசூரியன்
நிலவை விட
அல்லவா
ஆனந்தம் அளிக்கிறது

இந்த அலையில்லா ஆழ
வித்யா சாகரத்தில்
சங்கமிக்காத
விஞ் ஞான, மெய் ஞான
நதிகளேயில்லை!

இந்தக் கருணை நிலா
பட்டால்,
மனக் கடலின் ஆரவாரம்
அடங்கவல்லவா
செய்கிறது!

உனது கண்களே
புன்னகைத்துப்
பேசியும் விடுவதால்
நினது
மௌனத்திலும் ஒரு
சம்பாஷணை
நடந் து விடுகிறது.

தாழ்சடையினை நீ
துறந்து விட்டதால் - கங்கை
இப்போது உன்
கண்களுக்குள்
குடிபெயர்ந்து விட்டாள்
- கருணையாய்!

ஸ்வரமாய் ரிஷிமனத்தில்
ஸ்புரித்த வேதம்
உரைநடைக் கோலம்
பூண்டது
- நினது வாக்காய்!

வேதமறிந்த பின்னரே
முன்பு
தெய்வத்தைக் காண முடிந்தது
இன்றோ
தெய்வத்தின் (குரல்) மூலமே
வேதமறிய முடிகிறது.

என் மனத்தில்
பிறக்குமுன்பே,
பிரார்த்தனைகள்
உனது
செவிக்குள்
தவழ்வதெப்படி?

நீ அருள்புரிவதைக்
கண் ட பிறகல் லவா
- கற் பகத் தரு
கர்வம் களைந்தது.

''மனோநாசமே ஞானம்''
என் றால்
பக்தர்கள் பால் இத்துணைப்
பாசத் தை
- ஞானியே!
எவ் விடத் தில் தேக் குகிறாய் ?


வைகாசி அனுஷமாம்,
வையமெல்லாம் வாழ்த்துமாம்!
ஆதியும் அந்தமும் இல்லாத
உனக் குமா பிறந் த நாள் !

உன்னை வேண்டும் எமக்கு
உள்ளத்தில் நற்குணங்கள்
பிறக்கும் நாள், ஞாலம்
சிறக்கும் நாள்!

- இரா. சுதாகர்

மதுவை எதிர்த்து:

நாராயணன் தலைமையில் ஒரு மாணவர் படை!



★ நாராயணன்.

★ ''எப்போதாவது ஒரு முறைதானே குடிக்கிறேன்; அதுவும் வெறும் பீர்தானே!''

★ ''போதையேறி தள்ளாடும் அளவுக்கெல்லாம் நான் குடிக்க மாட்டேன். சும்மா கம்பெனிக்கு...''

★ ''எவ்வளவு குடிச்சாலும் நான் ஸ்டெடியா இருப்பேன்... அது என் உடம்பு வாகு...''

-- இப்படியெல்லாம் சால்ஜாப்பு சொல்லிக் கொண்டு மது அருந்துவோருக்கு ஓர் எச்சரிக்கை:

ஒவ்வொரு துளி ஆல்கஹாலும் மூளையின் செல்களை நிரந்தரமாகப் பாதிக்கின்றது. அந்த பாதிப்பின் விளைவுகளுக்கு மாற்றோ முறிவோ கிடையவே கிடையாது.

-- இது ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவு.

இந்த ஆராய்ச்சி முடிவை நன்கு உணர்ந்தார் இல. மு. நாராயணன். தம்மைச் சுற்றிலும் ஆயிரக் கணக்கானோர் மது அரக்கனின் பிடியில் சிக்கி மீள முடியாமல் தவிப்பதைக் கண்கூடாகக் கண்டு வேதனையுற்றார். தாம் பணியாற்றும் பரமகல்யாணி கல்லூரி (நெல்லை மாவட்டம், ஆழ்வார்க் குறிச்சி) மாணவர்கள் பலரது குடும்ப வாழ்க்கை, அவர்களுடைய தந்தை மற்றும் அண்ணன்மார்களின் குடிப் பழக்கத்தால் நாசமாகிப் போயிருப்பதைப் பார்த்தார். இவர்களுக்கெல்லாம் உதவ ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற உந்துதலுடன் Anti Addiction Service Scheme என்ற திட்டத்தைத் துவக்கினார். திட்டத் திற்கு மத்திய அரசின் அங்கீகாரமும் நிதியுதவியும் கிடைத்திருக்கிறது. பரமகல்யாணி கல்லூரியின் என். எஸ். எஸ். பணித் திட்டங்களுள் ஒன்றாக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

திட்டம் அறிவிக்கப்பட்டதும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் அதில் சேர்ந்து சமூகப் பணியாற்ற முன் வந்தனர். ஆனால் அரசு அளித்த நிதியைக் கொண்டு அறுபத்தைந்து பேருக்குத்தான் திட்டத்தில் இடமளிக்க முடியும் என்பதால், மாணவர்களின் உண்மையான ஈடுபாட்டைச் சோதிக்கும் வகையில் ஒரு வினாத் தாள் தயாரித்து, அதற்கு அளிக்கப்பட்ட விடைகளின் அடிப்படையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனைத்து உறுப்பினர்களுமே மது, சிகரெட், புகையிலைப் பழக்கம் என்பதே அடியோடு இல்லாதவர்கள்.

இந்த மாணவர்கள் யாவரும் நாராயணனின் தலைமையில், தங்கள் கல்லூரியிலும் ஆழ்வார்க்குறிச்சியை அடுத்து உள்ள வாகைகுளம், சிவசைலம், கடயம் ஆகிய கிராமங்களிலும் மதுவின் தீமைகளைப் பற்றிப் பிரசாரம் செய்கிறார்கள். வில்லுப் பாட்டு, வீதி நாடகங்கள், பெரிய வரைபடங்களுடன் விளக்கக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்தி குடிப்பழக்கத்தின் தீமையை எடுத்துச் சொல்கிறார்கள்.

இந்த பிரசாரத்தைப் பார்த்தும் கேட்டும், குடிப் பழக்கத்திலிருந்து மீள, உதவி நாடுவோருக்கு வழிகாட்டி, டி.டி.ரங்கநாதன் ஃபவுன்டேஷன் போன்ற அமைப்புகளுக்கு அனுப்புகிறார் நாராயணன்.

''தனியார் அமைப்புகளில் குடிப்





பழக்கத்துக்கு மாற்றுச் சிகிச்சை நாடினால் நிறையச் செலவாகும். அந்தச் செலவை ஏழைக் கிராம மக்களால் தாங்கவே முடியாது. அதனால் அரசு மருத்துவ மனைகளில் இந்த வசதி செய்துதரப்பட வேண்டும்,'' என்கிறார் நாராயணன்.

அரசே மதுவிலக்கை அமுல் படுத்தாமல் உள்ளதே என்று நாம் நினைவூட்ட, ''சாராயம் கிடைக்கிறது என்பதற்காகக் குடிக்க வேண்டுமா?'' என்று தார்மிகக் கோபத்துடன் கேட்கிறார் நாராயணன்.

இந்த வேகம்தான் அவரைப் பி. எச். டி. ஆராய்ச்சிக்கு, 'மனித செல் முதல் மனித சமுதாயம் வரையில் குடிப்பழக்கத்தால் அடையும் பாதிப்புகள்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுக்கச் செய்துள்ளது.

''இந்த ஆராய்ச்சியின் போது நான் பல அதிர்ச்சி தரும் உண்மைகளைக் கண்டறிந்தேன்'' என்கிறார் நாராயணன்.

''தமிழ்நாட்டு மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் நோயாளிகளுள் இருபது சதவிகிதத்தினருக்கு மதுப் பழக்கமே நோய் முற்றுவதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. மத்திய சிறைச் சாலையிலுள்ள கைதிகளில் எண்பது சதவிகிதத்தினர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள். சில தேர்ந்தெடுத்த சிறுவர் இல்லங்களில் உள்ள குழந்தைகளுள் இருபத்தேழு சதவிகிதத்தினரின் குடும்பங்கள் குடிப் பழக்கத்தால் பிளவுபட்டோ சிதறுண்டோ போனவை. இந்த நிலைமைகளைச் சீர் செய்ய அரசாங்கம் எந்த முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை. இதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவுமில்லை.''

சொல்லி முடித்த நாராயணனிடம் ''இத்தகைய நிலவரத்தில் உங்கள் முயற்சிகள் என்ன பலன் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள். 'குடிகாரன் பேச்சு விடிஞ்சா போச்சு' என்று பழமொழியே இருக்கிறதே. உங்கள் அறிவுரைகள் பலன் தருமா?'' என்று கேட்டோம்.

''அந்த விஷயத்தில் நான் கர்ம யோகி, இந்தப் பணியை என் கடமையாக எண்ணிச் செய்து வருகிறேன். எனக்கு ஏற்படும் நிஜமான சங்கடம் என்ன தெரியுமா? எங்கள் திட்டத்தின் சிறப்புக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க, குடிப்பழக்கம் இல்லாத வி. ஐ. பி. கிடைப்பதேயில்லை என்பதுதான்!'' என்றார் நாராயணன்.

-- எஸ். ஆர்.

வாசகர் யோசனை:
நெல்லை குரலோன்,
பொட்டல்புதூர்.

கல்கி தொழில் மலர் '91 – வாசகர் கருத்து

* கல்கி தொழில் மலர் புதுப் பொலிவுடனும், ஏராளமான செய்தி களுடனும், கண்ணைக் கவரும் வண்ணப் புகைப்படங்களுடனும் தவழ்ந்து வந்தது அருமையாக இருந்தது.

மொரப்பூர், -ச. உமர்கான்.

* தொழில் சப்ஜெக்ட் என்றாலே படிக்க முகம் சுளிப்பவர் கூட ஆழ்ந்து படிக்கும் விதத்தில் சுவாரஸ்யமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. சிம்ஸன் பற்றிய கட்டுரை களும், சிவசைலம், அனந்தராம கிருஷ்ணனின் வாழ்க்கைக் குறிப்புகளும் எவரையும் உசுப்பி விடுவது நிச்சயம்.

தங்க நகைகளைப் பற்றிய கட்டுரை களைப் படிக்க ஆரம்பித்து எல்லா அம்சங் களையுமே படித்து விட்டார்கள் என அம்மா.

சென்னை - 13, - எஸ், விஸ்வநாதன்.

* ''விலையை ஒரு பொருட்டாக எண்ணாது, இத் தொழில் மலரை நோக்கி னால், ஒரு பரிபூரண திருப்தி ஏற்படும்! ஒவ்வொரு பக்கமும், உங்களின் உழைப்பை பறைசாற்றும் வண்ணம் ஜொலிக்கிறது! கட்டுரைகளே - இம் மாபெரும் மலருக்குப் பெரிய, மிகப் பெரிய பலம்!''

சென்னை, - எஸ். பாலாஜி.

* திரு. ஆர். வி. போட்ட அஸ்திவாரத்துக்குக் கட்டடம் கட்டத் தவறி விட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை. ஆனால் இன்றைய அரசியல் வாதிகள் அடிக்கல் நாட்டலுடனே நின்று விடுவது வேதனைப்பட வைக்கிறது.

எம். எஸ். ஜெயராமன் அவர்களுடைய காகிதமில்லாக் காரியாலயங்கள் திறன்மிக்க கட்டுரை. நல்லதொரு எழுத்தாளர் என்ப துடன் நகைச்சுவையுணர்வுடன் கூடிய சிந்தனையாளர்!

உழைப்புக்குக் கிடைத்த வெற்றி என் பதை ஸிம்ஸன் குருப் கட்டுரைகள் படம் பிடித்துக் காட்டின.

சோப்பு தயாரிப்பு, காரியாலயக் கருவிகள் என்று தனித்தனியாக வகை பிரித் துப் பாராட்டுவது என்றால் இன்லாண்டில் இடம் போதாது!

திருச்சி - 2, - ஆங்கரை ஆனந்.

* அல்ட்ராமரைன் புளு சர்வதேச மார்க் கெட்டில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. லிக்விட் (திரவ) புளுதான் சமீபத்தில் தோன்றியது (10 ஆண்டுகள்). இதை நான் பேட்டியில் தெளிவாகக் குறிப்பிட்டேன். ஆனால் பேட்டி கண்டவர் இதைப் புரட்டிப் போட்டு எழுதி விட்டார்!

சென்னை, - சீனிவாசன் (நில்ஸின் தொழிலகம்).



நேற்றுவரை நந்தவனம்

7

"எல்லாவற்றையும் மற; உனக்கு வேற கல்யாணம் செஞ்சு வைக்கிறேன்..."

மீராவின் தந்தை இதுவரையில் - குறைந்தது லட்சம் தடவையாவது இந்த வார்த்தைகளைச் சொல்லி இருப்பார்.

போதாக்குறைக்கு மனைவியிடம் வேறு எரிந்து எரிந்து விழுந்தார்.

"எல்லாம் உன்னால்தான். மேலே படிக்கறேன்னு ஆசைப்பட்டவளை, என்னமோ கொள்ளை போற மாதிரி 'தர தர'ன்னு இழுத்துட்டு வந்து மணையில் உட்கார வச்சே... இப்ப சந்தோஷம் தானே?"

அம்மா, எல்லாவற்றுக்கும் மௌனமாய் அழுவாள்.

அன்றைக்கு மீ ரா வி ன் கேள்விக்குப் பொய்யாய் ஒரு பதிலைச் சொல்ல முடியாமல் உடைந்து அழுதவள்தான். அதற்குப் பின் இன்று வரையில் வாயைத் திறக்கவில்லை.

அப்பாவுக்குத் தன் மகளின் எதிர்காலத்தை நினைத்துப் பயம்.. அந்தப் பயம் எ ரி ச் ச ல ா க மாறும்பொழுதெல்லாம், பெண்டாட்டியைத்தான் சகட்டுமேனிக்குத் திட்டுவார்.

கீர்த்தி, விபத்திலேயே கருகினதை நாகு மாமாதான் மீராவிடம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சொல்ல, அவள் விக்கித்துப் போய் உட்கார்ந்திருக்கிறாள்.

ஆரம்பத்தில் அப்பா, நாகுவை மகளிடம் பேச விடாமல் தடுத்தார்.

"என்னவோ, அவன் தலையெழுத்து அப்படி இருந்திருக்கு. அந்த அத்தியாயம் முடிஞ்சதுன்னு நாங்க மெதுவா மறக்கப் பார்க்கறோம். தயவுசெஞ்சு இனிமே அந்தப் பேச்சே வேண்டாமே!"

"அதுவும் சரிதான்.. ஆனா நாளையப் பின்னாலே குழந்தை மனசுல ஆயிரம் கேள்வி எழாதா? எதையுமே மனசு விட்டுப் பேசிடணும். உள்ளேயே அழுத்தி வைக்கிறதுனாலத்தான் பிரச்னையே வர்றது. என்னையே எடுத்துக்குங்க.. கோபம் வந்தா - ஏன் அப்படி கதகளி ஆட்டக்காரன் மாதிரி ஆடறேன். அப்படி ஒரு தடவை ஆடிட்டா - மனசு பளிச்சுனு ஆயிடறது..."

வேற்று மனுஷரிடம் இதற்கு மேல் கடுப்பாய்ப் பேச முடியவில்லை மீராவின் அப்பாவினால்.

நாகு மாமா இல்லாவிட்டால் - மீராவும், கீர்த்தியோடு போய்ச் சேர்ந்திருக்க வேண்டியவள்தான்.

தஞ்சாவூரிலிருந்து சென்னைக்குக் கிளம்பிய பஸ் - தஞ்சாவூரின் எல்லைக்குள்ளேயே வெடித்துச் சிதறிய விஷயம் காற்றுவாக்கில் ஊருக்குள் பரவிய போது இரவு மணி பத்து முப்பது...

தூக்கம் வராமல் நாகு மாமா - பங்காரு காமாட்சி அம்மன் கோவிலில் நடந்த ராமாயணப் பிரவசனத்துக்குப் போய் விட்டு, பொடி நடையாய் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுதே தெருவில் ஒருவித பரபரப்பு... மனிதர்கள் கும்பல் கும்பலாய்க் கூடிப் பேசுவதும், திபுதிபுவென ஓடுவதுமாய் இருக்க -

நாகு, வெற்றிலைப் பாக்குக் கடையில் நின்று விசாரித்தார்.

"என்னப்பா கலாட்டா.. மறுபடியும் அடிதடியா...? இந்த எலக்ஷன் வந்தாலும் வந்தது.. அரைமணி நேரம் நிம்மதியா இருக்க முடியலையே...."

"கலாட்டா இல்லே சார்.. பஸ்ஸுக்குள்ளே வெடிகுண்டாம்..."

கடைக்காரரின் பதிலைக் கேட்டு நாகு 'கெக்கெக்' எனச் சிரித்திருக்கிறார்.

"வெடிகுண்டா... நல்லாப் பார்த்தாங்களா...? எவனாவது புரளி கிளப்பியிருப்பான். பஸ்லே உட்கார இடம் கிடைச்சிருக்காதா இருக்கும்.."

"அட இல்லே அய்யரே.... தஞ்சாவூர்லேயிருந்து மெட்ராஸ் போற தனியார் பஸ்... வெடிகுண்டு வெடிச்சு ஒரே நெருப்புக் கோளமா எரிஞ்சிட்டிருக்காம். அணைக்கறதுக்கு ரயில் என்ஜின் எல்லாம் போயிருக்கு..."

திக்கென்று நின்ற நாகு, அடுத்த கணமே தூங்கிக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் ஒருவனை எழுப்பி, ஏறி உட்கார்ந்து கொண்டு, கும்பல் சரிந்த திசைக்குப் பறந்திருக்கிறார்.

"நான் என்னத்தைச் சொல்வேன் மீரா... விடிகாலை நாலு மணி வரைக்கும் பஸ் எரிஞ்சிட்டுத்தான் இருந்தது... முதல்லே அந்த பஸ் நீங்க ஏறின பஸ்ஸா

அனுராதா ரமணன்

இருக்கக் கூடாதுன்னு ஊருல இருக்கற சாமிக்கு எல்லாம் வேண்டிண்டேன்.... ஆனா, ரெண்டு மணிக்கே - தெரிஞ்சு போச்சு... இந்த வண்டியிலதான் நீங்க இருக்கீங் கன்னு...

''முதல்லே கண்டுபிடிச்சது உன்னைத் தான் மீரா... கால் முழுக்க நெருப்பு காயத்துலேயும் கூட நீ, உன் கையில கீர்த்தியோட மஞ்சள் வேஷ்டிய இறுகப் பிடிச்சிட்டிருந்தே. பின் மண்டையில் இரும்புக் கம்பி அடிச்சு ரத்தச் சேறா இருந் தது...

''கீர்த்தி.. அவனைத்தான் நான் ரொம்ப வும் தேடினேன். ஸீட்டோட ரெண்டு உடம்பு கரிக்கட்டையா ஆகியிருந்தது.. அதுல ஜன்னலோரமா இருந்ததுதான் கீர்த் தியா இருக்கணும்... ஏன்னா அந்தனை நெருப்புலேயும் உங்கப்பா கல்யாணத் துக்குப் போட்ட வைர மோதிரம் அந்த விரல்லே...''

இந்த இடத்தில் மீரா காதைப் பொத்திக் கொண்டாள்.

''சொல்லாதீங்கோ மாமா... ப்ளீஸ்...''

நாகு வாயை மூடிக் கொண்டு சற்று நேரம் மூலையை வெறித்தபடி உட்கார்ந்திருப் பார்.

''உங்க அப்பாவுக்கு டெலிகிராம் கொடுத்திட்டு, உன்னையும், இன்னும் குத்துகரும் குலை உசருமாக் கிடந்த வங்களையும் ஆஸ்பத்திரியில கொண்டு வந்து சேர்த்துட்டுத்தான் நான் வீட்டுக்கு போன் பண்ணினேன். அதுக்குள்ளே கீர்த்தி யோட சித்தப்பாவுக்கு மட்டும் லேசுபாசா விஷயம் தெரிஞ்சிருக்கு. என்னை வேற காணுமா.. தவியாத் தவிச்சிட்டிருந்திருக் கான்...''

''விஷயத்தை மெதுவாத்தான் சொல்லச் சொன்னேன். அப்படியும் உன் மாமனா ருக்கு இதைக் கேட்டு ஹார்ட் அட்டாக் வந்துடுத்து...''

''வீடே நன்னாயில்லே குழந்தை. இன் னும் கல்யாணத்துக்குக் கட்டின மூட்டை முடிச்சைப் பிரிக்கலை. அதுக்குள்ளே இப் படி ஒரு இடி... கிழவி, ஜடாயு மாதிரி உட்கார்ந்துண்டிருக்கு. 'ஓ'ன்னு அதுங் குரல்தான் பெரிசா...''

ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்புகிற போதுதான் ஒருசில முகங்கள் அடையாளம் தெரிந்தன.

''என்ன தாயீ... இப்படி அம்புட்டையும் வாரிக் கொடுத்திட்டு நிக்கறியே... கடவு ளுக்கே இது அடுக்குமா.. அடியம்மாடீ.. என் உசிரை எடுத்திட்டு, உம் புருஷன் உசிரைக் கொடுத்திருக்கக் கூடாதா அந்த தர்மராசா...''



''தா புள்ளே கம்முனு கிட...''

மீரா, விழிகளை மலர்த்தி அவளைப் பார்த்தாள்.

அவள்தான்...

பஸ்ஸில் மீராவுக்குப் பக்கத்தில் ஜன்னலோரமாய் அமர்ந்து, குழந்தைக்குப் பால் கொடுத்த - அதே பெண்..:

பக்கத்தில் குழந்தை - நீலத்தாமரை போல...

''பிள்ளைக்கு ஒண்ணும் ஆகல்லீங்க... எனக்குத்தான் கால் எலும்பு முறிஞ்சு போச்சு... எங்க ஆத்தாவும் அப்பனும்தான் இம்புட்டு நாள் வரை... இவருக்கு எம் மேல ஒரே கோவம்... தான் சொல்லச் சொல்லக் கேட்காமப் புறப்பட்டேன்னு.. இனிமே அவுரு பேச்சை மீறவே மாட்டேன் ஆத்தா...''

மீராவின் இரண்டு கால்களும் இப்பொழுதுதான் கட்டுப் பிரித்திருந்தார்கள்.

புடைவையை விலக்கி காலைப் பார்த்த மீராவுக்கு அருவெறுப்பில் குமட்டிக் கொண்டு வர... அவள், அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.

''இப்படியாவது நான் இருக்கணு மாம்மா... என்னை ஏன் காப்பாத்தினீங்க? அவரோட போயிருக்கலாமே...''

''உளறாதே.. இது பரவாயில்லே... வெளிக்காயம்தான். பின் மண்டையில அடிபட்டு, நினைவு தப்பிக் கிடந்தியே... அந்த நிலை அப்படியே நீடிச்சு, கோமாவுல கொண்டு விட்டாலும் விடலாம்னு டாக்டர் சொல்லிட்டிருந்தார். அந்தக் கண்றாவி எல்லாம் இல்லே... அதே பஸ்லே ஒம்பது வயசுப் பொண் குழந்தை ஒண்ணு யாரோ நடிகையோட குழந்தைன்னு பேசிக்கிறாங்க... இப்படித்தான் கோமாவுல கிடக்கு... அவங்க நேத்துதான் கார் வச்சு, வேற நர்ஸிங் ஹோமுக்குக் கொண்டு போறாங்க.. குழந்தை கூட வந்த பொண்ணு - முகமெல்லாம் வெந்து போய் - இன்னமும் உசிருக்குப் போராடிட்டு இருக்கு...''

மீராவின் கண் முன் அந்தக் காட்சி...

பவுடர் பூச்சும், பளபளக்கும் உதட்டுச் சாயமுமாய் ஒரு பெண் - ஊளமுற்ற குழந்தையை 'வெடுக்'கெனத் தூக்கிப் பிடித்த காட்சி...

''கத்தாதே சனியனே... அய்யாவைப் பார்த்துக் கும்பிடு போடு..''

'அவ... அவ... பேரென்ன...'

மீரா மண்டையைக் குடைந்து பார்க்கிறாள்...

ஞாபகத்துக்கு வராதது மட்டுமில்லை. தலையும் வலிக்கிறது...

அந்த எம். எல். ஏ. யும், அவரது டாக்டர் மருமகளும் மூளையில் அச்சாய்ப் பதிந்திருக்கிறார்கள்.

அவள் அது பற்றி நாகுவிடம் விசாரிக்க - அவர் உதட்டைப் பிதுக்குகிறார்.

''வெடிகுண்டு வண்டியோட முன்பகுதியில் இருந்த லக்கேஜ்லேயிருந்துதான் வெடிச்சிருக்கு... அதுல - மாமனார் - மருமக எல்லாரும் அவுட். அநேகமா இந்த வெடிகுண்டே அந்த மாஜி எம். எல். ஏ. தர்மராஜனைக் குறிவச்சுத்தான் வச்சிருக்காங்கன்னு பேச்சு... அந்த ஆளையும், அவரோட சகாக்களையும் பூண்டோட அழிக்க - எதிர்க் கட்சிக்காரங்க திட்டின திட்டம்னு பேப்பர்லே போட்டிருக் காங்க...''

மீரா, தலைகுனிந்து உட்கார்ந்திருக்கிறாள். அவளையுமறியாமல் கன்னத்தில் எப்போதும் ஈரக்கோடுகள்...

'யாரோ - யாரையோ பழிவாங்குவதற்காக - ஒன்றுமறியாத மற்ற பிரயாணிகள் ஏன் பலியாக வேண்டும்?'

'பஸ்ஸில் வெடிகுண்டு வைத்தவன் - கொஞ்சமாவது இதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டாமா...?'

'ஐயோ... குண்டு வெடிச்ச சமயத்துல - அவர் என்ன பண்ணிட்டு இருந்திருப்பார்? பெங்களூர் ஃபார்மைப் பத்தி நினைச்சிட்டு இருந்திருப்பாரோ...?'

கீர்த்தியை நினைக்கும்போதெல்லாம், அவள் நெஞ்சு தவித்து, தவித்து அடங்குகிறது.

கல்யாணத்துக்கு முன்னால் - அவன் யாரோ, என்னவோ... பத்து நாளில் ஓர் உறவை உண்டுபண்ணி விட்டு, ஆயுசுக்கும் அதை மறக்க முடியாதபடி செய்து விட்டானே...

உடம்பு குணமாக ஆக - இரவில் தூக்கம் என்பதையே பறிகொடுத்து விட்டு, நிமிடத்துக்கு ஒருமுறை அம்மாவை அழைத்துக் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்கிறாள் அவள்.

''ஏம்மா... ஆயுசு முடிஞ்சு செத்தாத் தானேம்மா ஆத்மா சாந்தி அடையும்.. இப்படி, அசந்து மறந்திருக்கறப்ப - கழுத்துச் சங்கிலியைப் பிடிச்சு இழுத்துட்டு ஓடற திருடன் மாதிரி - இவரை அந்த எமன் இழுத்திட்டுப் 'போயிட்டானே.. அவரோட ஆத்மா, தன் உடம்பைத் தேடாதா...?''

''என்னங்க இது, உங்களுக்கு எங்கப்பா போட்ட மோதிரம் இப்படி தேய்ஞ்சு போயிடுச்சு...?''

''ஹி... ஹி... பூதம் வருமோன்னு ஒரு ஆசை; தேய்ச்சுப் பார்த்தேன்!''

- ஆர். வசந்தகுமார்.



''தூங்கு மீரா... அவனுக்கு இப்படி ஒரு முடிவுன்னு அவன் தலையில எழுதி யிருக்கு. விதி முடியாம யாரும் போயிட முடியாது..''

''அப்படின்னா - அப்பா இவரோட ஜாதகத்தைத் தூக்கிண்டு ஒவ்வொரு ஜோஸியர்கிட்டேயும் பொருத்தம் பார்க்க ஓடினாரே... அப்பத் தெரியலையாம்மா... இவர் இப்படி பஸ்லேயே சொல்லாம கொள்ளாம பிராணனை விடுவார்னு...''

''ஏண்டி, அல்பாயுக ஜாதகம்னு தெரிஞ்சா கல்யாணம் செஞ்சிருப்போமா? ஜாதகத்தை ஒழுங்கா கணிக்கலையோ என்னவோ?''

''ஒரு வேளை இப்படி இருக்கு மோம்மா? என்னைக் கல்யாணம் பண் ணிக்கிறவன் எப்பேர்ப்பட்ட தீர்க்காயுகக் காரனா இருந்தாலும் - 'பொக்'குனு போயிடுவான்னு...''

''சீச்சீ... உன் ஜாதகத்துக்கு என்னடி குறை... அருமையான நட்சத்திரம். உன் ஜாதகத்தைப் பார்த்தவங்க அத்தனை பேரும் இது போல கோடியில ஒருத்த ருக்குத்தான் அமையும்னு சொன்னாங்க...''

''அது எப்படிம்மா.. என் ஜாதக மும் ஒழுங்காத்தான் கணிக்கப்பட்ட துன்னு என்ன நிச்சயம்?''

மீராவின் தாய் அலுத்துப் போவாள்.

''ஷ்.. என்னதான் ஸ்பெஷல் வார்டுன் னாலும் அக்கம் பக்கத்துல இருக்கறவங்க எல்லாம் தூங்க வேண்டாமா.. கண்ணை இறுக மூடிண்டு தூங்கறதுக்கு பாரு...''

''தூக்கம் வரல்லைம்மா...''

''ராம ராமன்னு சொல்லு... தூக்கம் வரும்...''

''கீர்த்தி கீர்த்தியின்னு சொல்றேனே...''

''....''

அம்மா, கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் ஜமுக்காளம் விரித்துப் படுத்தவள் - அப்படியே நொறுங்கிப் போய்த் தலைய ணையில் முகம் புதைத்து அழுவாள்..

அன்று -

மீராவைக் காரில் வைத்துச் சென்னைக்கு அழைத்துப் போகலாமென்றும், இன்னும் சில நாட்கள் ஓய்வில் இருந்தால், அவள் பழையபடி நடமாடலாம் என்றும் டாக் டர்கள் சொல்லி விட்டபடியால்...

அவள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு விட்டாள்.

நாகு மாமாதான் வாடகைக் காருக்கு ஏற் பாடு செய்திருந்தார்.

ஆஸ்பத்திரி வாசலை விட்டுப் புறப்படும் முன் மீரா, அப்பாவை அழைக்கிறாள்.

''என்னம்மா?''

''எனக்கு அவரோட வீட்டுக்குப் போய், மறுபடியும் அந்த மனுஷங்க எல்லாரையும் பார்க்கணும் போல இருக்குப்பா..''



''கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் படிக்கட்டில் பயணம் செய்து இறந்தவர் களின் எண்ணிக்கை 51'' என்ற அறி விப்பை எழுதி ஒவ்வொரு டவுன் பஸ் ஸின் படிக்கட்டு அருகேயும் ஒட்டி வைத் துள்ளனர் மதுரையில்.

- சுகா ராஜ்.

''நோ, நோ... இதென்ன பைத்தியக் காரத்தனம்? ஏற்கெனவே அவங்க ரொம்ப வும் நொந்து போயிருக்காங்க. நீ வேற இப்பப் போய், அவங்க துக்கத்தை அதிக மாக்க வேண்டாம்...''

''ஆமா மீரா... இந்த ரணம் கொஞ்சம் ஆறட்டும். அப்புறம் வரலாம்...''

- இது நாகு.

''இல்லேம்மா.. எனக்கு அவரோட அம் மாவைப் பார்க்கணும் போல இருக்கு.. ப்ளீஸ்..''

''மீரா... உனக்கு உடம்பு குணமாற வரைக்கும் போய்க் கவனிக்கக் சொன் னதே உங்க மாமியார்தான். தினமும் நீ எப் படி இருக்கே, கொஞ்சமாவது தேறியிருக்கியான்னு கேட்டுண்டே இருப்பா. ஆனா - இப்போதைக்கு நீ அந்த வீட்டுக்கு வர்றதை - அவ மட்டுமில்லே.. அந்த வீட்டுல யாருமே விரும்ப மாட் டாங்க. பழைய சம்பிரதாயத்துல ஊறின குடும்பம் பாரு... புருஷன் போனா- அந்தப் பத்து நாளுக்குள்ளே வீட்டுக்கு வந்தாத்தான் அப்புறம் போக்குவரத்து வச்சக்கலாம்.. இல்லைன்னா - ஒரு வருஷத்துக்கு வரப் படாது... கரிக்கால் அது - இதுன்னு பழங் காலத்து மனுஷி ஆயிரம் பேசுவா...''

மீரா - தாயின் மடியில் நீட்டியிருந்த தன் னிரு பாதங்களைப் பார்க்கிறாள்.

பாதம் வரையில் புறா போலதான்...

புடைவையின் விளிம்பு சற்று ஒதுங்கி னாலும் - தசைகள் இழுபட்டு - உட்பக்கச் சிவப்பு மறையாத கால்களின் தோற்றம்..

'என்னைக் கரிக்கால் ஆக்கி, என் கண வனை முழுசாய்க் கரியாக்கிய அந்த வெடி குண்டு விபத்துக்கு மூலகாரணம் யார்...?'

மீண்டும் நெஞ்சுக்குள் கேள்வி குதிக்க -

கார் கிளம்பும் நேரத்தில் திபுதிபுவென மோட்டார் சைக்கிள் சப்தம்....

(தொடரும்)

பர்னாலா தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்கிறாரே...?



தி. மு. க. வுக்கு ஆதரவாக...

எம். ஜி. ஆரைக் காண்கிறார்!



அப்படியும் இப்படியும்



★ ஆ. ஜீவா, பூண்டிநீர்த்தேக்கம்.

? கலைஞர் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவாரா?

! அதை மத்தியில் அமரும் ஆட்சியைப் பொருத்து முடிவு செய்வார்!

★ அ. முஸ்தபா, தக்கோலம்.

? கள்ள வோட்டுப் போடுவதைத் தடுக்க ஒரு நல்ல யோசனை?

! கள்ள வோட்டுப் போடப்படுமுன்னரே அசல் வோட்டை ஒவ்வொருவரும் போட்டு விட்டு வந்து விடுவதுதான்.

★ எஸ். மனோகரன், சங்கமங்கலம் ★

? விளம்பரங்கள் வாக்குகளைச் சேகரித்துக் கொடுக்குமா?

! தீவிரக் கட்சிப் பற்று உடையவர்கள் எப்போதும் தங்கள் அபிமானக் கட்சி அல்லது தலைவரைக் கருதியே போடு வார்கள். ஆனால் மதில் மேல் பூனையாக ஏராளமான பேர் உண்டு. அவர்கள் ஒரு முடிவுக்கு வர விளம்பரங்கள் உதவும்.

★ குரு கிருஷ்ணா, திருச்சி.

? 'கருணாநிதி உருவில் எம். ஜி. ஆரைக் காண்கிறேன்' என்று சாத்தூர் ராமச்சந்திரன் பேசியிருக்கிறாரே?

! இவரைப் போன்றவர்கள் நாளை தேவைப்பட்டால் அத்வானி உருவில் கூட எம். ஜி. ஆரைக் காண்பார்கள்!

★ ஜி. கதிரேசன், சிறுமுகை.

? 'தமிழகத்தில் அ. இ. அ. தி. மு. க. தனிப் பெரும்பான்மை பெறாமல் போனால் ஜெயலலிதாவின் மந்திரி சபை யில் சேராமல் வெளியிலிருந்து கொண்டே ஆதரவு தருவோம்' என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியிருக்கிறாரே?

! நிச்சயமாக ஜெக்குப் பிடிக்காத பேச்சு. அ. தி. மு. க. வுக்கு ஒருவேளை பெரும் பான்மை கிடைக்காமல் போகவும் கூடும் என்று வாழப்பாடியார் எண்ணலாமோ?

★ கே. ரவிச்சந்திரன், பனங்குடி.

? ராமராஜனை பாப்புலராக்கியது எது? ஊசலாட விட்டது எது? ஒதுக்கி வைத் திருப்பது எது?

! சினிமா; அரசியல்; ஜெ.

★ ஆர். சம்பத், திருச்சி.

? 'தோற்றால் இப்படி, ஜெயித்தால் அப்படி' என்றெல்லாம் கலைஞர் பேச ஆரம்பித்து விட்டாரே, அ.தி.மு.க. பதவிக்கு வந்துவிடும் என்று கருத ஆரம்பித்து விட்டாரா?

! அவரா! ஆட்சிக்கு அ. தி. மு. க. வந்து விட்டால், அப்படி வந்த பிறகும் புள்ளி விவரம்தான் சொல்வாரே தவிர தோல்வி என்று ஒப்புக் கொள்ள மாட்டார். 'ஜெயித் தால் அண்ணா வழி, தோற்றால் பெரியார் வழி' என்பதெல்லாம் வாக்காளரில் ஒரு சாராரை மிரட்டத்தான்!

★ வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.

? காலில் விழுந்து வணங்கப்படும் அரசியல்வாதிக்கும் ஆன்மீகவாதிக்கும் என்ன வேறுபாடு?

! ஆன்மீகவாதியை விழுந்து வணங்கு வதால் பலன் கிடைக்கிறதோ இல் லையோ, காலை வாரி விட மாட்டார் என்ற அளவுக்கு நிச்சயம் நம்பலாம்.

★ சித. கருணாநிதி, மருதூர் தெற்கு.

? 'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை'யாகச் சமீபத்திய அரசியலில் யாரைக்

குறிப்பிடலாம்?

! அப்படி ஒருவர் இருந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் பழமொழி வரம்பு மீறியதாக இருப்பதால் சுட்டிக்காட்ட முடியவில்லை. நீங்களே யோசித்துக் கொள்ள வேண்டியதுதான்!

★ கா. சு. இலக்கியன், காட்டாவூர்.

? இந்தியா டுடே, தி. மு. க. வுக்கு ஒன்பது இடங்கள்தான் சட்டசபையில் கிடைக்கும் என்று கணிக்கிறதே?

! கலைஞரின் பார்வையில் சதி பண்ணும் பத்திரிகைகள் பட்டியலில் இந்தியா டுடேயையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்!

ஏ. சிவ முருகேசன், சின்னமனூர்.

★ எம். ஜி. ஆர். உயிருடன் இருந்த போது ஜெயலலிதா முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டாராமே?

! செய்தியாகவும் விளம்பரமாகவும் பிரசுரிக்கப்பட்டு வரும் ஜெயலலிதாவின் சில கடிதங்களைப் பார்க்க அப்படித்தான் தோன்றுகிறது. எம். ஜி. ஆருக்குத் தம் மீது பொறாமை என்று ஒரு கடிதத்திலும் வேறு ஒரு கடிதத்தில் தம்மைக் குறைந்தபட்சம் துணை முதலமைச்சராகவாவது ஆக்காவிட்டால் கருணாநிதி பக்கம் சேர்ந்து விட நேரும் என்றும் எழுதியிருக்கிறார். ஆனால் இவையெல்லாம் தேர்தலை முன்னிட்டு வெளியிடப்படும் ஃபோர்ஜரி கடிதங்கள் என்று ஜெ. கூறிவிடக்கூடும்.

★ கே. ரமேஷ்ராம், செங்குன்றம்.

? 'காங்கிரஸ் தொகுதிகளுக்கு ஜெயலலிதா போகாவிட்டால் எந்த பாதிப்பும் ஏற்படாது' என்று வாழப்பாடி கூறியி ருப்பது அவரது தன்னம்பிக்கையைத்தானே காட்டுகிறது?

! இல்லை, ஜெயலலிதாவின் செல்வாக்கில் அவருக்குள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது. நம்பிக்கை பொய்த்துப் போகாமலிருந்தால் சரி.



எம். ஜி. ஆர். இருந்த போதே.



வெளியேயிருந்து ஆதரவு



எது? எது? எது?

★ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? முன்னாள் ஆளுனர் பர்னாலா தி. மு. க. வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வது எதைக் காட்டுகிறது?

! தி. மு. க. ஆட்சிக் கலைப்பு என்பது கருணாநிதிக்கு மட்டுமின்றி பர்னாலாவுக்கும் இழைக்கப்பட்ட அநீதி என்பதை.

★ எஸ். யோகலிங்கம், சென்னை – 82.

? 'தமிழகத்தில் சமாஜ்வாடி ஜனதா கட்சியின் ஆதரவு இன்றி எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது' என்று சுப்பிரமணிய சுவாமி கூறியிருப்பது குறித்து?

! இன்னும் ஏழெட்டு நாட்கள்தான். அப்புறம் சு. சுவாமி காணாமல் போய் விடுவார். கவலைப்படாதீர்கள்.

★ சிவ. சீனிவாசன், கும்பகோணம்.

? மூப்பனார் தமிழக காங்கிரஸ் தலைவராக இருந்ததற்கும் வாழப்பாடியார் தலைவராக இருப்பதற்கும் என்ன வித்தியாசம்?

! சத்தியமூர்த்தி பவனுக்கும், போயஸ் தோட்டத்துக்கும் உள்ள வித்தியாசம்.

★ நாரம்புநாதன், கரண்டை.

? தேர்தல் சூடு அதிகமா? கோடை சூடு அதிகமா?

! பின்னதை விட முன்னது அதிகமாக இருப்பதால் பின்னதின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள முடிகிறது. இல்லாவிட்டால் வெய்யிலைப் பற்றிப் பேசிப் பேசியே மாய்ந்து போவோம். இப்போது தேர்தல் பிரசார வம்புகளைப் பேசுகிறோம்!

★ எஸ். ஸ்ரீனிவாஸகுமார், பண்ருட்டி.

? 'ஜெ' இரண்டு தொகுதியிலும் தோற்று விட்டால் என்ன ஆகும்?

! வேண்டாம் ஸார். தாங்க மாட்டார்!

★ ரூ. 20 பரிசு பெறுபவர்:
எஸ். மனோகரன்,
2/113, பூந்தோட்டத் தெரு,
சிக்கல் வழி, சங்கமங்கலம் – 611 108.

நான் காணும் கனவு!

ரூ. 50 முதல் பரிசுக் கட்டுரை

நான் காணும் கனவு பகற்கனவல்ல. அது எதிர்கால வாழ்வுக்கு அடிக்கல் நாட்டும் வளமான கனவு. சிறு வயதிலிருந்தே மருத்துவர் ஆக வேண்டும் என்பதே கனவு, ஆசை, லட்சியம் என்று எதை வேண்டு மானாலும் சொல்லலாம். அது இன்று ஓரளவு நிறைவேறியுள்ளது. முற்பட்ட வகுப்பில் பிறந்த எனக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பதே பெரும் பாடு. அதற்குக் கடுமையான உழைப்பு தேவைப்பட்டது. நன்கு படித்து, நல்ல மதிப்பெண்கள் பெற்றதால்தான் மருத் துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. கனவின் முதல் படி வெற்றி கிட்டியது.

சிறு குழந்தைகளின் கள்ளமில்லாச் சிரிப்பும், மழலையும் எனக்கு மிகவும் பிடிக்கும். ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளின் குழந்தைகளைப் படத்தில் பார்க்கும்போதே எவ்வளவு அழகாக இருக்கின்றன. கொழு, கொழு கன்னங்களும், துருதுருவென்ற பார்வையும் மனத்தைக் கொள்ளை கொள்கின்றன. நம் நாட்டுக் குழந்தைகளைப் பார்க்கும் போதே மனத்திற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எலும்பும், தோலுமான மெலிந்த தோற்றத்துடன், சோகம் நிறைந்த விழிகளுடன் இருக்கும் பரிதாபமான தோற்றம் வேதனை தருகிறது. நம் நாட்டில் குழந்தை வளர்ப்பில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அதனால்தான் எத்தனையோ இளம் மொட்டுக்கள் இளம் பிள்ளைவாதத்தால் கால் சூம்பிப் போயும், கண் கோளாறுகளைச் சரியாகக் கவனிக் காததால் பார்வை இழந்தும் காணப்படு கின்றனர். அதனால் குழந்தை மருத்துவம் பற்றிச் சிறப்புப் படிப்பு படித்துத் தாய்மார்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்பது என் அவா.

படித்து முடித்த பின்னர் ஒவ்வொரு கிராமமாகச் சென்று குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்ப்பது எப்படி என்று சொல்லித் தருவேன். குழந்தைகளுக்கு வரும் வியாதிகளுக்கு முன்னெச்சரிக்கை யாகத் தடுப்பு ஊசிகள் போடவும், வியாதி வந்து விட்டால் தகுந்த சிகிச்சை செய்யவும் முயற்சிகள் எடுப்பேன். சிறு வயதில் நன்கு கவனித்து வளர்க்கப்பட்ட குழந்தைகள் தாம் உடல் அளவிலும், மன அளவிலும் நன்கு வளர்ச்சி பெற்று ஆரோக்கியமாக இருக்கும். ஆரோக்கியமான குழந்தை களால்தான் அறிவையும் வளர்த்துக் கொள்ள முடியும். ஒவ்வொரு வீட்டிலும் ஆரோக்கியமான குழந்தைகள் இருந்தால் குழந்தை வளர்ப்பு சிரமமில்லை. கல்வி கற்பிப்பதும் எளிது.

ஒவ்வொரு தாயும், தன் குழந்தை, பருவத்திற்கேற்றபடி நடக்கிறானா, பேசுகி றானா, கவனிக்கிறானா என்று உன்னிப் பாகக் கவனிக்க வேண்டும். எதில் குறை தெரிந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகினால் என்ன குறைபாடு என்று தெரிந்து கொள்ளலாம். உடனடியாகச் சிகிச்சை கொடுக்கலாம். அதனால் தாய்மார்கள் விழிப்புணர்ச்சியுடன் இருந் தால் ஒவ்வொரு வீட்டிலும் ஆரோக்கிய மான, அறிவில் சிறந்த குழந்தைகள் உருவாகும். வளமான குழந்தைகள்தாம் நாடு வளம் பெறத் தேவையானவர்கள். வீட்டின் சந்தோஷத்தையும் அதிகப்படுத்து கிறவர்கள்.

வ. செந்தில் குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

அமெரிக்க மோகத்தை அடியோடு ஒழிக்க...


அமெரிக்காவுக்கு உயர் கல்வி பெறச் செல்வது இன்று ஒரு கௌரவப் பிரச்னையாகி விட்டது. உயர்கல்விக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் அங்கு குடியுரிமை பெற முயல்வது கவலைக்

குரியது. ஒவ்வொரு துறையிலும் திறமைசாலிகளை அப்படியே அமெரிக்கா அபகரித்துக் கொள்வதால் மறைமுகமாக அவர்களுக்குப் பல மில்லியன் டாலர்கள் லாபம் கிடைக்கிறது. அதோடு விஞ்ஞானத் துறையில் நாம் எப்போதுமே பத்துப் பதினைந்து ஆண்டுகள் பின்தங்கிப் போகும் அவலநிலை ஏற்படுகிறது.

'வசதியான வாழ்க்கை கருதிப் போக வில்லை; ஆராய்ச்சிக்குரிய வசதிகள் இங்கு இல்லை' என்பது தேசத்தை விட்டுச் செல்லும் விஞ்ஞானிகள் கூறும் காரணம். ஆனால் இன்று இந்த நிலை மாறி வருகிறது. இங்கு தொடர்ந்து போராடி வெற்றிக்கொடி நாட்டுபவர்கள் நிச்சய மாகத் தேசியப் பொக்கிஷங்களாகக் கொண்டாடப்படுவார்கள்.

நம் தேசத்தில் அமெரிக்க மோகத்தை அடியோடு ஒழிப்பதே என் கனவு. அதை நனவாக்க ஒரு சிறு துரும்பையாவது என்னால் அசைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதற்கு முதலில் நான் நாடு போற்றும் ஒரு விஞ்ஞானியாக மலர வேண்டும். அதற்கு இப்போதே ஓர் உறுதியான திட்டம் அவசியம். பாரதத்தில் ஏதாவது ஒரு ஐ. ஐ. டி.யில் உயர்கல்வி பெற்று, அங்கேயே ஆராய்ச்சியில் ஈடுபட்டு டாக்டர் பட்டம் பெற்று, நமது ஆய்வுக்கூடங்களில் நமது தேசத்திற்குப் பயன்படக்கூடிய விதத்தில் பணியாற்றத் திட்டமிட்டுள்ளேன்.

நான் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்துள்ள துறையானது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. மனித மூளைக்கு இணையான கம்ப்யூட்டர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகெங்கும் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதற்கு உயிரியலும் கம்ப்யூட்டர் இயலும் இணைந்த neural network என்னும் துறையில் அபிவிருத்தி அடைவது அவசியம். இந்தத் துறையில் ஈடுபட்டு என்னால் ஏதும் சாதிக்க முடிந்தால் அது இனிவரும் சந்ததியினருக்கு நமது தேசத்தின் விஞ் ஞானத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தி,





"பூமியின் சிரிப்பை
மலர்களில் காணலாம்!"
—எமர்ஸன்
—பாலா

அமெரிக்க மோகத்தை நீக்க உதவும் என்று உறுதியாக நம்புகிறேன். அதோடு விஞ்ஞான நிர்வாகத்திலும் பங்கேற்று விஞ்ஞானிகளுக்கு உகந்த இந்தியச் சூழலை உருவாக்கப் பாடுபடுவேன்.

மு. செந்தில்,
மூன்றாம் ஆண்டு,
கம்ப்யூட்டர் சைன்ஸ்,
மெப்கோ பொறியியல் கல்லூரி,
அர்னாத்தூர் போஸ்ட்,
சிவகாசி - 626 005

நண்பனாய், நல்லாசிரியனாய்....

தமிழ்த் துறையில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றுக் கல்லூரியில் பேராசிரியையாய்ப் பணியாற்ற வேண்டும் என்பதே என் ஆசை. ஆசிரியர் என்பவர் ஏட்டில் உள்ளதை மாணவர்களுக்குப் போதிப்பவர் மட்டும் அல்ல. அன்பு காட்டுவதில் அன்னையாய், ஒழுக்கப் படுத்துவதில் தந்தையாய், உற்ற நண்பனாய் விளங்கி மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இத்தகைய சிரமமான செயலை ஏற்று வெற்றி பெற நான் விரும்புகிறேன்.

ஆசிரியரிடம் உயர்ந்த மதிப்பு வைத்திருக்கும் மாணவர்கள், சில காலம் சென்று ஆசிரியரைப் பற்றிய பல விஷயங்களை - குறிப்பாக அவர் செய்யும் தவறுகளை - அறிய நேரும் பொழுது ஏமாற்றமடைகிறார்கள். ஆசிரியர்களை வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்காமல் நடந்து கொள்வதற்கு இதுவே காரணம். ஆசிரியரே தவறு செய்தால், மாணவர்கள் தவறு செய்யும் பொழுது தட்டிக் கேட்க முடியுமா?

நான் எத்தகைய உயர்ந்த ஆசிரியர் எனக்கு ஆசிரியராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேனோ அத்தகைய உயர்ந்த ஆசிரியரை என் மாணவர்களுக்கு நான் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் வலுப்பட்டிருக்கிறது. அதிலும் கல்லூரிப் பேராசிரியையாக வேண்டும் என்று நான் விரும்புவதற்குச் சிறப்பான காரணங்கள் உள்ளன.

''டீன் ஏஜ்''ஜின் இறுதி நிலையை எட்டியிருக்கும் கல்லூரி மாணவர்களின் மனநிலை விசித்திரமானது. வீட்டில் பெரியோர்களின் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஓர் இடைவெளி உண்டாகிறது. இந்த இடைவெளியை ஒரு நண்பனால் மட்டுமே இட்டு நிரப்ப முடியும். அந்த நண்பன் நல்லவனாய் ஓர் எடுத்துக் காட்டாய் இருக்க வேண்டியது அவசியம். மாணவர்களுக்குப் பாடம் நடத்தும் ஆசிரியரால் மாணவர்களின் உற்ற நண்பனாகவும் இருக்க முடியும். வெற்றி ஏற்படும் போது பாராட்டி, தோல்வி ஏற்படும் போது ஆறுதல் சொல்லி ஊக்கப்படுத்த வேண்டும். அவர்கள் தீயவழியில் சென்றால் மென்மையாக அதைச் சுட்டிக்காட்டி அவர்கள் மனத்தைப் புண்படுத்தாமல் தீய பாதையிலிருந்து அவர்களை மீட்க வேண்டும்.

பல்வேறு காரணங்களால் இன்று துரதிர்ஷ்டவசமாக ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நீண்ட இடைவெளி உருவாகி விட்டது. ஆசிரியர்களால் மாணவர்களிடம் தனிப்பட்ட அக்கறை காட்ட முடியாமல் போய் விட்டது. வழிகாட்ட ஆளில்லாமல் பல மாணவர்கள் தீய வழியில் சென்று அழிகிறார்கள். இந்தக் குறையை நீக்கி மாணவர் சமுதாயத்துக்கு என்னால் இயன்ற அளவில் உதவுவதே என் எதிர்கால லட்சியம்.

எஸ். சிவானந்தவல்லி,
பி.லிட்., (தமிழ்) முதலாமாண்டு,
அஞ்சல் வழிக்கல்வி,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்,
608002.

மாணவ எழுத்தாளர்களுக்கு...

விடுமுறைக் காலமாக இருப்பதால் கல்லூரி விலாசத்துக்கு அனுப்பப்படும் சன்மானம் திரும்பி விடுகிறது. எனவே, கட்டுரை பிரசுரமாகி முதல் பரிசோ, ஆறுதல் பரிசோ வரப் பெறாதவர்கள், வீட்டு விலாசம் குறிப்பிட்டு எழுதவும். நன்றி.



...கதக் நடன வகுப்பு

கடல் கடந்து கலை வளர்க்கும் 'பவன்'

அந்த சமஸ்கிருத கருத்தரங்கத்துக்கு நாட்டின் நான்கு திசைகளிலிருந்துப் அறிஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். மூன்று நாட்கள் கல்யாணம் போல நடந்தேறியது. ஒவ்வொரு நாளும் அரங்கம் நிரம்பி வழிந்தது. பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி சமஸ்கிருத மொழியின் பழுத்த, முது பெரும் ஆய்வாளர் — கௌரவித்துப் பாராட்டப்பட்டார். கருத்தரங்கின் முடிவில் சமஸ்கிருத நாடகம் அரங்கேறி ஏகோபித்த பாராட்டைப் பெற்றது...

— இவ்வளவும் நடைபெற்றது சென்னையிலோ பெங்களூரிலோ, டெல்லியிலோ அல்ல... லண்டன், பாரதீய வித்யா பவனில் தான்! 'பவனி'ன் லண்டன் கிளை பதிவாளர் மத்தூர் கிருஷ்ணமூர்த்தி. — 'மத்தூர்ஜி' என்று லண்டன் வாசிகளிடையே பிரபலமாகி விட்டவர். இந்தக் கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்து, வெற்றிகரமாக நடத்திக் காட்டிய குழுவின் தலைவர்.

மற்றவர்கள் ...

- மத்தூர்ஜியின் மனைவி — அலுக்காமல் சலிக்காமல் அண்டாக்களில் இந்திய உணவு தயாரித்து, பரிமாறி, உபசரித்தவர்.
- நந்தகுமார் — பவனின் கல்விப் பிரிவு இயக்குனராகவும் சமஸ்கிருத ஆசிரியராகவும் விளங்கிச் சுறுசுறுப்பாக சமஸ்கிருதம் வளர்த்துக் கொண்டிருப்பவர்.
- இன்முகத்துடன் வரவேற்று, ஒரு குட்டி இந்தியாவுக்குள் நுழைந்து விட்ட உணர்வை ஏற்படுத்தும் 'பவனி'ன் இதர ஊழியர்கள்.

லண்டன், பாரதிய வித்யா பவனுக்கு வரும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இந்தியக் கலைகளில் பரிச்சயம் வேண்டும் என்பதால் 'பவனை'த் தேடி வருவதாகச் சொல்கிறார்கள். குழந்தைகள் இசையும் நடனமும் கற்றுக் கொள்ளும் போது, தாயார் விட்டுப் போன வீணை வாசிப்பைத் தொடர்கிறாள். 'பவனி'ன் சூழ்நிலையில் மனச் சாந்தி கிடைப்பதாகக் கூறிக் கொண்டு அதற்காகவே வருவோரும் உண்டு.

சமஸ்கிருத வகுப்புக்களில் ஒலித்த



மத்தூர்ஜி



மனெக் தலால்

'கனீர்' இந்தியக் குரல்களை 'மழலை'யுடன் எதிரொலித்தன மேற்கத்தியக் குரல்கள். யோகாசனப் பயிற்சி வகுப்புகளிலும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலோர் மேற்கத்தியர் தான்.

பத்தடிக்குப் பத்தடி அறையில் பத்தொன்பது வருடங்களுக்கு முன் தன் பணிகளைத் துவங்கியது லண்டன், பாரதிய வித்யா பவன். தலைவர் மனெக் தலாலின் செல்வாக்கும் ஆற்றலும் மிக்க வழிகாட்டலில் வளர்ந்து, இன்று ஒரு சிறிய ஆல் விருட்சமாகத் தழைத்திருக்கிறது.

மகாத்மா காந்தி லண்டனில் மாணவராகப் பயின்ற காலத்தில் பாரன்ஸ் கோர்ட் சாலையில் இருபதாம் எண் கட்டடத்தில் தங்கியிருந்தார். அங்கு தங்கியபடி ஒவ்வொரு ஞாயிறன்றும் அருகேயிருந்த சர்ச்சுக்குப் போய் வணங்கியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இன்று பாரதிய வித்யா பவன் காந்திஜி தங்கிய இடத்துக்கு மிக அருகே சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. பவனின் வளாகத்திலேயே காந்திஜி வணங்கிய அந்த மாதா கோவிலும் அமைந்துள்ளது. 'மவுண்ட்பேட்டன் ஹால்' என்று பவனின் போஷகருடைய பெயரை இட்டு, அந்தச் சர்ச்சைக் கலையரங்கமாகப் பயன்படுத்தினாலும் அதன் புராதன அழகும், சரித்திரத் தொன்மையும் குலையாமல் காத்து வருகிறார்கள்.

'பவனி'ன் இன்றைய கட்டடத்துக்கு நன்கொடை வழங்கியவர்கள் தவிர, நிதி சேர்க்க யாமினி கிருஷ்ணமூர்த்தி, பி. கே. எஸ். அய்யங்கார், எம். எஸ். ஆகிய இந்தியக் கலைஞர்கள் நிகழ்ச்சிகள் அளித்து உதவியிருக்கிறார்கள். அவ்வப்போது இந்தியக் கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகள் வழங்கச் செய்து, லண்டன் வாசிகளின் வாழ்த்துக்களைச் சம்பாதித்துக் கொள்கிறது 'பவன்'. சமீபத்தில் பவனின் அழைப்பை ஏற்றுச் சென்று நிகழ்ச்சிகள் அளித்தவர்கள் பம்பாய் சகோதரிகள் — சரோஜா — லலிதா.

பவனின் ஜீவநாடி மத்தூர்ஜி. ஒளி வீசும் கண்களுடைய வட்டமான முகம். மிருதுவான குரலில் தேர்ந்தெடுத்த வார்த்தைகள் பேசி நிமிஷத்தில் நெருக்கமாகி விடுகிறார். 'உங்களைப் பார்த்து விட்டுப் போக வேண்டும் என்று தோன்றியது. அதனால் வந்தோம்' என்று லண்டனின் மறு கோடியிலிருந்து மலர்ச் செண்டுடன் இவரைப் பார்க்க வருகிறார்கள் நண்பர்கள். இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுத் திருப்தியுடன் திரும்புகிறார்கள்.

முன்னாள் பத்திரிகையாளர் மத்தூர்ஜி அமரர் . கல்கியின் 'அலை ஓசை'யைக் கன்னடத்தில் மொழிபெயர்த்த போது இலக்கிய உலகில் இடம்பிடித்துக் கொண்டார். பஸ்ஸில் டிக்கெட் கொடுக்கும் வேலை உட்பட எளிமையான பல வேலைகள் செய்து படிப்படியாக முன்னேறியவர்.

ஆதி நாளிலிருந்து இன்று வரை சமஸ்கிருதத்தைப் போஷித்து வரும் கிராமம் மத்தூர். (ஷிமோகா மாவட்டம், கர்நாடகா) அந்த கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தியின் புலமையும், காந்தியத்தில் அவருக்கிருந்த ஈடுபாடும் அவரை பாரதிய வித்யா பவனின் பெங்களூர் கிளைக்குப் பதிவாளராக நியமிக்க வழி வகுத்தன. அங்கிருந்து லண்டன் வந்தவர், காந்திஜியுடன் நெருங்கிய தொடர்புடைய ஸ்தலத்திலேயே தங்கிப் பணியாற்றி வருவது எவ்வளவு பொருத்தம்!

— சீதா ரவி

படங்கள்: மதன் அரோரா.

ஃப்ரிஜ் பரிசு: கூப்பன் நெ. 6

விஷயம் ரொம்ப சிம்பிள். 'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில் நாங்கள் ஒவ்வொரு வாரமும் வேண்டுமென்றே செய்து வரும் தவறைக் கண்டுபிடித்து ஒவ்வொரு வாரமும் கூப்பனைப் பூர்த்தி செய்து, கத்திரித்துப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். கதை முடியும் வாரம் எல்லாக் கூப்பன்களுடன் 5 - 10 வரி விமர்சனமும் எழுதி அனுப்பினால், ஆல் கரெக்டுக்கு, அல்லது அதிகபட்ச சரியான விடைக்கு ஃப்ரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு! இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்டுள்ள......

தவறு:

திருத்தம்:



பொறந்த வீட்டுப் பட்டுப் பொடவை

பக்கத்து வீட்டுப் பெண்ணுக்குச் சொல்ல வேண்டிய வசதியான கதை.

மனைவி இறந்ததும் மகள் மீது அப்பாவுக்கு வெறுப்பு. முகத்தையே பார்க்காமல் நிராகரிக்கிறார். சித்தியின் முரட்டு நடவடிக்கைகளைக் கண்டிக்கவும் தவறுகிறார். 'துரதிருஷ்டம் பிடித்த பெண்' என்ற கருத்து அவருக்கு. ஆனால், குழந்தை வீட்டுக்கு வந்ததும் ஐம்பது லட்சம் லாட்டரி பரிசு விழுந்ததைச் சுட்டிக்காட்டி, அது போலப் பல நல்ல காரியங்களை எடுத்துரைத்து, பெண்ணை 'அதிருஷ்ட தேவதை' என்கிறாள் பாட்டி. அவள் கட்சிக்கு வாரிசாகச் சித்தியின் மகனான தம்பி. பிறந்த வீட்டி விருந்து புகுந்த வீட்டுக்குப் போக, அவளுக்கு அங்கேயும் பிரச்னைகள், திட்டு, அதற்கு வாகான சம்பவங்கள், முடிவு.

நல்லவர்கள் அணி ஒருபுறமும், கொடுமைக்காரர்கள் மறுபுறம் என்று நியதி மீறாத இந்தச் சடுகுடு விளையாட்டின் நோக்கம், பெண்களிடம் ஒட்டுமொத்த அனுதாபத்தையும் திரள வைத்து விடுவது என்பதுதான். அதற்காகக் கதாநாயகி காலில் குத்தீட்டி முள், கையில் கத்தியல் அடி, கெரசின் சம்பவம், மாட்டுக் கொட்டகை வீடு, கொட்டும் மழையில் அலைய வைத்தல் என ஒவ்வொரு கொடுமையிலும் தலா ஒன்று வீதம் எடுத்துச் சேர்த்திருக்கிறார்கள்.

படம் நெடுக சிந்திக்கக் கூடாத, கேள்வி கேட்கக் கூடாத காட்சிகள் என்று ஒரு டஜன் இடங்கள் உண்டு. அவற்றைச் சமன்படுத்த அல்லது மறைக்கப் பாசமலர் காட்சிகள், சுரேஷ் - யமுனா முத்தமழை என்று அவ்வப்போது ஆறுதல் பரிசுகள்.

நவீன மாறுதல்களை அறியாத ஐம்பதுகள் பாணி இசை.

தோட்டங்களாகத் தேடிப் பிடித்த காமிரா.

தலைப்புக்கான சம்பந்தத்தைப் பற்றி பெரிசாய்க் கவலைப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை. ஒட்டுமொத்த சோகத்தை அமைத்து, முறுக்கிப் பிழிய வைப்பதுதான் முக்கியம். அதுவும் புறப்பட்டு வெளியே வருகிற நேரத்தில் கூட, மிச்சமீதி சோகத்தையும் வழித்தெடுத்துக் கொடுக்கும் முயற்சியாகத்தான், இறந்து போன அப்பா உயிருடன் வந்து குமுறும் காட்சி.

பெண்களைக் கவரும் பட்டிமன்றம்.

- சுந்தர்ஜி.

சிரிக்க வையுங்கள் ;
சிங்கப்பூர் செல்லுங்கள் !

காது குத்து விழா!

ஒரு அவுன்ஸ் தங்கத்தைக் கொண்டு முப்பது மைல் நீளத்துக்குக் கம்பியாக நீட்டலாம் என்றார் ஆசிரியர்.

குறும்புக்கார மாணவன் ஒருவன் எழுந்து, ''சார்... அ தை எங்கிட்டே கொடுங்க. நான் எழுபது மைலுக்குக் கம்பி நீட்டறேன்'' என்றதும் 'குபீர்'ச் சிரிப்பு!

--எஸ். கமலா சந்தானம், சென்னை - 53.

* * * * *



-- ஆ. நல்லமுத்து, திருநெல்வேலி - 7.



''முத்து நகை கேட்ட மனைவியிடம், 'உன் பல்லே முத்து முத்தாய்த்தானே இருக்கு; இன்னும் எ ன் ன முத்து நகை?'ன்னு கேட்டது தப்பாயிடுச்சி.''

''ஏன்?''

''கைச்செலவுக்குப் பணம் கேட்ட போது, 'உங்க எழுத்தே மணிமணி யாய்த்தான் இருக்கு; இன்னும் எதுக்கு மணி?'ன்னு சொல்லிட்டா!''

-- ஸி. வி. பத்மகுமார், மதுரை.

* * * * *

★ பல்லவன் பஸ்ஸில் எழுதப்பட்டிருந்த வாசகம்:

''வி. பி. சிங் வாழ்க! ராஜீவ் வாழ்க! கருணாநிதி வாழ்க! மு. க. ஸ்டாலின் வாழ்க! சந்திரசேகர் வாழ்க! அட முட் டாளே, நீ வாழ்வது எப்போது?''

-- எஸ் ஆறுமுகம், சென்னை - 94.

* * * * *

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி. முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.



சுவை நிறைந்த கேசரி நிமிடத்தில் தயாரிக்கலாம்.

மில்க்மெய்ட் கொண்டு தயாராகும் இந்த சுவை நிறைந்த கேசரியை உங்கள் குடும்பத்தினர் வெகுவாக விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

கேசரி

4–5 பேருக்கு

சமைக்க ஆகும் நேரம்: 15 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட்: ½ டின், ரவா: 1 கப்
நெய்: 150 கிராம் (¾ கப்)
தண்ணீர்: 2 கப், கேசரி பவுடர்: ¼ டீஸ்பூன்
முந்திரிப் பருப்பு: 8-10 (விரும்பினால்)
திராட்சை: 20 கிராம் (1½ டேபிள்ஸ்பூன்) (விரும்பினால்)

செய்முறை

1. வாணலியில் நெய்யை காய்ச்சவும்.
2. முந்திரிப் பருப்பையும், திராட்சையையும் பொன்னிறமாகும் வரை நெய்யில் வறுத்து தனியே எடுத்து வைக்கவும்.
3. நெய்யில் ரவாவை சேர்த்து பொன்னிறமாகும் வரை வறுக்கவும்.
4. இதோடு கேசரி பவுடர் கரைக்கப்பட்ட 2 கப் தண்ணீரை சேர்க்கவும். தொடர்ந்து கிளறி விடவும்.
5. தண்ணீர் உறிஞ்சப்பட்டவுடன் சூட்டை குறைத்து மில்க்மெய்டை சேர்க்கவும். நெய் துளிகள் வாணலியின் ஓரங்களில் படியும் வரை தொடர்ந்து கிளறிவிடவும்.
6. நெய் தடவிய தட்டில் ஊற்றவும். விரும்பினால் முந்திரிப் பருப்பையும் திராட்சையையும் தூவவும்.
7. சதுர வில்லைகளாகப் போடவும்.
8. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

விருந்தை பல செய்திட மில்க்மெய்ட்

இலவசம்
மில்க்மெய்ட் ரெசிப்பி புத்தகம்
அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019.
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



TS McCann/MM/191 TM

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு



பல தேசப்
ஸ்ப்ரிங்ஃப்ரெஷ்
பெருமைகளை
லாவெண்டர் மிஸ்ட்
முகத்திலே
க்ளாஸிக்
பிரதிபலிக்கும்
பேரெழில் பெண்மணி
கொண்டவை. மென்மையோ மென்மை. உலகிற்
சிறந்த நறுமணங்களின் கலவை. உங்கள்
முகத்திற்குப் பேரெழில் சேர்ப்பவை. பல தேசப்
பெருமைகளை விரும்புபவரன்றோ நீங்கள்!
Cuticura
Lavender Mist
Cuticura
Cuticura
Classic
Cuticura
International
BEAUTY TALCS